

# கலைவாணன்

(நாடகம்)





கலைமாமணி-கவிஞர்

கு.சா. கிருஷ்ணமூர்த்தி

வாழ்க செந்தமிழ்!

# கலைவாணன்

(புகழேந்திப் புலவர் நாடகம்)

ஆசிரியர்

## கு. சா. கிருஷ்ணமூர்த்தி

இயல் இசை நாடகமன்றப் பொருளுதவியோடு
வெளியிடப் பெற்றது

## முத்தமிழ்ப் பண்ணை

5, சாரதாபுரம், இரண்டாவது தெரு
மயிலை - சென்னை-600 004.

முதற்பதிப்பு—மார்ச் 1947
இரண்டாம் பதிப்பு - 1986
பதிப்புரிமை ஆசிரியருக்கே

**விலை—ரூ. 15-00**

விற்பனை உரிமை

பூங்கொடி பதிப்பகம்,
சித்திரைக்குளம் மேற்கு
மயிலை - சென்னை-4

---

நாவல் ஆர்ட் அச்சகம்
சென்னை-14
தொலைபேசி : 82731

# அணிந்துரை

## சிலம்புச் செல்வர்—டாக்டர். ம.பொ. சிவஞானம்

### தமிழ் வளர்ச்சி உயர்மட்டக் குழுத்தலைவர்

தமிழ் மொழி இயல் - இசை - நாடகம் என்ற மூன்று பகுதிகளையும் கொண்டதாகக் கருதப்படுகின்றது. இதனால், ''முத்தமிழ்'' என்ற பெயரையும் பெற்றிருக்கிறது. ஆயினும், தமிழில் நாடக நூல்கள் மிகவும் அரிதாகவே தோன்றி வருகின்றன. சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய முதல் நாடகக் காப்பியமாக உரையாசிரியர்களால் உணர்த்தப்படு கிறது. ஆயினும், அதுவும் காளிதாசன் படைத்த சாகுந்தலம் போன்று பாத்திரங்களையே பேச வைக்கும் நடிக்கும் காப்பியமன்று. ஒன்றிரு காதைகளைத் தவிர, மற்ற காதை களில் எல்லாம் ஆசிரியர் இளங்கோவடிகளே பேசுகிறார். ஆம்; காப்பியத்தைப் படிப்போர் கண்டு ரசிக்கத்தக்க காட்சி களாக அல்லாமல் காதைகளைக் கொண்ட கதையாகவே அமைந்திருக்கிறது. அண்மைக் காலமாகத்தான் சிலம்புக்குப் பின்னர் அந்த நிலையில் கூட நாடக இலக்கியங்கள் தமிழில் தோன்றவில்லை. இந்த நூற்றாண்டில் தான் ஓரளவு நாடகங்கள் தோன்றி வருகின்றன. அவையும் தமிழ் மக்களால் அதிகமாகப் போற்றப்படவில்லை. தமிழர் நாடகங்களைப் பார்ப்பதில் ஆர்வங்காட்டுவது போல நாடகங்களைப் படிப்பதில் ஆர்வங் காட்டுவதில்லை. தமிழில் நாடக நூல்கள் தோன்றாததற்கு மக்களுடைய மனோ பாவமும் ஒரு காரணமாகலாம்.

இத்தகைய சூழ்நிலையிலும் துணிந்து நாடகங்களை எழுதுபவர்களை நாம் பாராட்டவேண்டும். கவிஞர் கு.சா. கிருஷ்ண மூர்த்தி நாடகமேடை அனுபவமுள்ளவர். தாம் பெற்ற அனுபவத்தைக் கொண்டு நாடக நூல்களைப் படைக்கும் திறனைப் பெற்றிருக்கிறார்.

''அந்தமான் கைதி'' என்னும் பெயரில் அரிய நாடக மொன்றை அன்பர் கு.சா. கிருஷ்ணமூர்த்தி எழுதி, நாடக உலகில் பெயர் பெற்ற டி.கே.எஸ். சகோதரர் குழுவினரைக் கொண்டு நடிக்கச் செய்தார். அது திரைப்படமாகவும் தயாரிக்கப்பட்டு வெற்றிக்கொடி உயர்த்தியது.

''கலைவாணன்'' என்னும் பெயரில் கவிஞர் கு.சா.கி. எழுதிய இந்த நூலும் நாடக இலக்கியம் தான். ஆம்; பாத்திரங்களையே பேச வைத்து ஆசிரியர் மறைந்து விடுகிறார்.

புகழேந்திப் புலவருக்கும் ஒட்டக்கூத்தருக்குமிடையில் தோன்றி வளர்ந்து வந்த பூசலானது இந்நாடகத்திற்குக் கருப்பொருளாக எடுத்தாளப்பட்டுள்ளது. ''கலைவாணன்'' என்ற பெயரில் இந்நூல் அமைந்திருப்பினும் புலவர் புகழேந்தியையே நாடகத்தின் நாயகனாக ஆசிரியர் அமைத்துள்ளார். புகழேந்திக்கு கலைவாணன் என்ற மாற்றுப் பெயர் தந்ததற்கான காரணத்தை கவிஞர் கு.சா.கி ''என்னுரை''யில் தந்துள்ள முன்னுரையில் விளக்கியுள்ளார்.

புலவர் புகழேந்திக்கும், கவிச்சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தருக்கும் பூசல் இருந்ததாகச் சொல்லப்படுவது கட்டுக் கதைதான் என்று கருதுவோருமுண்டு. ஆனால், இந்த நாடகம் புகழேந்தியின் வரலாறு பற்றிய ஆராய்ச்சியல்ல. புகழேந்தியின் புகழைப் பரப்ப ஆசிரியர் விரும்பி அவரைப் பற்றி தமிழ் மக்கள் மத்தியிலே புலவர் பெருமக்களால் பரப்பப்பட்ட செய்திகளிலே புதுமையானவற்றைத்தொகுத்து நாடகமாக ஆக்கியுள்ளார். புகழேந்தி பற்றிய கட்டுக் கதைகளை வரலாறாக நம்பித்தான் இந்த நாடகத்தில சேர்த்தாரென்று கருதுவது தவறாகும்?

கவிஞர் கு.சா.கி. நாடகக்கலை பற்றி சென்னைப் பல்கலைக் கழகத்தில் அறக்கட்டளை சொற்பொழிவொன்று நிகழ்த்தி அதனை நூலாகவும் வெளியிட்டுள்ளார். அதனைப் படிப்போர் தமிழ் நாடகக்கலையின் வரலாற்றில் அவருக்குள்ள ஆராய்ச்சியறிவைப் பாராட்டுவார்கள்.

கவிஞர் கு.சா.கி. இந்நாடகத்தை எழுதிக் கொடுத்ததன் மூலம் இந்த அணிந்துரையின் தொடக்கத்தில் நான் கூறியபடி தமிழ் நாடக இலக்கியங்களின் எண்ணிக்கையைப் பெருக்க உதவி புரிந்திருக்கிறார்! அவருக்கு எனது பாராட்டு உரித்தாகுக.

**ம. பொ. சிவஞானம்**

# ஆய்வுரை

**டாக்டர் சிலம்பொலி சு. செல்லப்பன்**
**எம்.ஏ., பி.டி., பி.எல்., பிஎச். டி.**
**தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர்.**

''ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்'' என்ற தொடருக்கு வழங்கி வரும் செவிவழிக் கதையை, சில தனிப்பாடல்களுடன் இணைத்து அருமையானதொரு நாடகத்தைக் ''கலைவாணன்'' என்னும் தலைப்பில் இயற்றி யுள்ளார், கவிஞர் கலைமாமணி கு.சா.கி. அவர்கள்.

## இரட்டைத் தாழ்ப்பாள்—விளக்கம்

ஒட்டக்கூத்தர் பாடல்கள் பொருள்நலம் செறிந்தவை. மற்றையோர் பாடல் மாளிகையுள் நுழைந்து திளைக்க ஒரு தாழ்ப்பாளைத் திறந்தால் போதும்; கூத்தரின் பாடல் மாளிகையோ இரட்டைத் தாழ்ப்பாள்கள் கொண்டவை. இரண்டையும் திறந்தால்தான் உள் நுழைந்து மாளிகையின் எழிலைக் காணமுடியும். இக்கருத்திலேயே ''ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்'' என்ற மொழி எழுந்த தென்பர் அறிஞர். இவ்வாறிருக்க ஏனோ 'இத்தொடர் மேற்கண்டவாறான கதைக்கு இடமளித்துவிட்டது. இது எவ்வாறாயினும் ஆகுக: இக்கதையைக் கருவாக எடுத்துக் கொண்டுள்ள கவிஞர் கு.சா.கி. அவர்கள், நாடக இலக்கணமனைத்தும் பொருந்தி வர இதனை அருமையான தொரு நாடகமாக்கியிருக்கிறார்.

## நாடக நிலைகள்

நாடகங்கள் தொடக்கம், சிக்கல், உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு என ஐந்து நிலைகள் கொண்டவையாக இருக்க வேண்டும். இவற்றைப் பரிதிமாற் கலைஞர் தம் நாடக இலக்கண நூலில் முறையே முகம், பிரதி முகம், கருப்பம், விளைவு, துய்த்தல் எனக் குறிப்பிட்டுள்ளார். கீழ்க்காணும் வரைபடம் இதனைத் தெளிவுபடுத்தும்.

உச்ச நிலை
(கருப்பம்)

சிக்கல்
(பிரதிமுகம்)

தொடக்கம்
(முகம்)

வீழ்ச்சி
(விளைவு)

முடிவு
(துய்த்தல்)

குலோத்துங்கன், பாண்டியன் மகளை மணப்பது கதைத் தொடக்கமாகவும், புகழேந்தியை ஒட்டக் கூத்தர் சிறையிலிடச் செய்வது சிக்கலாகவும், குலோத்துங்கனின் மனைவி கதவைத் தாழிடுவதன் வாயிலாகப் புகழேந்தியைச் சிறை விடுதலை செய்வது உச்சமாகவும், இதன் பின்னர்ப் புகழேந்தியின் பெருமை ஓங்குவது விளைவாகவும், இறுதியில் இரு புலவர்களும் ஒருவர்க்கொருவர் வேறுபாடற்று இணைந்து சமநிலையில் நிற்பது முடிவாகவும் அமைந்து இந்நாடகம் சிறக்கிறது. நாடக இலக்கணத்திற்கேற்ப ஐந்து நிலைகளையும் பொருத்தமுற அமைத்து ஆசிரியர் வெற்றி கண்டுள்ளார்.

## சுவைகள்

உள்ளத்து நிகழ்ச்சியைப் பிறர்க்குப் புலப்படுத்துவது இயற்றமிழின் தன்மை; மொழிப் பொருளோடு இசையுஞ் சேர்ந்து நிற்க மனக் குறிப்பினை வெளிப்படுத்துவது இசைத் தமிழின் தன்மை; மொழிப்பொருள், இசை என்னும் இரண்டினோடு அவிநயமும் சத்துவமும் சேரவைத்து உள்ளத்தெழுந்த மனக்குறிப்பினைப் பிறர்க்குப் புலப் படுத்துவது நாடகத் தமிழின் தன்மை'' எனக் குறிப்பிடுகிறார் விபுலானந்த அடிகள். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை எனும் எண் சுவையோடு சமநிலையையும் கூட்டிச் சுவை ஒன்பது என்பர் அறிஞர். இந்நாடகத்தில் புகழேந்தியின் உரைகள் பெருமிதச் சுவைக்கும், கூத்தரின் செயல்கள் இளிவரல் சுவைக்கும், குலோத்துங்கன் - குணவதி திருமணம் உவகைச் சுவைக்கும், ஒட்டக்கூத்தரால் தம் தலை வெட்டப்படுமோ எனப் புலவர் கள் நடுங்குவது அச்சச் சுவைக்கும், அரசி தாளிடுவது வெகுளிச் சுவைக்கும், கதவு தாளிடப்பட்டது கண்டு மன்னன்

திகைப்பது மருட்கைச் சுவைக்கும், விகடகவியின் பேச்சு நகைச் சுவைக்கும் ஏற்ற இடங்களாக அமைந்துள்ளன.

## கதை மாந்தர் படைப்பு

நாடகத்தின் வெற்றி அதன் கதை மாந்தர்களைப் படைக்கும் திறத்தைப் பொருத்ததேயாம். 'கலைவாணன்' என்னும் இந்நாடகத்தில் உள்ள கதை மாந்தர்களின் பண்பு களும் செயல்களும் நாம் நாள்தோறும் வாழ்க்கையில் கண்டு வருபவைகளே. கதை மாந்தர்களைப் பொருத்தமாகவும், வேண்டிய அளவிலும் படைத்ததன் வாயிலாக சிறந்த நாடகாசிரியர் எனும் நிலையை இந்நூலாசிரியர் பெறுகிறார். இந்நாடகத்தின் மாந்தர்கள் அனைவரும் மனித இயல்புகளை உணர்த்தும் வகையில் படைக்கப்பட்டிருப்பது பாராட்டுக் குரியது.

தலைவன், தலைவி, முரணர் என்பார் கதையின் தலைமைமாந்தர்களெனவும், இவர்களுடைய செயலுக்குத் துணை நின்று கதை வளரக் காரணமாயிருப்போர் துணை மாந்தர்கள் எனவும் அழைக்கப்படுவர். இக்கதையின் தலைவனாகப் புகழேந்திப் புலவர் படைக்கப்பட்டுள்ளார். பொதுவாகத் தலைவன், தலைவியர் சிறந்த பண்புகளைப் பெற்றவர்களாகப் படைக்கப் பெறுகின்றனர். தீய பண்பு களைக் கொண்டவர்களாகவும் முதன்மைக் கதை மாந்தருடன் மாறுபடுவதன் வாயிலாக நாடகச் செயலோட்டத்தை ஊக்குவிக்கும் சக்திகளாகவும் முரணர்கள் (villains) விளங்குவர். அவ்வகையில் இந்நாடகத்தில் 'முரணனாக' விளங்குபவர் ஒட்டக்கூத்தரே! முரணர்கள் திருந்தாமலேயே அழிவது பெரும்பான்மை நாடகங்களில் காணப்படும். இந்நாடகத்திலோ கூத்தர் முதலில் முரணராக இருந்தபோதிலும் இறுதியில் மனந் திருந்தி நாடகத்தலைவன் நிலைக்கு உயர்ந்து விடுகிறார்! பாண்டிய மன்னன், குலோத்துங்கன், பாண்டிய மன்னன் மகள் ஆகியோர் தலைமை மாந்தர்கள் நிலையில் விளங்குகின்ற முக்கியத் துணை மாந்தர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். துணை மாந்தர்களும் தலைமை மாந்தரையொப்பப் படைக்கப்பட் டிருப்பதும், முரணர் கதைத் தலைவராகும் நிலைக்கு உயர்த்தப்பட்டிருப்பதும் இந்நாடகக் கதை மாந்தர் படைப்புகளின் தனிச் சிறப்புகளாகும்.

## மாந்தர் பெயர்

நாடகக் கதை மாந்தர்களின் பெயர்களை உருவாக்குவதிலும் பொதுவான சில போக்குகள் தென்படுகின்றன. கதை மாந்தர்களின் நற்பண்பு நற்செயல்களுக்கேற்பவும், தீய பண்பு தீய செயல்கட்கேற்பவும் பெயர்கள் சூட்டப் பெறுகின்றன. பாண்டிய மன்னன் மகள் குணவதி எனவும், பாண்டியன் மனைவி புனிதவதி எனவும், பாண்டிய சோழ நாட்டு அமைச்சர்கள் முறையே மதிவாணன், உதயணர் எனவும் பெயர் சூட்டப்பட்டுள்ளமை மேற்சொன்ன பொதுப் போக்கை ஒட்டியதாக இருக்கக் காணலாம்!

## நாடகத் தொடக்கம்

புலவர் ஒருவர் புகழேந்தியைப் போற்றிப் பேசுவதும், மற்றொருவர் "அப்படியென்ன அவர் மட்டும் உயர்ந்தவர்" எனக் கேட்பதுமாக முதற்காட்சி தொடங்குகிறது. புகழேந்தியின் புகழும் அதனைப் பொறாதார் கொள்ளும் அழுக்காறும் கதையின் போக்காய் அமையவிருப்பதை நாடகத்தின் இம்முதற் காட்சியே நமக்குக் குறிப்பால் உணர்த்திவிடுகிறது. "தொடக்கக் காட்சி நாடகத்தின் வளர்ச்சிக்கான சூழலைத் தோற்றுவிப்பதோடு நாடகத்தைப் பார்ப்போரின் அல்லது படிப்போரின் உள்ளத்தே அந் நாடகத்தின் மையக்கருத்தைப் படியச் செய்வதாய் அமைய வேண்டும்" என்னும் நாடக இலக்கண அறிஞர் டாசன் (Dawson) கூற்றுக்கிணங்க இந்நாடகத்தின் முதற் காட்சியை ஆசிரியர் அமைத்திருப்பது அவரது நாடகமியற்றுந் திறனை நன்கு புலப்படுத்துகிறது.

## குறிக்கோள்

நாடகம் ஒரு குறிக்கோளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

"புலவர்கள் பிற புலவர்களைக் கண்டு அழுக்காறு கொள்ளக் கூடாது; அஃது அழிவையே தரும்; மாறாகப் புலமையாளர்கள் தம்மைச் சார்பவர்களையும் புலமையாளர்களாக்கி ஊக்குவிக்க வேண்டும்; புலமை இணக்கமே 'பெருமையைத் தரும்" எனும் குறிக்கோளைச் சொல்லவே கலைவாணன்' என்னும் இந்நாடகத்தை ஆசிரியர் படைத்துள்ளார். "கலைவாணர் 'என்.எஸ். கிருஷ்ணன்' மீது

கொண்ட பொறாமையல்லவா அக்கலைமணியைச் சிறைச் சாலையில் அடைக்கச் செய்தது'' என்பதை நினைந்த ஆசிரியர்க்கு உடனே பொறாமையின் விளைவால் புகழேந்தி சிறைப்பட்ட இக்கதை நினைவுக்கு வந்து, உருவாகியிருக் கிறது. ஆகவேதான் இந்நாடகத்துக்குக் 'கலைவாணன்' என்ற பெயரையே சூட்டியுள்ளார். ''புலமைக் கதிரொளியை பொறாமைப் பனிமூட்டம் தடுத்துவிடமுடியாது'' என்பதைக் கூறவே, இந்நாடகம் படைக்கப்பட்டதாக ஆசிரியரே தன் உரையில் கூறியுள்ளது இந்நாடகத்தின் குறிக்கோளைத் தெளிவாக்குகிறது.

## ஒரு நெருடல்

பண்பு நிறைந்தவராகப் படைக்கப் பெற்றுள்ள புகழேந்தியார் இறுதியில் கொலை எண்ணம் கொண்டதாக ஒரு காட்சி வருகிறது. என்னதான் தன் புலமையைக் கூத்தர் இகழ்ந்தாலும் அவரைக் கொல்லத் துணிந்தவராய்ப் புகழேந்தி சென்றார் என்பது சற்றே நெஞ்சை நெருடுகிறது. அவருடைய பெருமிதமான படைப்பில் ஒரு கீறல் விழுந்தது போலத் தோன்றுகிறது. அக்காட்சியை வேறு ஏதாவது வகையில் ஆசிரியர் மாற்றியமைத்திருக்கலாம் எனச் சொல்லத் தோன்றுகிறது.

காட்சி அமைப்பு, கதை மாந்தர் படைப்பு, உரையாட லமைப்பு ஆகியவற்றைத் தக்க முறையில் அமைத்து ஆசிரியர் சிறந்ததொரு நாடகத்தைத் தந்துள்ளார். இந்நாடக ஆசிரியர் இயல் வல்லாராகவும், இசைப்புலவராகவும் சிறப்புற்றிருப்பதால் இம் 'முத்தமிழாசான்' முத்தமிழிலும் இன்னும் பல நூல்களைத் தந்து தமிழுக்கு அணி சேர்க்க வேண்டுமென உளமார விழைந்து வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

**சு. செல்லப்பன்**

# முதற் பதிப்பின் முன்னுரை

**நாரண-துரைக்கண்ணன்**
**(ஆசிரியர் : பிரசண்ட விகடன்)**

'புகழேந்தி' என்றதும், தமிழ் அறிஞர்களுக்கு அரும் பொருட் செறிவும், சொல்வளமும் பாநயமும் பொருந்திய 'நள வெண்பா'' என்ற அழகிய காவியம் தான் நினைவில், முன் வந்து நிற்கும். புகழேந்தி என்ற பெயருடன் ஒரு பெரும் புலவர் இருந்திருக்கிறார் என்பதற்கு இச்சிறந்த சிறு காவிய மொன்றே சான்றாக நின்று நிலவுகிறது.

சாதாரணமாக, நாற்சீரும் முச்சீரும் நடுவே தனிச்சீரும் கொண்ட வெண்பாவில் காவியம் இயற்றுவதென்பது சாமானியச் செயலன்று. நம் தமிழ் இலக்கியத்தைச் சிறப் பிக்கும் பெருங்காவியங்களும் சிறு காவியங்களும் அகவற்பா விலும், விருத்தப்பாவிலுமே பெரும்பாலும் இருக்கின்றன. வெண்பாவினாலான காவியம் நள வெண்பா ஒன்று தான்.

இவ்விதம் மிகக் குறுகிய அடிகளையுடைய வெண்பாவில் பொருள் வளம் பொதுள அழகிய காவியம் இயற்றிய வகை யில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவாறு நுண்ணறி வில் சிறந்து விளங்கியமையால்தான் 'வெண்பாவில் புக ழேந்தி' என்று புலவர்கள் சிறப்பித்துப் பேசுவாராயினர்.

இத்தகைய சிறந்த காவியத்தை இயற்றியவர் தாமா அல்லி அரசாணி மாலை, பவழக்கொடி மாலை, புலந்திரன் களவு மாலை முதலிய அம்மானைப் பாடல்களைப் பாடியிருப் பார்? என்று பாவகைகளின் தராதரங்களை அறிந்தவர்கள் எவரும் ஐயுறுவது இயற்கை. பெரும்புலவனா யுள்ளவன் ஒருவன், தம்மொத்த புலவர் வியக்குமாறு உயர்ந்த இலக்கிய நடையிலும் நூல்கள் இயற்ற முடியும்; பாமர ரஞ்சகமாக வும் செம்பாக நடையில் நூல்கள் இயற்றக்கூடும் என்பது உண்மை; ஆனாலும் அப்புலவனுக்குரிய இதய பாவமும் கற்பனைகளும் சொற்பிரயோகங்களும் அவ்விரு வித நடையி லும் விரவிக் காணப்படுமாதலால் அப்பொது இயலை அல்லது

தன்மையைக் கொண்டு இருவகைப்பட்ட நூல்களையும் ஒரு புலவனே இயற்றியிருக்கிறான் என்று அறிஞர்கள் அறிந்து கொள்ளக்கூடும். அப்படிப் பார்க்கும்போது, நளவெண்பாவுக்கும் அல்லி அரசாணி மாலை போன்ற அம்மானைப் பாடல்களுக்கும் பா நயத்திலோ, சொல் அமைப்பிலோ பொருள் வளத்திலோ எவ்விதத்திலும் ஒற்றுமையிருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, நள வெண்பாவை இயற்றியவரும் அம்மானைப் பாட்டுக்களைப் பாடியவரும் ஒருவராயிருக்க முடியாது. 'நளவெண்பா' பாடிய புகழேந்திப் புலவரின் பெயரால் பின் வந்த யாரோ ஒரு புலவன் அம்மானைப் பாடல்களைப் பாடி உலவ விட்டிருக்கிறான் என்ற முடிவுக்கே நாம் வரவேண்டியிருக்கிறது. ஏனென்றால், தமிழ் மொழியை வளம்படுத்திய **அகத்தியர்** என்னும் பெரும் புலவரிலிருந்து **ஔவையார்** வரை 'Duplicate' புலவர்கள் பலர் இருந்து பிற்கால இலக்கியத்தில் சொல்லூடாட்டம் பல செய்திருக்கின்றனர் என்பது ஆராய்ச்சியறிவுடையோர் அறிவர்.

'நள வெண்பா' இயற்றிய புகழேந்திப் புலவரின் பெயர்த் தன்மையைப் பார்க்கையில் இது இயற்பெயரா யிருந்திருக்க முடியாது; புகழுக்குரியவர் என்ற பொருளுடைய காரணப் பெயராய்த்தான் இருக்கவேண்டும் என்று தெரிகிறது. புகழேந்திப்புலவர் வாழ்ந்ததற்குரிய சரித்திரச் சான்றுகள் சரியாகக் கிடைக்கவில்லையாயினும் இரண்டாவது குலோத்துங்கச்சோழன் காலத்தில் அவர் வாழ்ந்திருக்கிறார் என்று தெரிகிறது. எப்படியென்றால், குமார குலோத்துங்கச் சோழனின் ஆஸ்தானப் புலவரான ஒட்டக்கூத்தருக்கும் புகழேந்திப் புலவருக்கும் புலமைப்போர் நடந்திருக்கிறது. என்ற வரலாற்றிலிருந்து இது அறியக் கிடக்கிறது. ஆனால், நம் நாட்டில் இவ்விரு பெரும் புலவர்களைக் குறித்து உலவும் கதைகளைப் பார்த்தால் இவ்வளவு பெரிய புலவர்களா பேதமையே உறவாகவுடைய சாதாரண மக்களைப் போல், பொறாமையால் பூசல் விளைத்திருப்பார்கள்? என்று எண்ணத் தோன்றுகிறது. இக்கர்ண பரம்பரைக் கதைகள் உண்மையாயிருக்க நியாயமில்லை. பிற்காலத்திலிருந்த சாதாரணப் புலவர்கள் தங்கள்பால் குடி கொண்டிருந்த சிறுமைக் குணங்களை இப்பெரும் புலவர்கள் மேலேற்றிச் சித்திரித்திருக்கிறார்கள். பிற்காலப் புலவர்களுக்குத் தங்கள் கற்பனா சக்தியைக் கொண்டு இது போன்ற பொய்க் கதை

களைச் சிருஷ்டிப்பதில் ஒருவித உற்சாகமிருந்திருக்கிறது என்பது 'புலவர் புராணம்', 'தமிழ் நாவலர் சரிதை' 'விநோதரச மஞ்சரி' போன்ற நூல்களைப் பார்க்கையில் தெரிகிறது. 'தக்கயாகப் பரணி' போன்ற உயர்ந்த நூலை இயற்றிய ஒட்டக்கூத்தரைச் சாதாரணப் பொறாமைப் புலவனாகச் சித்திரித்திருப்பது சிறிதும் அடாது என்பதே என் அபிப்பிராயம். எனவே, இது போன்ற பொய்க்கதைகளை மறந்துவிட்டுத்தான், மேற்குறித்த பெரும் புலவர்களின் அரும் பெரும் காவிய நூல்களை நாம் படித்து மகிழ்ந்து நல்லறிவு பெறவேண்டும்.

நண்பர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி புகழேந்திப் புலவரைக் குறித்துக் கர்ண பரம்பரையாக வழங்கிவரும் கதைகளைப் பெரிதும் தழுவியே இந்நாடகத்தை இயற்றியிருக்கிறார்; ஆயினும் சரித்திர நாயகரான புகழேந்திப் புலவருடைய நற்குணப் பண்புகள் நாடகத்தில் நன்கு விளங்குவதற்காகக் கதைப்போக்கில் சிற்சில மாறுதல்களைப் பொருத்தமாகச் செய்திருக்கிறார். அத்துடன் ஒட்டக்கூத்தரையும் நாடக முடிவில் உயர்ந்த குணச் சித்திரமாக்கியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. நாடக உலகில் நீண்டகால அனுபவமுள்ள ஆசிரியர் கு. சா. கி. புகழேந்திப் புலவர் போன்ற ஒரு சாதாரணப் புலவருடைய கதையை நாடக அரங்குக்கு ஏற்ற முறையில் கவர்ச்சிகரமாக அமைத்திருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனாலும் காட்சிகளின் அமைப்பையும் வசன அமைப்பையும் மிக அழகாக அமைத்திருக்கிறார் என்பதை இங்கு குறிப்பிட்டுப் பாராட்டாமலிருக்க முடியவில்லை.

தமிழில் நல்ல நாடகங்கள் அதிகமாக இல்லை என்ற குறையை நண்பர் கு. சா. கி. இது போன்ற பல நல்ல நாடகங்களை எழுதி உதவுவதன் வாயிலாகப் போக்குவாராக.

'கலைவாணர்' நாடகத்துக்கு அணிந்துரை எழுதுவதற்கு வாய்ப்பளித்த நண்பர் கு. சா. கி. அவர்களை நான் என்றும் மறக்கமுடியாது.

நாடகக் கலைஞர்கள் இக்"கலைவாணன்" நாடகத்துக்கு நல்வரவேற்பு அளிப்பார்களாக.

**நாரண துரைக்கண்ணன்**

# என்னுரை

எனது முதல் நாடகம் ''அந்தமான் கைதி'' 1945-ல் டி. கே. எஸ். குழுவினரால் அரங்கேற்றப் பெற்று இமாலய வெற்றியை ஈட்டித் தந்தது.

''கலைவாணன்'' எனது இரண்டாவது நாடகம். எனினும், இதற்குப் பிறகு எழுதிய ''என் காணிக்கை'' நாடகம் தஞ்சையில் திரு கே. ஆர். ராமசாமி அவர்களின் கிருஷ்ணன் நாடக சபையாரால் வெற்றிகரமாக நடிக்கப் பட்டதற்குப் பிறகு வெகுநாட் கழித்து 1947-ல் கலைவாணன் நூலாக வெளியாயிற்று.

சுமார் மூன்றாண்டுகளுக்கு முன்பு ஒருநாள் உடுமலை திரு நாராயண கவி அவர்களின் யோசனை, நகைச்சுவை மன்னரின் விருப்பம், அரங்கமேடை அகத்தியர் திரு டி. பி. பொன்னுசாமி பிள்ளை அவர்களின் வேண்டுகோள் இவற்றின் விளைவாக என். எஸ். கே. நாடகக் குழுவினருக் காக இந்நாடகத்தை உருவாக்கினேன். ஆனால் நாடகம் உருவாக்கப்படுமுன் காலமும் கயவர்களின் பொறாமைச் செயல்களும் செய்த சதியால் கலைமணிகள் காவற் சிறையில் அடைக்கப்பட்டனர்.

அன்று எந்தச் சட்டத்தின் பேரால் குற்றவாளிகளென்று நிரூபித்து ஆயுள் தண்டனை விதித்துச் சிறைக்குள் தள்ளிச் சீரழிக்கப்பட்டதோ, அதே சட்டத்தின் பேரால் இன்று இரண்டரை ஆண்டுச் சிறைவாசத்திற்குப் பிறகு அவர்கள் நிரபராதிகளென்று தீர்ப்புக் கூறி விடுதலையாயினர்.

புலமைக் கதிரொளி புலர்ந்தது. பொறாமைப் புகைப்பனி அழிந்தது. புடம் போடப்பட்ட பொன் மேலும் மாற்று உயர்வது இயற்கைதானே! ஆம்; சிறைக்குள் தள்ளப்பட்ட போது நகைச்சுவை மன்னனாக மட்டும் மதிக்கப்பட்ட திரு என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் விடுதலை செய்யப்படும் போது **கலைவாணராகத்** திகழ்ந்தார்.

தலைநகரிலே கலைஞனை அழைத்து அறிஞர்கள் பலர் நடுவே "கலைவாணர்" என்ற பட்டத்தைச் சூட்டினர். சிறைக்குப் பின் சிறப்பு! இந்நாடகத்தின் கருத்தும் இதுதான்.

புலவரென்ற காரணத்தால் பொறாமை கொண்டு புகழேந்தியாரைச் சிறையிலிட்டுத் துன்புறுத்திச் சீரழித்த கவி ஒட்டக்கூத்தரே, பின்னொரு காலத்தில் அவருடைய புலமைத்திறத்தை வியந்து போற்றினாரல்லவா! அதைப் போலவே தான் நண்பர் என் எஸ். கே. அவர்களின் வாழ்க்கையிலும் நிகழ்ந்தது. ஆகவே நிகழ்ச்சிப் பொருத்தத்தின் நினைவு காரணமாக இந்நாடகத்திற்கு "கலைவாணன்" என்ற பெயரையே சூட்டியிருக்கிறேன்.

புகழேந்திப் புலவரின் வரலாறு குறித்துப் பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் உண்டு. எனினும், உலகியல் அனுபவங்களுக்கு ஒத்த முறையில் இதைச் சித்தரித்திருக்கிறேன். "அந்தமான் கைதி", "என் காணிக்கை" ஆகிய நாடகங்களுக்கு அளவற்ற ஆதரவளித்த தமிழகம் "கலைவாணனை" யும் கண்டு களித்து ஊக்குவிக்குமென்ற நம்பிக்கை எனக்குண்டு.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு "கலைவாணன்" இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது.

இப்பதிப்பிற்கு சிலம்புச் செல்வர்- டாக்டர் திரு ம. பொ. சி. அவர்களின் அணிந்துரையும், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் திரு சு. செல்லப்பனார், அவர்களின் ஆய்வுரையும், திரு நாரண துரைக்கண்ணனார் அவர்கள் முதற்பதிப்பிற்கு அளித்த முன்னுரையும், இந்நூலுக்கும் எனக்கும் பெருமை சேர்ப்பனவாகும் என்பதை நன்றியுடன் கூறிக் கொள்ளுகின்றேன்.

நிறை புலமை பெற்ற கூத்தர் இவ்வாறு அழுக்காறு கொண்டவராக இருந்திருப்பாரா? என்பது வினா? ஆனால், பொதுவாகப் புலமையாளர்களின் போக்கே இப்படித்தான்

இருக்கிறது என்பதுதான் அனுபவ உண்மை. "நளவெண்பா" வை இயற்றிய புகழேந்தி எளிமையான அம்மானைக் கதை களை இயற்றி இருப்பாரா? இது வினா? சிறைத் தோழர் களாகிய இளங்கவிஞர்களின் தேவைக்காக - அவர்களைக் கொண்டே- படிப்பறிவற்ற பெண்களும் கவர்ச்சியடையுமாறு இவ்வம்மானைக் கதைகள் உருவாகியிருக்கக் கூடும் என்பதே எனது அனுமானம்.

குட்டக் குட்டக் குனிவதோ - குனியக் குனியக் குட்டுவதோ மனித இயல்பல்ல. புகழேந்தியின் முனிவுக்கு இதுவே என் விளக்கம்.

சிலப்பதிகாரத்திற்கு முன் நாடக இலக்கியங்களே இல்லை என்று கருத்து அவ்வளவு சரியானதாக எனக்குப் படவில்லை. பொருநர், கூத்தர், விறலியர் போன்ற நாடகக் கலைஞர்கள் இருந்ததற்கான குறிப்புகள் சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் மதிவாணர் நாடகத் தமிழ் என்ற நூலிலும், மதங்க சூளாமணி என்ற நூலிலும், குறிப்பாகத் திருக்குற ளிலும் நாடகம் பற்றிய பல குறிப்புகளைக் காணுகின்றோம். பண்டைய நாடக இலக்கியங்களைத் தமிழர்கள் போற்றிக் காக்கத் தவறி விட்டனர் என்பதே சரியான கருத்தாகும்.

இந்நூல் வெளியீட்டிற்கு மானிய உதவி வழங்கிய இயலிசை நாடக மன்ற நிருவாகத்தினருக்கும், அழகுறப் பதிப்பித்தளித்த நாவல் ஆர்ட் அச்சகத்திற்கும், ஓவியர் முத்து அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக!

தமிழ் வாழ்க!

5, சாரதாபுரம்
சென்னை-4
20-12-1986

அன்புடன்
**கு. சா. கிருஷ்ணமூர்த்தி**

# நாடக மாந்தர்கள்

| | |
|---|---|
| புகழேந்திப் புலவர் | — பாண்டியனின் அரசவைப் புலவர் (கதா நாயகர்) |
| ஒட்டக் கூத்தர் | — குலோத்துங்கச் சோழனின் அரசவைப் புலவர் |
| குலோத்துங்கன் | — சோழநாட்டின் மன்னன் |
| குணவதி | — குலோத்துங்கனின் பட்டத் தரசி |
| குமுதவல்லி | — குணவதியின் தோழி |
| வஜ்ஜிராங்கத பாண்டியன் | — பாண்டியநாட்டு மன்னன்; குணவதியின் தந்தை |
| புனிதவதி | — குணவதியின் தாய்; பாண்டியன் மனைவி, |
| உதயணர் | — சோழநாட்டு அமைச்சர் |
| மதிவாணர் | — பாண்டிய நாட்டு அமைச்சர் |
| சந்திரன் சுவர்க்கி | — முரணை நகர் மன்னன் |
| தேவி | — கூத்தரின் மனைவி. |
| ஔவையார் | — தமிழ்ப் புலமை மிக்க மூதாட்டி |
| விகடகவி | — புகழேந்தியின் நண்பர். |
| குணசீலர் | — முரணைநகர் அவைக்களப் புலவர் |

குலாலர், மருத்துவ குலத்தவர், கருமார், பொற்கொல்லர், மரவேலைக் காரர், வேளாளர், சலவைத் தொழிலாளர் ஒட்டக்கூத்தரால் சிறையிடப்பட்டிருந்த புலவர்களில் சிலர் மற்றும்—புலவர்கள், பொதுமக்கள், பெண்கள், காவலாளர் கள்.

## கதை நிகழுமிடம்

| | |
|---|---|
| மதுரை | — பாண்டியன் தலைநகர். |
| உறையூர் | — சோழன் தலைநகர். |
| முரணை நகர் | — தமிழ் நாட்டின் ஓர் சிற்றரசு. |

**காலம் :-** கி. பி. 1118-முதல் சுமார் 1160-ஆண்டுகளுக்குள் என்பது சரித்திர ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

உ

வாழிய செந்தமிழ்!

# கலைவாணன்

## காட்சி—1.

**இடம்**:-மதுரையிலுள்ள ஒரு முக்கிய வீதி. **காலம்**:-மாலை.

(புலவர்களும் பொதுமக்களும், புகழேந்திப் புலவரின் வருகையைக் குறித்து மகிழ்ச்சியோடு பேசிக் கொள்ளுகிறார்கள்.)

1 வது புலவர்:- என்னையா விஷயம்! எல்லோரும் ஏகக் குதூகலத்துடன் கிளம்பிவிட்டீர் போலிருக்கிறதே!

2 வது புலவர்:- ஆமாம். குதூகலப்படவேண்டிய நாள் தான் இது. புகழேந்திப் புலவரைப் போன்ற ஒப்பற்ற பெரியார்களைத் தரிசிக்கும் நாள் நமக்கெல்லாம் திருநாளல்லவா?

3 வது புலவர்:- தடையென்ன! இனி நம்பாடு வேட்டைதான். கொஞ்ச நாளைக்கு இலக்கிய விருந்துக்குப் பஞ்சமே இல்லை.

1 வது புலவர்:- ஏனையா! இவர் எந்த ஊர், என்ன இனத்தைச் சேர்ந்தவர் என்ற விபரம் ஏதேனும் உங்களுக்குத் தெரியுமா?

2 வது புலவர்:- படித்தவர் எந்த இனத்தைச் சேர்ந்தவராயிருந்தாலென்ன ஐயா? இங்கே கூடவா உமது சமய வாதத்தைக் கிளப்ப வேண்டும்.

க—2

1 வது புலவர்:- வாதம் ஒன்றும் இல்லை ஐயா, உண்மையிலேயே எனக்கு அவரைப் பற்றிய விவரம் ஒன்றும் தெரியாது. அதனால்தான் கேட்டேன்.

2 வது புலவர்:- ஐயா! அவர் தொண்டைமண்டலத்திலே பொன்விளைந்த களத்தூரிலே துளுவ வேளாளர் குலத்திலே பிறந்தவர். போதுமா?

3 வது புலவர்:- எல்லோரும் அவரைப்பற்றி இவ்வளவு பெருமைப் படுத்திப் பேசுகிறீர்களே! அவர் கவியிலே அப்படியென்ன தனி உயர்வு இருக்கிறது? குறிப்பிடத் தக்க நூல்கூட எதுவும் இயற்றியிருப்பதாகத் தெரியவில்லையே?

3 வது புலவர்:- எதைக் கேட்டாலும் எதைப் பார்த்தாலும் சந்தேகம்தானா! ஏனையா, உமது வாழ்க்கையில் சந்தேகமில்லாமல் ஒரு பாட்டாவது எழுதிப் பூர்த்தி செய்ததுண்டா? சேச்சே! புலவனுக்கு இப்படி எடுத்ததற்கெல்லாம் சந்தேக முண்டானால் எப்படி முன்னுக்கு வரமுடியும்?

2 வது புலவர்:- ஐயோ பாவம்! அது அவர் பிறவிக்குணம். அது போகட்டும். நேரம் ஆகிவிட்டது. வாருங்கள்; போகலாம்; தமிழ்ச் சங்கத்திற்கு.

(புறப்படுகிறார்கள். எதிரில் விகடகவி வருகிறார்.)

விகடகவி:- எங்கே! எங்கே! தமிழ்ச் சங்கத்திற்கா?

எல்லோரும்:- ஆமாம்.

விகடகவி:- ஏன்? அங்கென்ன விசேஷம்?

1 வது புலவர்:- ஓகோ! உமக்கு விஷயம் தெரியாதோ?

விகடகவி:- தெரியாதே. சொன்னால்தானே தெரியும்.

2 வது புலவர்:- அவருக்கா விஷயம் தெரியாமல் இருக்கும்? அரண்மனை விகடகவியல்லவா! அப்படியே கொஞ்சம் புரளி செய்து பார்க்கிறார்.

விகடகவி:- சிவசிவா! அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. உண்மையிலேயே "நீங்கள்" தமிழ்ச் சங்கத்திற்குப் போவது எனக்குப் புரியவே இல்லை.

3 வது புலவர்:- இன்று தமிழ்ச் சங்கத்திற்குப் புகழேந்திப் புலவர் வருவது உமக்குத் தெரியாதா?

விகடகவி:- ஓஹோ! அங்கே வேடிக்கை பார்க்கப் போகிறீர்களோ! அதுதானே நானும் யோசித்தேன். தமிழ்ப் பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டிய நீங்கள்கூட தமிழ்ச்சங்கத்திற்குப் போவதென்றால், ஆச்சரியப் படாமல் இருக்க முடியுமா? உம். அப்படியானால் நானும் வருகிறேன். வாருங்கள் போகலாம்.

(எல்லோரும் போகிறார்கள்.)

[திரை]

## காட்சி—2.

**இடம்**:—மதுரைத் தமிழ்ச்சங்கம். **காலம்**:—மாலை.

(தமிழ்ச் சங்கத்தில், புலவர்களும் பொதுமக்களும் திரளாகக் கூடி இருக்கின்றனர். புலவர்கள் மத்தியில் புகழேந்தி நடுநாயகமாய் அமர்ந்திருக்கிறார். அரசர் ஒருபுறம் அமர்ந்திருக்கின்றார். ''வாழ்க!புகழேந்தி. வாழ்க புகழேந்தி'' என்று எல்லோரும் ஆரவாரிக்கின்றனர். அமைச்சர் எழுந்து கையமர்த்துகிறார்.)

அமைச்சர்:- வாழ்க தமிழ்நாடு!

எல்லோரும்:- வாழ்க!

அமைச்சர்:-வாழ்க தமிழ் வேந்து!

எல்லோரும்:-வாழ்க!

அமைச்சர்:-வாழ்க செந்தமிழ்ப் புலவர்கள்!

எல்லோரும்:- வாழ்க! (அமைச்சர் அமருகிறார்).

பாண்டியன்:- புலவர் சிகாமணியே! வருக! வருக! செந்தமிழ்ப் புலவராகிய தம் வருகையால் யானும் எந் நாட்டு மக்களும் அளவற்ற மகிழ்ச்சியடைந்தோம். தம் போன்ற ஒப்பற்ற புலவர்களின் ஒத்துழைப்பினாலேயே இத்தமிழ்ச் சங்கமும் என் ஆட்சியும் வளம் பொருந்திய இன்பம் நிறைந்ததாக இன்றும் திகழ்கிறது. இன்னும் எண்ணற்ற புலவர்கள் தோன்றவும் தமிழ் வளமும் தமிழ்ச் சங்க வளமும் பெருகவும் இத்தகைய அரும் புலவர்கள் பலர் தோன்றித் தமிழ்க் கலை விளக்கைத் தூண்டாமணி விளக்காய்ச் செய்ய வேண்டு மென்பதே என் பேரவா. என் ஆசை நிறைவேற புலவர் மணி அரிய

யோசனைகள் பலவும் சொல்வதோடு ஆக்க வேலைகளிலும் பெரும்பங்கெடுத்துக் கொள்வாரென நினைக்கின்றேன்.

(அமைச்சர் மலர்மாலையை அரசரிடம் கொடுக்கிறார். அரசர் அதைப் புகழேந்திக்குச் சூட்டுகிறார். புகழேந்தி வணக்கத்துடன் மாலையைப் பெற்றுச் சூடி வணங்குகிறார்.)

புகழேந்தி:- தமிழ்த் தாய்க்கும், தமிழ்ப் புலவர்களுக்கும், தமிழ் மன்னருக்கும் தமிழர்களாகிய உங்கள் அனைவருக்கும் என் வணக்கம். தமிழ் மன்னரின் வேண்டுகோளைத் தமிழ்த் தாயின் கட்டளையாக ஏற்றுக் கொண்டேன். பண்டைப் பெருமை மிக்க இத் தமிழ்ச் சங்கத்தைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்த இந்த நாளே என் வாழ் நாளில் கிடைத்தற்கரிய திருநாளாக நினைத்து மகிழ்ச்சியடைகிறேன்.

அகத்தியரும், முருகவேளும், முடிநாகராயரும், நிதியின் கிழவனாருமாகிய 549 பேர்களால் கூட்டப் பெற்று, காய்ச்சின வழுதிமுதல் கடுங்கோன் வரை 89 மன்னர்களால் 4440 ஆண்டுகள் ஆதரித்து வளர்க்கப் பெற்று, பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை முதலிய அருமையான பாடல்களை இயற்றிப் பொலியுங்கால், கடல்கொண்ட முதற் சங்கமும். பின்பு,

அகத்தியர், தொல்காப்பியர், திரையன் மாறன், கீரந்தையார் முதலிய 59 அறிஞர்கள் போற்ற 3700 புலவர்கள் பாட வெண்டேர்ச் செழியன் முதல், மூடத் திருமாறன் வரை 59 அரசர்களால் 3700 ஆண்டுகள் தாங்கப் பெற்று, அகத்தியம், தொல்காப்பியம், இசை நுணுக்கம் முதலிய அரும்பெரும் நூல்களால் பெருமை

யுடன் கபாடபுரத்திற் பொலிந்து மீண்டும் கடலால் விழுங்கப்பட்ட இடைச் சங்கமும் பின்பு,

இளந்திருமாறன், சிறுமேதாவியார், பெருங்குன்றூர் கிழார், பரணர், நக்கீரர் முதலிய 49 புலவர்களால் தோற்றுவிக்கப்பெற்று முடத்திரு மாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரை 49 மன்னர்களால் 1950 ஆண்டுகள் பராமரிக்கப் பெற்று, நெடுந்தொகை 400, நற்றிணை 400, ஐங்குறுநூறு 100, பதிற்றுப்பத்து 150, பரிபாடல் 70, கூத்துவரி, பேரிசை, சிற்றிசை முதலிய பன்னூற் களைக் குவித்துப் பழம் புகழ் பெற்றது இத்தமிழ்ச் சங்கமே ஆகும்.

ஆஹா! தமிழணங்கின் அணிகலன்களாக விளங்கிய நூல்கள் எத்தனைக் காலம் கரையானுக்கு இரையாயின. எத்தனை மன்னர்கள் கவியரங்கேறினர். நாடகத் தமிழ் தான் எத்தனை நூல்களாகப் பாடப் பெற்றன. குண நூல், கூத்தநூல், சயந்தம், பரதம், முறுவல் முதலிய நாடக நூல்கள் எங்கே? அகத்தியம், குண்டலகேசி, வளையாபதி முதலிய அரிய தமிழ்ச் சுரங்கங்கள் எங்கே? எல்லாம் காலச் சூறாவளியிற் கரைந்து விட்டன.

எனினும் தமிழ்க்குமரி இன்றும் இளமையும் எழிலும் நிறைந்தவளாகவே திகழுகிறாள். உலகத்தின் முதன்மொழி தமிழேயாகும். தமிழ் சுமார் 11000 ஆண்டு களுக்கு முன்பே எண்ணெழுத்துகளுடன் பொலிந்தன. காலப் போக்கில் நமது கவனக்குறைவால் தமிழணங்கு சிறிது பொலிவிழந்து காண்பதைக் கண்டு நாம் நாண முடைய வேண்டும்.

தமிழர்களே, விழிப்புற்றெழுங்கள். உலகெலாம் ஒப்பும் உயர்திருக்குறளை வள்ளுவர் நமக்கென வழங்கியிருக்கிறார். இளங்கோவின் சிலம்புச் செல்வமிருக்கிறது. மற்றும் மணிமேகலை, சிந்தாமணி போன்ற எண்ணற்ற நூல்கள் பலவும் அழியாத செல்வங்களாக இருக்கின்றன. மற்றும்,

**"முருகுபொருநாறு, பாணிரண்டு, முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய**
**கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து"**

என்னும் பத்துப் பாட்டின் இன்சுவையை என்றும் நாம் மறக்க முடியுமா? இவற்றுள் முருகன் பெருமையும், தமிழ் நாட்டின் வளமையும், தமிழ் மன்னர்களின் வீரமும், கொடையும், பேகன், பாரி, காரி, ஓரி, ஆய், அதிகமான் முதலிய வள்ளல்களின் வண்மைச்சிறப்பும் என்றென்றும் தமிழர் பெருமைக்கு எடுத்துக் காட்டாய் சித்திரிக்கப் பெற்றுள்ளன!

மற்றும், இன்றைக்கு நம்மிடையே தோன்றியுள்ள கவிச்சக்ரவர்த்தி கம்பரையும், தமிழ் மூதாட்டி ஔவையையும், கபிலர் போன்ற பேரிசைப் புலவர்களையும், நீங்கள் நன்கறிவீர்கள். இது தமிழுக்கு வரப்போகும் நல்ல முன்னேற்றத்தின் சாயை. இவர்களால் தமிழ் இலக்கியம் புதுமையெழில் பெறப் போகின்றது. மேலும் தமிழ்ச்சங்கப் பராமரிப்பில் பெரும் பங்குகொண்டு பணியாற்றும் பாண்டிய மரபிற்றோன்றிய உங்கள் காவலர் சிறந்த கலையறிவும். கலை வளர்ச்சியில் அளவற்ற ஆர்வமும் கொண்டவர். அவர் ஆட்சியில் எங்கும் கலை

மணமும் அருள் ஒளியும் நிலவக் காண்கின்றேன், ஆகையால் இனி தமிழுக்கு நல்ல யோகமென்றே நினைக்கின்றேன். இத்தமிழ் மன்ற முன்னேற்றம் கருதி என்னாற் கூடும் பணியாற்ற என்றும் கடப்பாடுடையேன். அவரது ஆக்க வேலைகளிலெல்லாம், புலவர்களும், பொது மக்களாகிய நீங்களும் பங்கு கொண்டு தமிழ் நாடும் தமிழ் வேந்தும் சிறந்து, தமிழரின் கலைமணம் உலகுள்ள வரை வீசப் பாடுபடல் வேண்டும். தமிழரின் வீரம், அறம், அருள், அன்பு, புகழ், அனைத்தும் என்றும் இளங் கதிர் போல் ஒளியுடன் திகழ வேண்டு மென்பதே என் ஆசை. மற்றும் என்னை வரவேற்றுப் பெருமைப்படுத்திய மன்னருக்கும் புலவர்களுக்கும் பொதுமக்களாகிய உங்களுக்கும் என் வணக்கம். வாழ்க தமிழ்ச் சங்கம்! வாழிய செந்தமிழ்!

(வணங்கி அமருகிறார். மக்கள் மகிழ்ச்சியில் ஆரவாரிக்கின்றனர்.)

பாண்டியன்:- அறிஞர் பெருமக்களே! அன்புள்ள குடிமக்களே! இத்தனை நேரம் புலவர் மணியின் இலக்கிய இன்பப் பொழிவில் நம்மையே மறந்திருந்தோம்.

**''கேட்டாலு மின்பம் கிடைக்கும் கண்டீர் கொண்ட**
**கீர்த்தி யொடு பாட்டாலுயர்ந்த புகழேந்தி சொன்னபடி''**

என்று ஒரு சமயம் படிக்காசுப் புலவரால் புகழப்பெற்ற அவரது புலமைத் திறனையும், இலக்கியப் பண்பையும் அவரது பெயரே நமக்கு அறிவுறுத்துகின்றது. அவரைக் காணவும், அவர் அரிய சொற்பொழிவைக் கேட்கவும் நேர்ந்த இன்னாள் நமக்கு ஒரு நன்னாளாகும். தமிழ்ப் பெரியாரின் ஆலோசனையின்படி யான் செய்யும் தமிழ்ப்

பணி யாவற்றிலும் அவர் துணையும் மற்றும் உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பும் அவசியம் தேவை. இத்துடன், புலவர்மணி நமது அரண்மனை விருந்தினராய்ப் பல நாள் தங்கியிருந்து எனக்கும் இந்நாட்டு மக்களுக்கும் சிறிது கலையறிவை ஊட்டி மகிழ்விக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் சிற்றுரையை முடிக்கின்றேன்.

(அரசன் வணங்கி அமருகிறான். யாவரும் ஆரவாரத்துடன் வணங்குகின்றனர்.)

(திரை)

## காட்சி—3.

**இடம்:**—பாண்டியன் அந்தப்புரம். **காலம்:**—மாலை.

(பாண்டியன், குணவதி, குமுதம், உரையாடிக் கொண்டிருக்கின்றனர்.)

பாண்டியன்:- குணவதி! நீ நேற்றிரவு நிலாமுற்றத்தில் வீணையில் இசைத்துப் பாடிக் கொண்டிருந்தாயல்லவா! அது என்ன பாடல்?

குணவதி:- அதுவா அப்பா! அது நடனத்திற்காக இயற்றப் பட்டது.

பாண்டியன்:- அப்படியா! மிகவும் நன்றாய் அமைந்திருந்தது, அதன் பொருள்?

குணவதி:- சிவபெருமான் மீது காதல் கொண்ட ஒரு யுவதி தன் காதலனை ஒரு திரையில் சித்தரித்துக் கண்டுமகிழ்ச்சியடைகிறாள். இதைக் கண்ட யுவதியின் தாய் தன் மகளையும் சினந்து சிவனையும் இழித்துக் கூறுகிறாள்.

பாண்டியன்.- பேஷ். நல்ல கற்பனை. —ஆமாம். புலவர் உனக்கு நடனப் பாடல்கள் கூடவா பயிற்றுவிக்கிறார்?

குமுதம்:- பாடல் மட்டுமா? நடனம் கூடப் பயிற்றுவிக்கிறாரே?

பாண்டியன்:- அப்படியா!—அந்தப் பாடலும் அவர் இயற்றியது தானோ?

குணவதி:- இல்லை.

பாண்டியன்:- வேறு யார் இயற்றியது?

குமுதம்:- வேறு யார்? இளவரசியாரே இயற்றியது தான்.

குணவதி:- (நாணத்துடன் தலை குனிகிறாள்.)

பாண்டியன்:- என்ன! நீயா! நீயா பாடல் இயற்றுகிறாய்?

குமுதம்:- ஆம். இன்னும் பல பாடல்கள் இயற்றியிருக்கிறார்கள்!

பாண்டியன்:- உண்மையாகவா? பாடல்கள் இயற்ற நன்னூல் முதலிய இலக்கண நூல்களெல்லாம் கற்க வேண்டாமா?

குணவதி.- ஆம்; அவைகளையெல்லாம் புலவர்தான் பயிற்றுவிக்கிறார்.

பாண்டியன்:- குணவதி! இன்றே நான் உன்னைப் பெற்றதின் பயனைப் பெற்றேன்.

**"செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்**
**வானகமு மாற்ற லரிது"**

என்ற வள்ளுவரின் வாக்கை மெய்ப்பிக்கும் உத்தமர்களில் நம்புகழேந்திப் புலவரும் ஒருவர். ஆஹா! என்னே! அவரது கல்வியின் அடக்கம் நிறைந்த பேராற்றல்! இத்தனை குறுகிய காலத்துக்குள் எனக்கும் தெரியாமல் உனக்குக் கவிபாடும் திறமையை உண்டாக்கி வைத்த அவரின் போதனைத்திறன்தான் என்னே! ஆஹா! புலவர் மணியின் நட்பைப் பெற்ற நானே பாக்கியவான். குணவதி! நீ பாடல்களும் இயற்றுவாயென்பது எனக்கு இதுவரை தெரியாதே! எங்கே வீணையை மீட்டி அந்தப் பாடலைப் பாடு... இல்லை......அவள்...... உன் தோழி வீணையை மீட்டட்டும். நீ பரத பாவத்துடன் பாடு.

(தோழி குமுதம் வீணையை மீட்ட குணவதி பாடிக்கொண்டே ஆடுகிறாள்.)

*இராகம் - கல்யாணி.* *தாளம் - ஆதி*

## எடுப்பு

இவனையோ மணமாலையிட எண்ணினை
ஈதடாத செயலே என் மகளே (இ)

## தொடுப்பு

புவனமெல்லாம் சுற்றிப் பிச்சையு மெடுப்பான்
புலையன் எச்சிலையுண்டும் உதைபட்டும் களிப்பான் (இ)

## முடிப்பு

சவமெரிந்திடும் சுடுகாட்டிடை வசிப்பான்
சாம்பலைப் பூசுவான் பாம்பணி புனைவான்
தவநிலை தவறாத யோகி போல் நடிப்பான்
தலையிடை இருபெண்கள் தரும் இன்பம் குடிப்பான் (இ)

## தொடர்முடிப்பு

அலியோடீனகுலத்து அணங்கையும் மணந் தான்
அடியவர்க்கருள் செய்யும் அறந்தொழில் மறந்தான்
புலியுரி புனைவதல்லா லெதிற் சிறந்தான்
புவியில் இவனுனக்கெவ் வகையிலும் பொருந்தான் (இ)

*(நாட்டியம் முடியும் தருணத்தில் புகழேந்தி வருகிறார்.)*

*புகழேந்தி:- அருமையான கற்பனை! அற்புதமான நாட்டியம்!*

*(குணவதி நாணத்துடன் ஓடித் தந்தையிடம் நின்று கொள்ளுகிறாள்.)*

*பாண்டியன்:- வாருங்கள்! வாருங்கள்! புலவரே இவ்வாசனத்தில் அமருங்கள்,*

புகழேந்தி:- அரசே! நீங்களும் அமருங்கள்

(அரசரும் அமருகிறார்.)

என்ன! குணவதியின் இசை நிகழ்ச்சிக்கும் நடனத்திற்கும் என் வருகை இடையூறாகி விட்டதோ?

பாண்டியன்:- இல்லை, இல்லை. குணவதி என்ற மலருக்கு,- ஏன்? இந்த நாட்டுக்கே மணமும் எழிலும் தங்கள் வருகையால்தானே உண்டானது. தங்கள் வருகை எப்படி இடையுறாக இருக்க முடியும்?

புகழேந்தி:- இல்லை, இல்லை. மலர்களுக்குப் பிறரை வசீகரிக்கும் மணமும் எழிலும் இயற்கையில் அமைந்திருக்கிறது.

குணவதி:- ஏன்? காட்டில் காண்பாரற்றுப் பூத்து கருகிவீழும் மலர்களை மாந்தர்கள் பரிந்தெடுத்துத் தொடுத்துச் சூடுவதால் அம் மலர்கள் புதிய சோபையும் எழிலும் அடைகின்றன வென்றால் பொருந்தாவோ?

புகழேந்தி:- ஆம்; குணவதி! நன்றாகச் சொன்னாய் நீ, வினாவும் விடையும் உன் பேச்சிலேயே தொனிக்கின்றது.

பாண்டியன்:- குணவதி என்ன சொன்னாள்? நீங்கள் சொல்வதொன்றும் விளங்கவில்லையே!

புகழேந்தி:- இன்னுமா விளங்கவில்லை? நான் வேண்டுமானால் விவரமாகச் சொல்லட்டுமா?

பாண்டியன்:- சொல்லுங்களேன்.

புகழேந்தி:- நீங்கள் மட்டும் சொன்னால் போதுமா? குணவதியும் சம்மதித்தால்......

(குணவதியைப் பார்த்து கேலியாய்ச் சிரிக்கிறார்.)

குணவதி:- தெரியாத விஷயத்தை விளக்கிச் சொல்வதில் தவறொன்றுமில்லையே.

புகழேந்தி:- தவறொன்றுமில்லையே! அப்படியானால் சொல்லுகிறேன். கானகத்தில் பூத்துக் கமழும் மலர்களை மனிதர்கள் பரித்தெடுத்துத் தொடுத்துச் சூடிக் கொள்வதால் மலரின் எழிலும் மணமும் அதிகப்படுகின்ற தென்பதுதானே குணவதியின் வாதம்?

பாண்டியன்:- ஆமாம்.

புகழேந்தி:- அந்த மலர் எது? மலரை அழகுபெறத் தொடுத்தவர் யார்? அதைச் சூடிக்கொள்வோர் யார்? இது தான் இப்போது முடிவு செய்ய வேண்டிய விஷயம்.

பாண்டியன்:- உம்......மலர், அதைத் தொடுத்தோர் இரண்டும் இப்போது தெரிகிறது. ஆனால்!......அதைச் சூடிக்கொள்...வோ...ர்...?

புகழேந்தி:- மலரையும் தொடுத்தவரையும் சொல்லுங்கள், பிறகு சூடிச்கொள்வோரைப் பற்றி யோசிப்போம்.

பாண்டியன்:- அந்த மலர்தான் குணவதி.

குணவதி - மலரை அழகுபெறத் தொடுத்தவர்?

பாண்டியன்:- நமது புலவர் மணிதான்.

புகழேந்தி:- சரி; மணமும் எழிலும் உள்ள மலரை அழகு பெறத் தொடுத்தாகி விட்டது. இனி அதைச் சூடிக் கொள்ளத் தகுந்த ஒரு வீர வாலிபன்தான் தேவை! என்ன நான் சொல்வது சரிதானே?

குணவதி:- போங்கள் ஸ்வாமி! இதற்குத்தான் இவ்வளவு பீடிகை போட்டீர்களா?

புகழேந்தி:- பார்த்தாயா! கோபித்துக் கொள்ளுகிறாயே. இதற்காகத்தான் முதலிலேயே உன் சம்மதம் பெற்று இதைச் சொன்னேன்.

குணவதி:- எப்பொழுதும் பிறரைத் திகைக்க வைப்பது தானே கவிஞர்களின் கற்பனை.

புகழேந்தி:- நான் உண்மையைத்தானே சொன்னேன். இதில் திகைப்பதற்கு என்ன இருக்கிறது. குணவதி? உன் பெருமை உனக்குத் தெரியாது. உன்னை அடையப் போகும் மணாளனே இவ்வுலகில் மிகவும் சிறந்த பாக்கிய வானாவான்!

பாண்டியன்:- தங்கள் வாக்குப் பலித்து என் கனவும் நனவாக வேண்டும். இதுதான் என் ஆசை.

புகழேந்தி:- எல்லாம் மங்களமாக முடியும். சரி. நேரமாகி விட்டது. நான் ஆலயத்திற்குப் போக வேண்டும். போய் வரட்டுமா?

பாண்டியன்:- இன்று ஆலயத்திற்கு நானும் வருகிறேன். நாம் இருவருமே போகலாம். யாரங்கே!

(ஒரு சேவகன் வந்து வணங்குகிறான்.)

ரதம் சித்தமாகட்டும்.

சேவகன்:- உத்தரவு.

(வணங்கிச் செல்லுகிறான்)

பாண்டியன்:- குணவதி! புலவரின் சொற்படி கல்வியைக் கருத்தாய்ப் பயின்றுவா. புலவரின் ஆசியால் உனக்கு எல்லா நலங்களும் உண்டாகும்.

குணவதி:- (வணங்கி) அப்படியே ஆகட்டுமப்பா.

பாண்டியன்:- புலவரே! நாம் புறப்படலாமா?

புகழேந்து:- ஆஹா! போகலாம், குணவதி! நான் போய் வரட்டுமா?

குணவதி:- (வணங்கி) போய் வாருங்கள்.

(பாண்டியனும் புலவரும் போகிறார்கள்.)

திரை.

## காட்சி—4

இடம்-உறையூர் குலோத்துங்க சோழன் அரண்மனை.

காலம்-பகல்

(அரசவைப் புலவர் ஒட்டக்கூத்தரும், அமைச்சர் உதயணரும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.)

கூத்தர்:- அரசர் சில நாட்களாக ஏதோ நிம்மதியற்றவராய்க் காணப்படுகிறார். காரணமும் தெரியவில்லை.

உதயணர்:- தெரியாமலென்ன? எல்லாம் தெரியும். அவராக ஒன்றையும் சொல்லாமலிருக்கும் போது நாமென்ன செய்ய முடியும்?

கூத்தர்:- தந்தையார் விக்ரமசிங்கரின் மறைவுதான் அவர் வருத்தத்திற்குக் காரணமாயிருக்கலாமோ?

உதயணர்:- இருக்கலாம். ஆனாலும் அதைவிட முக்கிய மான வேறொரு காரணமும் இருக்கலாமல்லவா?

கூத்தர்:- அப்படி வேறெந்தக் காரணமும் இருப்பதாகத் தெரியவில்லையே! உங்களுக்கு அதைப்பற்றி ஏதேனும் தெரியுமோ?

உதயணர்:- எனக்கு மட்டும் என்ன! எல்லோருக்குமே தெரிந்த விஷயம்தானே! தக்க பருவம் வாய்ந்த வாலிபர் களுக்குக் காலாகாலத்தில் நிகழக்கூடிய நினைவுகளே அவர் சோர்வுக்கும் நிம்மதிக் குறைவுக்கும் காரணமா யிருக்கலாம்.

கூத்தர்:- காதல் நினைவுகளா? உதயணரே! நீங்களென்ன விளையாட்டாகச் சொல்லுகிறீர்களா, அல்லது...

உதயணர்:-விளையாட்டு ஒன்றுமில்லை. உண்மையாகத் தான் சொல்லுகிறேன்.

கூத்தர்:- அரசரின் வாழ்க்கையில் இதுவரை அத்தகைய சந்தர்ப்பமே நிகழ்ந்ததில்லையே!

உதயணர்:- எத்தகைய சந்தர்ப்பம் நிகழ்ந்ததில்லை என்று சொல்லுகிறீர்கள்?

கூத்தர்:- வேறு எந்த நாட்டு அரச குமாரிகளையும் பார்த்ததும் இல்லை; பழகியதும் இல்லையே என்றேன்.

உதயணர்:- அரசகுமாரிகளைப் பார்த்தும் பழகியும் இல்லா விட்டால் அரசகுமாரர்களுக்குக் காதலே உண்டாகா தென்று அர்த்தமா, என்ன?

கூத்தர்:- காணாத கன்னியின் மீதா காதல்?

உதயணர்:- கன்னியைத்தான் காணாவிடினும் நம்பத் தகுந்தவர்களால் கன்னியின் எழில், குணம் முதலிய பெருமைகளைக் கேட்டும் காதல் கொண்டிருக்கலா மல்லவா?

கூத்தர்:- ஓஹோ! அப்படியானால் அவராக்வே தமக்கு மணமகளைத் தேர்ந்தெடுத்து விட்டாரென்று சொல்லுங்கள்.

உதயணர்:- ஆமாம்; பெரிய பகீரதப் பிரயத்தனத்திற்குப் பிறகுதான் நானே இதை அவரிடமிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது.

கூத்தர்:- உம்! அப்படியா! அந்தப் பெண் யார்?

உதயணர்:- மதுரை கருணாகர பாண்டிய மன்னரின் புதல்வி குணவதியாம். அழகில் திருமகளையும் கல்வியில்

கலைமகளையும் நிகர்த்தவளாம். அவளையன்றி வேறு யாரையுமே மணப்பதில்லையென்று தீர்மானமாம்.

கூத்தர்:- இதைப்பற்றி உங்களிடம் நேரிலேயே சொன்னாரா?

உதயணர்:- ஆம்; நேற்றுதான் சொன்னார்...

(அரசர் குலோத்துங்கன் வருகிறார்.)

அதோ, அரசரே! வருகிறார்.

உதயணர்:- அரசே வணக்கம்.

கூத்தர்:- சோழவேந்தருக்கு எனது வாழ்த்துக்கள்!

குலோத்து:- வணக்கம்.

(எல்லோரும் அமருகிறார்கள்.)

நீங்கள் வந்து அதிக நேரமாகி விட்டதோ?

உதயணர்:- இல்லை. நாங்கள் இப்பொழுதுதான் வந்தோம், தாங்கள் சீக்கிரம் வந்து விடுவீர்கள் என்று எதிர்பார்த்தே நாங்கள் வந்ததைத் தெரியப்படுத்த ஏற்பாடு செய்ய வில்லை.

குலோத்து:- நானும் இத்தனை நாழிகைவரை இங்கேதான் இருந்தேன். மனம் நிம்மதியில்லை; பொழுதும் போக வில்லை; உங்களையும் காணவில்லை; பிறகுதான் அப்படி கொஞ்சம் பூங்காவைச் சுற்றிவிட்டு வருகிறேன்.

கூத்தர்:- உங்கள் மன நிம்மதிக்கு மருந்து கொடுக்கத்தான் உதயணர் பூரண பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார் போலிருக்கிறதே!

குலோத்து:- புலவரே! தாங்கள் சொல்வதொன்றும் எனக்கு விளங்கவில்லையே!

கூத்தர்:- விளங்கவில்லையா! நேற்று உதயணரிடம் என்ன சொன்னீர்கள்?

குலோத்து:- அதை உங்களிடமும் சொல்லி விட்டாரா?

கூத்தர்:- அரசே! இது முன்னரே தங்கள் தந்தையாரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மணமகளே ஆகும். அவர்இருக்கும் போதே தங்கள் திருமணத்தை முடிக்க முடியாமற் போனது துர்ப்பாக்கியமே. என்றாலும், அவர் விருப்பப்படி எப்படியும் தங்களுக்குப் பாண்டிய மன்னரின் புதல்வியை மணம் புரிவிக்க வேண்டுமென்பது தான் எங்கள் எண்ணம். ஆகையால் நாளையே உதயணரை அனுப்பினால்...

உதயணர்:- இல்லை. தாங்களால் தான் இக்காரியத்தை முடிக்கமுடியும் அரசே! புலவரையே அனுப்புங்கள். அவர் நிச்சயம் வெற்றியுடன் திரும்புவார்.

குலோத்து:- ஆம்; இது உங்களால்தான் முடியவேண்டும். நீங்கள் தான் போகவேண்டும். காரியத்தையும் முடித்துக் கொண்டு வரவேண்டும்.

கூத்தர்:- அப்படியே ஆகட்டும். நானும் மதுரைக்குப் போக வேண்டுமென்றுதான் இருந்தேன். இத்துடன் அந்த வேலையும் முடியும்.

குலோத்து:- அதென்ன வேலையென்பதை நாங்கள் அறிந்து கொள்ளலாமோ!

கூத்தர்:- இதை உலகமே அறியவேண்டியது தானே! அங்கே புகழேந்தி என்றொரு புலவர் இருக்கின்றாரே, அவரை உங்களுக்குத் தெரியுமா?

குலோத்து:- ஆம்; அவரைப்பற்றி மூதாட்டி ஔவையார் கூட ஒரு சமயம் புகழ்ந்து பேசக் கேட்டிருக்கிறேன்.

கூத்தர்:- உம்; அந்த கிழம் யாரைத்தான் புகழ்ந்து பேச வில்லை? இருக்கட்டும். இம்முறை மதுரையில் அவர் பெருமை எவ்வளவென்பதை வெட்டவெளிச்சமாக்கா மலா வரப்போகிறேன்? புகழேந்தியாம். பெயரைப் பார்!

குலோத்து:- அதையும் பார்க்க வேண்டியதுதான். ஆனால்! அங்கு தாங்கள் போன வேலையை மறந்து கலைப் போரில் இறங்கிவிட்டால்! பிறகு...

கூத்தர்:- இல்லை இல்லை. எனக்குத் தெரியாதா என்ன? எப்படியும் உங்களுக்குக் காரியம்தானே?......

குலோத்து:- ஆமாம். எப்படியும் காரியத்தை வெற்றியுடன் முடித்தால் சரிதான்.

(அமைச்சரிடம்) அமைச்சரே! நாளைப் புலவர் மதுரை புறப்பட எல்லா ஏற்பாடுகளும் செய்து கொடுங்கள்.

உதயணர்:- உத்தரவு!

குலோத்து:- நாளை மதுரை புறப்படும் முன், மீண்டும் தங்களைச் சந்திக்கின்றேன்.

(அரசர் செல்லுகிறார்.)

[திரை]

## காட்சி—5.

**இடம்:**—பாண்டியன் கொலுமண்டபம். **காலம்:**—மாலை.

(சங்கு, தாரை, முரசு முதலிய இசை முழங்க கருணாகரப் பாண்டியன் கொலுமண்டபத்தில் வந்தமருகிறார். புகழேந்தி, அமைச்சர், முதலிய யாவரும் வணங்க தானும் வணங்கி அமரும்படி கையமர்த்தித்தானும் அமருகிறார். நாட்டிய மாதர்கள் வந்து நடனமாடுகின்றனர். காவலன் வருகிறான்.)

**காவலன்:-** அரசே! உறையூர் குலோத்துங்கச் சோழ மன்னரின் அரசவைப் புலவர் ஒட்டக்கூத்தர் தங்கள் சேவை காண வந்திருக்கிறார்.

**பாண்டியன்:-** அப்படியா! அமைச்சரே, அவரைத் தக்க மரியாதையுடன் அழைத்து வாருங்கள்.

**அமைச்சர்:-** உத்தரவு.

(வணங்கிச் செல்லுகிறார். கூத்தர் வருகிறார்.)

**கூத்தர்:-** பாண்டிப்பதியே, வாழ்க!

**எல்லோரும்:.** வரவேண்டும்! வரவேண்டும்!

(அரசர்முதல் யாவரும் எழுந்து வணங்குகின்றனர்.)

**புகழேந்தி:-** தங்கள் வரவு நல்வரவாகுக!

**பாண்டியன்:-** புலவர் பெரும! இவ்வாசனத்தில் அமருங்கள்,

(கூத்தர் ஆசனத்தில் அமருகிறார்.)

தாங்களும் தங்கள் நாட்டு மக்களும் மன்னரும் சௌக்கியந்தானே?

கூத்தர்:- ஆம்; இங்கும் அப்படியே எல்லோரும்!......

பாண்டியன்:- ஆம்; தங்களைப் போன்ற பெரியோர்களின் ஆசியால் எல்லோரும் சௌக்கியமே.

கூத்தர்:- இப்போது தங்கள் அரசவைப் புலவர் தலைமைப் பதவியை அலங்கரிப்பவர்......?

பாண்டியன்:- இதோ! இவர்தான். இவரைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாமே!

கூத்தர்:- (சற்று யோசித்து) உம்; பெயரென்ன?

புகழேந்தி:. என்னைப் புகழேந்தியென்று சொல்லுவார்கள்.

மதிவாணர்:- என்ன! இவரைத் தெரியாதவர்கள் தமிழ் நாட்டிலேயே இருக்கமுடியாதே!

கூத்தர்.- உம். ஆமாம்; எப்பொழுதோ எங்கோ யாரோ சொல்லக் கேட்டதாகத்தான் ஞாபகம். மறந்து விட்டேன். உம்; அதிருக்கட்டும். நான் வந்த காரியம் வேறு.

பாண்டியன்:- புலவரே! தாங்கள் வந்த காரியத்தைச் சொன்னால், என்னால் முடிந்ததைச் செய்யத் தடையில்லை.

கூத்தர்:- முடிந்ததைச் செய்வதென்ன! காரியத்திற்குப் பூரண பொறுப்பாளரே தாங்கள் தானே!

மதிவாணர்:- விஷயம் இன்னதென்று சொன்னால் தானே புரியும்.

பாண்டியன்:- புலவரே! என்ன யோசனை? பாண்டியன் சொன்ன சொல் தவற மாட்டான். தயக்கமின்றிச் சொல்லுங்கள்.

கூத்தர்:- எங்கள் அரசர் குலோத்துங்கச் சோழ மன்னருக்குத் தங்கள் புதல்வி குணவதியைத் திருமணம் செய்விக்க வேண்டுமென்பது எங்கள் விருப்பம். இதற்குத் தங்கள் விருப்பத்தையும் சம்மதத்தையும் பெற்று வரவே அரசர் எம்மை அனுப்பியுள்ளார். தங்கள் அபிப்பிராயம் என்ன வென்பதை ..........!

பாண்டியன்:- புலவரே! மிக்க மகிழ்ச்சி. ஆயினும், இதில் என் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளுமுன் மணமகளின் அபிப்பிராயத்தையும், மணமகளது தாயின் விருப்பத்தையும் தெரிந்துகொள்ள வேண்டாமா?

கூத்தர்:- அரசே! இதற்கெல்லாம் பெண்களின் அபிப்பிராயங் களைக் கேட்டே நடந்து கொள்ள வேண்டுமென்றால் முடியுமா? மேலும் வெளியுலகம் இன்னதென்றறியாது கூண்டுக் கிளிபோல் அந்தப்புரத்திலேயே கட்டுண்டு கிடக்கும் அரிவையர்களுக்கு, சோழ நாட்டின் வளம், சோழனின் வீரம், அவன் ஆட்சித்திறம், மற்றைய பெருமைகளனைத்தையும் அறிந்து கொள்ளும் ஆற்றல் ஏது?

பாண்டியன்:- புலவரே! பெண்களைக் கூண்டுக்கிளிபோல் அடைத்து வைத்து வெளியுலகம் தெரியாத விலங்கினங் களைப் போல் நடத்துவது எங்கள் நாட்டு வழக்கமல்ல. பாண்டிய நாட்டுப் பெண்மணிகள் சமயம் நேரும்போது வாளும் வில்லும் எடுத்து வீரப் போரியற்றி வல்லரசு களையும் வெல்லும் திறம்படைத்த வீராங்கனைகள் என்பது நினைவில் இருக்கட்டும். அது மட்டுமல்ல!

கலைத்திறனிலும் பொது உலக ஆராய்ச்சி அறிவிலும் இவர்கள் மற்றைய நாட்டு மங்கையர்களுக்கு இளைத் தவர்கள் இல்லையென்பதும் நினைவில் இருக்கட்டும்.

கூத்தர்:- மிகவும் நல்லதாயிற்று. அத்தகைய அணங்கை அடையவேண்டு மென்பதுதான் எங்கள் அரசனின் ஆசை!

பாண்டியன்:- ஆசை மட்டும் இருந்தால் போதுமா? உம் அரசர் எம் புதல்வியை மணக்கத் தகுந்த யோக்கியதை உள்ளவரா என்பது. சிந்திக்கத் தகுந்த முக்கிய விஷயமல்லவா?

கூத்தர்:- சோழ நாட்டின் பெருமையையும் சோழனின் புகழையும் சொல்லியா தெரிந்து கொள்ள வேண்டும்?

(பாட்டு)

**கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானே!**
**கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானே!**
**ஆருக்கு வேம்பு நிகராமோ அம்மானே!**
**ஆதித்தனுக்குநிகர் அம்புலியோ அம்மானே!**
**வீரர்க்குள் வீரனொரு மீனவனோ அம்மானே!**
**வெற்றிப் புலிக்கொடிக்கு மீனமோ அம்மானே!**
**ஊருக்கு உறந்தை நிகர் கொற்கையோ அம்மானே!**
**ஒக்குமோ சோனாட்டுக்குப் பாண்டிய நாடம்மானே!**

பாண்டியன்:- (சீற்றத்துடன்) கூத்தரே! நன்று நன்று; உமது கூற்று. பேச்சிற் பெருமையடையும் பிள்ளை களின் பிதற்றலைப் போல் இருக்கிறது தங்களின் தற்புகழ்ச்சி. என் வினாவிற்கு இதுதான் விடையோ?

புகழேந்தி:- அரசே! சினம் வேண்டாம். சற்று பொறுங்கள். தங்கள் வினாவிற்கு அவர் விடையளிக்கத் தவறிவிட்டா

ரென்பது உண்மையே என்றாலும் அதே தவறை நாமும் செய்யவேண்டாம். அவர் வினாவுக்கு நான் பதிலளிக் கிறேன்.

(கூத்தரை நோக்கிப் பாடுகிறார்.)

(பாட்டு)

**ஒரு முனிவன் நேரிலோ உரை தெளித்த தும்மானே!**
**ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ அம்மானே!**
**திருநெடுமால் அவதாரம் சிறு புலியோ அம்மானே!**
**சிவன் முடியில் ஏறுவதும் செங்கதிரோ அம்மானே!**
**கரைஎதிர் ஏடேறியதும் காவிரியோ அம்மானே!**
**கடிபகைக்குத் தாதகிற் கண்ணியோ அம்மானே!**
**பரவைபணிந் ததும் சோழன் பதந்தனையோ அம்மானே!**
**பாண்டியனார் பராக்கிரமம் புகர்வெளிதோ அம்மானே**

பாண்டியன்:- கூத்தரே! என் கேள்விக்குப் பதில் தாங்கள் பாடிய பாட்டல்ல. அவை உமது கவிபாடுந் திறமையைக் காட்டும் நோக்கத்துடன் உளறிக் கொட்டிய சொற் குப்பைகளே ஆகும். போகட்டும். இப்போதாவது எமது புலவர் மணியின் கேள்விக்குத் தக்க பதிலளியும். இல்லையேல் எல்லோர் முன்னிலையிலும் இச்சபையில் உமது தோல்வியைப் பகிரங்கமாய் ஒப்புக்கொள்ளும்.

புகழேந்தி:- அரசே! பெண் கேட்கும் தூதுவராக வந்த இவரிடத்தில் நாம் கல்விப்போட்டி யிடுவதோ; அல்லது அவர் புலமையை அளவிடுவதோ நமக்கழகல்ல. மேலும் புலவர்களென்று சொல்லிக் கொள்ளும் பெரும் பாலோரிடம் இத்தகைய அகங்கார குணம் இருப்பது இயற்கை. ஆகையால் நாம் இப்போது சிந்திக்க வேண்டியது இவரைப் பற்றியன்று. விக்ரம சோழ மன்னர் மகா நீதிமான். சிறந்த வீரர். ஏழைகளின்

தோழர், பெரியோர்களையும், புலவர்களையும், மதித்து நடத்தும் உத்தமர். அவரது புதல்வராகிய குலோத்துங்க மன்னரும் எவ்வகையிலும் தந்தைக்குப் புறம்பானவர் அன்றென்பதே கற்றறிந்த யாவர் முடிவும். ஆகையால் கல்வியறிவும் கலைவளர்ச்சியில் மிக்க ஆர்வமும் கொண்ட நமது குணவதிக்கு குலோத்துங்கன் எவ்வகையிலும் பொருத்தமுடைய நாயகன் என்பதே என்கருத்து. ஆகையால் புலவரைச் சிலநாள் நமது கௌரவ விருந்தினராய் வைத்திருந்து அரசி, இளவரசி முதலியோரின் அபிப்பிராயத்தையும் தெரிந்து தக்க முறையில் சுபச் செய்தியுடன் அவரை வழியனுப்புவதே நலம்.

மதிவாணர்:. ஆம்; அரசே! எனக்கும் புலவர் சொல்வதுதான் நலமென்று தோன்றுகிறது.

பாண்டியன்:- புலவர் சொல்லுக்குப் புறம்பாக நான் என்றும் நடந்ததில்லை. என்றாலும்...! இவ்விஷயத்தில் மட்டும் இச்சபையி லுள்ளோர்களின் அபிப்ராயத்தை ஒட்டியே தீர்மானிக்க நினைக்கிறேன்.

எல்லோரும்:- புலவர் சொல்வதே சரி. புலவர் சொல்வதே சரி.

பாண்டியன்:- புலவரே இன்றைய நிகழ்ச்சியில் வெற்றி தங்களுக்குத்தான்.

புகழேந்தி:- அரசே! வெற்றி எனக்குமல்ல; தங்களுக்குமல்ல. உண்மையில் வெற்றியடைந்தவர் கூத்தர்தான்.

மதிவாணர்:- அவ்வெற்றிக்கும் காரணம் நீங்கள்தான்.

புகழேந்தி:- வெற்றி யாருடையதாயினும் சரி! வெற்றியின் பயனை அடையப் போகிறவர்கள் குலோத்துங்கனும் குணவதியுமாகத்தான் இருக்க வேண்டும்.

மதிவாணர்:- ஏன் அந்த மகிழ்ச்சியில் நம் அனைவருக்கும் பங்குண்டல்லவா?

புகழேந்தி:- கூத்தரே, இன்றைய நிகழ்ச்சியை இன்றோடு மறந்து விடுவோம். இன்று நீங்கள் எங்கள் விருந்தினர்; நாளை உறவினர். நிச்சயம் சுபச்செய்தியுடன் சோழ நாடு போகலாம். சரிதானே?

கூத்தர்:- சரிதான்.

பாண்டியன்:- அமைச்சரே! கூத்தர் நமது அரசாங்க விருந் தினர். அவருக்கு வேண்டிய சௌகரியங்கள் யாவும் செய்து கொடுக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யுங்கள்.

மதிவாணர்:- அப்படியே ஆகட்டும், அரசே!

பாண்டியன்:- (புகழேந்தியைப் பார்த்து) புலவரே, வாருங் கள் அந்தப்புரம் செல்வோம்.

(புலவரும் அரசரும் செல்லுகிறார்கள்.)

**[திரை]**

## காட்சி—6.

**இடம்**:—சோழநாட்டின் ஒரு முக்கிய வீதி. **காலம்**:—பகல்.

(நகரெங்கும் அலங்கரிக்கப் பெற்றிருக்கிறது. குடி மக்கள் குதூகலத்துடன் கூட்டம் கூட்டமாய்ச் செல்லுகின்றனர். விஷயமறியாத சில வேற்றூர் வாசிகள் விழிக்கின்றனர்.)

ஒருவன்:- அண்ணே! இங்கே என்னா விஷேசம்? எங்கே பார்த்தாலும் தோரணங்களும் வாழைமரங்களும் கட்டியிருக்கு! ஆனையுங் குதிரையும் ரதங்களும் சனங்களும் கூட்டங்கூட்டமாகக் கும்மாளம் போட்டுக்கிட்டு போவுது. விசயம் என்னான்னு ஒன்னும் புரியலையே!

மற்றவன்:- நாங்களும் ஒன்னோட வந்தவங்கதானே! ஒனக்குத் தெரியாத விசயம் எங்களுக்கு மட்டும் எப்படித் தெரியும்?

3-வது ஆள்:- யாரையாச்சுங் கேட்டுத் தெரிஞ்சுக்கலா முன்னாலும் மனுசன் யாரும் நின்னுகூட பதில் சொல்ல மாட்டாங்க போலேருக்கே!

மற்றவன்:- என்னாண்ணே! இதுக்கெல்லாம் ரோசனெ பண்ணினா முடியுமா? சும்மாக் கேளண்ணே.

ஒருவன்:- ஏன்? நீ தாங் கேளேன்.

மற்றவன்:- உம்; கேக்கட்டுமா? உம். இதோ கேக்கிறேன் பாரு!

3-வது ஆள்:- ஆமா! நீங்க கேக்கறத்துக் குள்ளே, கெளுக்கு வெளுத்துப் போவும் போங்க, அட இப்புடிப் போண்ணே! மகா தைரியக்காரப் புலிங்கதான்.

(ஒருவன் கையைப் பிடித்திழுத்து விட்டு வேகமாய்ப் போகும் ஒருவனிடம் போய்) ஏண்ணே, அண்ணே! இந் தாண்ணே! அட ஒன்னெத்தான்!

ஷெி ஆள்:- அட! யாரப்பாது! ஒனக்கு அறிவு கிறிவு இருக்கா இல்லையா? மனுஷெ அவசரமாப் போறானேன்னு இல் லாமே... ஆளைப்பாரு!... (முறைத்துப் பார்த்துக் கொண்டே போகிறான்)

(இதைக் கண்ட மற்ற இருவரும் சிரிக்கின்றனர்.)

ஒருவன்:- பார்த்தியாண்ணே! பார்த்துக்கோ... நான் அப்பவே சொன்னேனா இல்லையா?

3வது ஆள்:- (எாிச்சலாக) என்னத்தெச் சொன்னே? சொரக் காய்க்கு உப்பில்லேன்னா? — சொன்னானாம்.

மற்றவன்:- அவெம் போராண்ணே! நீ வேறே யாரு கிட்ட யாச்சுங் கேளண்ணேன்.

3வது ஆள்:- கேக்கத்தாம் போரேன். இதைக் கேட்டுத் தெரிஞ்சுக்களேன்னா அப்பறம் என்ன ஆம்பளே? (வேகமாய்ப் போகும் மற்றொரு ஆளிடம் போய்) அண்ணே! அண்ணே! அட ஒன்னைத்தான்னே! இங்கே...

ஷெி ஆள்:- அடச்சே போ. சமய சந்தர்ப்பம் தெரியாமே.

(அவனும் போய் விடுகிறான். வேறொருவனை நெருங்கி)

3வது ஆள்:- ஏய்யா, எல்லாரும் இப்புடிக் கூட்டங் கூட்ட மாப் போறாங்களே, இங்கே என்னா விசேசம்?

ஷெி ஆள்:- அட! இது தெரியாதா ஒனக்கு! நல்ல ஆளையா நீ.

3வது ஆள்:- நாங்க இந்த ஊருக்கே புதுசி. இப்பத்தாம் மொத மொத இந்த ஊருக்கே வர்ரோம். அதுனாலே தான் ஒங்களே ......

ஷெடி ஆள்:- சரி சரி, சொல்றேங் கேள். நாளைக்கி இந்த ஊரு மகாராஜாவுக்குக் கண்ணாலம். அதுக்காகத்தான் இந்த அலங்காரங்களெல்லாம். அரண்மனையிலே யார் போனாலும் மூக்கைப் பிடிக்க சாப்பாடும், பணமுங் காசும், துணியும் மணியும், நகையும் நட்டுமா ஏராளமா வாரி வாரி இரைக்கிறாங்க. தெரிஞ்சுதா விஷயம். உம். நீங்க வந்தாலும் கிடைக்கும். வாங்க வாங்க; சீக்கிரம் போங்க!

(போகிறான்)

3வது ஆள்:- கேட்டிகளா! நமக்கு இன்னெக்கு நல்ல வேட்டைதான்.

மற்றவன்:- ஆமாமா; இன்னெக்கி நம்ம நரி மொகத்திலே முழிச்சிருப்போம் போலேருக்கு. வாங்க வாங்க; சீக்கிரம் போவோம்.

3வது ஆள்;- (திரும்பிப் பார்த்து ஷெடி ஆளைக் காணாது திகைத்து) அடடே, அந்த ஆளை விட்டுட்டோமே! (சுற்றிப்) பார்த்து அதோ போறாரு. உம் வாங்க; சீக்கிரம் வாங்க. அந்த ஆள்கூடவே அரமனைக்குப் போயிடலாம். அண்ணே! அண்ணே! நில்லுண்ணே; நாங்களும் வர்றோம். அண்ணே ஒன்னெத்தாண்ணே (சத்தம் போட்டுக் கொண்டே ஓடுகிறார்கள்.)

[திரை]

## காட்சி —7.

**இடம்**:—குலோத்துங்கன் அரண்மனை. **காலம்—பகல்**

(அரண்மனை தேவலோகமாகத் திகழுகிறது. அரச குடும்பத்தினர்களும் புலவர்களும் பொதுமக்களும் நிறைந்திருக்கின்றனர். நகரா, துந்துபி முதலிய மங்கல வாத்தியங்கள் முழங்க யாவரும் வாழ்த்துரைக்க குலோத்துங்கச் சோழனுக்கும் குணவதிக்கும் திருமணம் நடைபெறுகிறது.)

**(திரை)**

## காட்சி—8.

**இடம்**;- பாண்டியன் அந்தப்புரம். **காலம்**:- **பகல்.**

(ஏவலாளர்கள் பெட்டிகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்கள் முதலியவற்றைத் தூக்கிக் கொண்டு செல்லுகின்றனர். அமைச்சர் முதலியோர் ஏவலாளர்களைத் துரிதப்படுத்துகின்றனர். அரசரும் புலவரும் அங்குவர மற்றவர்கள் வணங்குகிறார்கள்.)

பாண்டியன்:- என்ன அமைச்சரே! பிரயாணத்திற்கு வேண்டிய காரியங்கள் எல்லாம் சித்தமாகி விட்டதல்லவா?

மதிவாணர்:- ஆம்; அநேகமாகச் சித்தமாகிவிட்டது.

பாண்டியன்.- சரி; சீக்கிரம் ஆகட்டும். யாரங்கே?

ஒரு ஏவலாள் வந்து வணங்குகிறான்.)

குணவதி முதலியோர் பிராயணத்துக்குத் தயாராகி விட்டார்களா வென்று பார்த்துவா!

ஏவலாள்:- உத்தரவு.

(போகிறான்.)

பாண்டியன்:- அமைச்சரே! குறிப்பிட்ட நேரம் நெருங்கி விட்டது. நீங்கள் முன்னதாகப் போய் யானை, குதிரை, ஒட்டை, ரதம், சிவிங்கிகள் முதலியவைகளை அணி வகுத்துத் திட்டம் செய்யுங்கள். இதோ நானும் புலவரும், குணவதி முதலிய எல்லோரையும் அழைத்து வருகிறோம்.

மதிவாணர்:- அப்படியே ஆகட்டும்.

(போகிறார்.)

(குணவதியின் தோழி குமுதம் வருகிறாள்.)

பாண்டியன்:– என்ன குமுதா! அங்கே எல்லோரும் புறப்படத் தயார்தானே?

குமுதா:- ஆம்; எல்லாம் தயார்தான்......ஆனால்!......

பாண்டியன்;- ஆனாலென்ன குமுதா?

குமுதா:- இன்று காலையிலிருந்தே மகாராணியும் இளவரசியும் அழுதுகொண்டே இருக்கிறார்கள். நாங்கள்எவ்வளவு தேற்றியும்......

பாண்டியன்;- என்ன! அழுகிறார்களா! ஏன் அழவேண்டும்?... ...உம்!....சரி;.நீ போய் அவர்களை இங்கேஅழைத்துவா.

குமுதா:- உத்தரவு.

(குமுதம் போகிறாள்.)

பாண்டியன்:- பேதைகள் இந்தப் பெண்களின் குணமே இப்படித்தான். எப்போது துக்கப்படவேண்டும்; எப் போது மகிழ்ச்சியடைய வேண்டும் என்ற வித்தியாசம் கூடத் தெரிவதில்லை.

புகழேந்தி:- ஆம்; இது இயற்கைதான். ஸ்வர்க்கபோகத்தில் திகழும் மணாளனை அடையப் பெற்றாலும் கூட, பெற்றோரை விட்டு நீங்கும்போது பெண்கள் வருந்தாமல் இருப்பதில்லை. காரணம், பெண்கள் அன்பின் அவதாரங்கள் அல்லவா (கண்ணீருடன் குணவதி குமுதத்தின் கையைப் பற்றிய படி வருகிறாள். ராணி புனிதவதியும் அழுதுகொண்டே வருகிறாள்.)

பாண்டியன்:- (அன்புடன் குணவதியின் சிரத்தை வருடி) குணவதி! இது என்ன பேதமை! கலையறிவு மிக்க நீயா இப்படிக் கவலை கொள்வது? பெண்கள் என்றைக் காவது ஒரு நாளைக்குப் பெற்றோர்களைப் பிரிந்து கணவன் வீடு செல்ல வேண்டியவர்கள்தானே? இதற்காகவா இப்படி சிறுகுழந்தைபோல் அழுவது?...... அழாதே அம்மா! குணவதி அழாதே.

குணவதி:- இளமை முதல் பிரிந்தறியாத நான் உங்கள் எல்லோரையும் பிரிந்து எப்படித் தனிமையிலிருப்பேன் அப்பா?

பாண்டியன்:- குணவதி! நீ தனிமையிற் போக வேண்டாம். உனக்கு இஷ்டப்பட்ட தோழிகளையும், பணியாளர் களையும் அழைத்துக் கொள்ளலாம்.

புகழேந்தி:- (ராணியை நோக்கி) மகாராணி, நீங்களே இப்படி துக்கப்பட்டால் குணவதியைத் தேற்றுவதுதான் யார்?

புனிதவதி:- ஒருகணமும் பிரிந்தறியாத என் இன்பக்கிளியை நான் எப்படி ஸ்வாமி பிரிந்திருப்பேன்?

(மகாராணியும் குணவதியும் அழுவதைக் கண்டு மன்னனும் கண்கலங்குகிறார்.)

பாண்டியன்:- கண்மணி; வீணே வருந்தாதே! உனக்கு வாய்த்திருக்கும் மணாளர் மகா உத்தமர்! உனக்கு ஒரு குறையும் நேராது. மனதைத் தேற்றிக் கொள். அதோ பார்! நீ வருந்துவதைக் கண்டு உன் தாயும் வருந்து கிறாள்.

புகழேந்தி:- குணவதி! பெண்களுக்கு கணவரிலும் சிறந்த துணைவருண்டோ? உலகில் இளமையிற் பெற்றோர் ஆதரவிலும், கருத்தறிந்த பின் கணவர் ஆதரவிலும் முதுமையில் மக்களின் ஆதரவிலும் இருக்க வேண்டியது தானே பெண்களின் கடமை! மேலும், இல்வாழ்க்கை யென்னும் இன்ப வாழ்வைத் தொடங்கப் போகும் நீ முதன் முதலில் புறப்படும் போது இப்படி அழலாமா?

குணவதி:- நீங்களெல்லாம் எப்பொழுதப்பா வருவீர்கள்?

பாண்டியன்:- நீ எப்போது விரும்பினாலும் வருகிறோம். சோழ நாடு அவ்வளவு தூரமல்லவே! நீ விரும்பும்போது ஒரு தூதுவனை அனுப்பினால் மறுநாளே அங்கு வந்து சேருவோம்! கண்ணே! இதோ உன் உன் உயிர்த் தோழி இருக்கிறாள். இன்னும் உனக்கு என்ன வேண்டுமானா லும் கேள்; தருகிறேன்.

குணவதி:- உண்மையில் நான் எது கேட்டாலும் தருவீர் களல்லவா, அப்பா?

பாண்டியன்:- கண்மணி! நீ இந்த நாட்டின் இளவரசியா யிற்றே! நீ கேட்பதைக் கொடுக்காமல் வேறு யாருக்குக் கொடுக்கப் போகிறேன்? குணவதி!

குணவதி:- அப்படியானால் புலவர் பெருமானையும் என் னுடன் அழைத்துக் கொண்டு போகட்டுமா, அப்பா?

பாண்டியன்-- கண்மணி! நீயும் புலவரும் எனக்கு இரு கண்களுக்கு நிகரல்லவா! நீங்கள் இருவரும் ஏக காலத்தில் என்னை விட்டுப் பிரிந்துவிட்டால்!...என் வாழ்க்கை இன்பமே நசிந்து விட்டதைப் போலல்லவா இருக்கும்?

குணவதி:- என் உயிருக்கும் உள்ளத்துக்கும் இன்பமளிப்பது கலையமுதமல்லவா, அப்பா? புலவரைப் பிரிந்தால் என் இதயத்தில் எரியும் இலக்கிய தீபம் ஒளி குன்றி விடாதா?

பாண்டியன்:- புலவரே! இதென்ன பிடிவாத குணம்? பார்த்தீர்களா! தங்களையும் பிரிந்து நான் எப்படித் தனித்திருக்க முடியும்?

புகழேந்தி:- அரசே! இருதலைக் கொள்ளியிடை எறும்பென இருக்கின்றது என் நிலை, ரஸிக சிகாமணியாகிய தாங்களோ அன்புத் தெய்வம். குணவதியோ எனது இலக்கியச் சுடர். இந்நிலையில் நான் யாரைத் தொடர்வது? யாரைத் துறப்பதென்பது தெரியாமல் தவிக்கிறேன். ஆகையால் தங்கள் ஆணையெதுவோ அதன்படி நடப்பதே என்கடன்.

பாண்டியன்:- (சற்றுநேரம் மௌனமாகச் சிந்தனையிலாழ்ந்து, பின் தனக்குள்) ஆம் .....! இலக்கியமின்றேல் புலமையில்லை, புலமையின்றேல் இலக்கியமில்லை. இவை இரண்டும் ஒன்று சேர்ந்த உள்ளத்திலிருந்து தானே உலகம் வியப்படையும் உயர்ந்த கற்பனா சிருஷ்டியாகிய கவிதைகளும் தோன்றுகின்றன! (சற்று மௌனம்) ஆம்; குணவதியிடத்தில் என்னைக் காணலாம். ஆனால்!...என்னிடத்தில் குணவதியைக் காண முடியாதல்லவா? (மீண்டும் சற்று மௌனம்) குணவதி! உன் விருப்பப்படியே ஆகட்டும். ஆனால், என்னைப் பித்த-

னாக்கிவிடாதே! புலவரின் நிரந்தரப் பிரிவை என்னால் சகிக்க முடியா தென்பதையும் நீ மறந்துவிடாதே.

(எல்லோரும் மௌனத்திலிருக்கிறார்கள். குலோத் துங்கனும் மதிவாணரும் வருகிறார்கள்.)

குலோத்:- அரசே வணக்கம்:

(யாவரும் தூக்கத்திலிருந்து விழித்தவர்களைப் போல் திடுக்கிட்டு உணர்வு வரப்பெறுகின்றனர். குலோத்துங்கனைக் கண்ட குணவதி மான் குட்டியைப் போல் நாணத்தோடு ஓடி மறைகிறாள். மகாராணியும் சென்று விடுகிறாள்.)

பாண்டியன்:- வாருங்கள்! வாருங்கள்! உம், அதிகத் தாமத மாகி விட்டதோ?

குலோத்:- இல்லை; தருணம்தான்.

பாண்டியன்:- இதோ புறப்பட வேண்டியது தான். உம். குமுதம்! நீ சீக்கிரம் போய் குணவதியைப் பிரயாணத் திற்குச் சித்தப்படுத்தி இங்கு அழைத்துவா.

குமுதம்:- உத்தரவு.

(குமுதம் போகிறாள்.)

பாண்டியன்:- மதிவாணரே, மற்ற ஏற்பாடுகள் எல்லாம் முடிந்து விட்டனவல்லவா?

மதிவாணர்:- ஆம். எல்லா ஏற்பாடுகளும் முடிந்தன. புறப்பட வேண்டியதுதான்.

(குமுதம் குணவதியை அழைத்து வருகிறாள். மகா ராணியும் வருகிறாள்.)

புகழேந்தி:- குணவதி! அன்னை, தந்தை, மற்றுமுள்ள பெரியோர்கள் எல்லோரையும் வணங்கிக்கொள்.

(குணவதி குமுதத்தின் துணை கொண்டு யாவரையும் வணங்கி ஆசி பெறுகிறாள். குலோத் துங்கனும் வணங்கி ஆசி பெறுகிறான்.)

பாண்டியன்:- சோழர் குலத்தின் சுடர்மணி விளக்கே! கண்டிப்பும் கட்டுப்பாடும் கவலையும் இன்னதென்றே தெரியாமல் வளர்ந்த என் அருந்தவப் புதல்வி இன்று முதல் தங்கள் அடைக்கலம். அறிவிலும் அனுபவத் திலும் வயதிலும் சிறியவளாகிய குணவதியின்பால் குற்றம் காண்பினும், மன்னித்து மாசு நீக்கி இல் வாழ்க்கை யென்னும் இன்பத்துறைக்குத் தோன்றாத் துணையாயிருந்து மகிழ்ச்சியுடன் அறிவுரை புகட்டி ஆதரிப்பது இனி உங்கள் கடன். குணவதியின் விருப்பப் படியே எமது அரசவைப் புலவரையும் கௌரவச் சீதன மாக அனுப்புகிறேன். பெருமை மிக்க அவரைக் கௌர விக்க வேண்டியதும் தங்கள் பொறுப்பேயாகும்.

குலோத்:- மாட்சிமை தங்கிய மன்னரே; சோழர் குலத் திருவிளக்கைத் தூண்டுவிக்கப் போகும் திருமகளும் கலை மகளும் தங்கள் திருமகளே என்பதுதான் எங்கள் முடிவு' புலவர் பெருமானின் வருகை எங்கள் மகிழ்ச்சியை அதிகப் படுத்துவதுடன் சோழமண்டலமே புனிதமும் புளகமும் அடையுமென நினைக்கிறேன்.

பாண்டியன்:- இந்த மகிழ்ச்சியும் அன்பும் என்றும் நம் இரு நாட்டினரிடையேயும் நிலவ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக!

(திரை)

## காட்சி—9.

**இடம்**:- மதுரைமா நகரில் ஒரு முக்கிய வீதி. **காலம்** - மாலை.

(மீனக் கொடிகளும் புலிக் கொடிகளும் தாங்கிய வீரர்களும் வாள், வேல் முதலிய ஆயுதங்கள் தாங்கிய குதிரை வீரர்களும் அணிவகுத்துச் செல்லுகின்றனர். பேரிகை, சங்கு, தாரை முதலிய வாத்தியங்கள் முழங்க குலோத்துங்கன், குணவதி, பாண்டியன், புகழேந்தி முதலிய யாவரும் பல்லக்குகளில் அமர்ந்து செல்லுகின்றனர். எங்கும் நிறைந்து நின்று காட்சியைக் காணும் மக்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் 'மன்னர் நீடூழி வாழ்க! இளவரசி வாழ்க! சோழ மன்னர் வாழ்க!' என்று பலவாறு ஆரவாரிக்கின்றனர். மன்னரும் இளவரசியும் புன்முறுவலோடு மக்களுக்கு விலையுயர்ந்த பொருள்களையும் பொற்காசுகளையும் வழியனைத்தும் வாரியிறைத்துக் கொண்டே செல்லுகின்றனர்.)

**(திரை)**

## காட்சி—10

**இடம்**—மலர் வனம் **காலம்**—மாலை

(குணவதி குமுதத்துடன் உலாவுகிறாள்)

குணவதி:- ஆஹா! என்ன அற்புதம்! எவ்வளவு அழகான காட்சியடீ! குமுதம், அதோ பார்! அந்த மாலைக் கதிரவனின் ஆனந்தமயக் காட்சியைக் காணக் காண எவ்வளவு குதூகலம் உண்டாகின்றது; பார்த்தாயா?

குமுதம்:- குணவதி! உன்னுடன் எப்போதும் இந்தத் தொல்லைதான். மலர்வனத்துக்கு வந்தால் கொஞ்ச

நேரம் வேடிக்கை பார்த்தோம்; ஆடினோம்; பாடி னோம்: போனோமென்றிருப்பதே இல்லை. சதா......... அதைப் பார்; இதைப்பார்; அங்கே பார்; இங்கே பார் என்று தொல்லை செய்து கொண்டே இருந்தால் நான் எதை என்று பார்ப்பது?

குணவதி:- கண்ணுக்கும் புலனுக்கும் களிப்பை யுண்டாக்கும் இன்பக் காட்சிகளைக் காண்பதா உனக்குத் தொல்லையா யிருக்கிறது! நீ ஒரு அதிசயப் பிரகிருதியடீ, குமுதா!

குமுதம்:- பின்னே? என்ன, எப்போதும்தான் பார்த்துப் பார்த்துச் சலித்துப்போய் இருக்கிறோமே! இதில் பார்க் காத அதிசயம் புதிதாக என்ன இருக்கிறதாம் பார்ப்ப தற்கு?

குணவதி:- என்ன! இறைவனின் எல்லையற்ற இயற்கை அழகெல்லாம் பார்த்துப் பார்த்துச் சலித்து விட்டதா உனக்கு! அடடா என்ன ரசிகமணியடீ நீ!

குமுதம்:- இல்லை; உணர்ச்சியற்ற ரசிக உள்ளமற்ற வெறும் கட்டை யென்றுதான் வைத்துக் கொள்ளேன்.

குணவதி:- வைத்துக் கொள்வதென்ன? அதில் இன்னுமா உனக்குச் சந்தேகம்! கட்டையேதான் நீ. இல்லா விட்டால் மாலைக் காட்சியின் வனப்பைக் காண்பதில் சலிப்புண்டாகுமா உனக்கு?

குமுதம்:- ஆமாம். சொல்லமாட்டாயா என்ன? கட்டை யென்றும் சொல்லுவாய். இனிமேல் கருங்கல்லென்று கூடச் சொல்லுவாய், நீயா சொல்லுகிறாய்? உன்னைப் பிடித்திருக்கிறதல்லவா, கவிதைப் பைத்தியம். அது வல்லவா உன்னை இப்படியெல்லாம் பேசச் சொல்லு கிறது.

குணவதி:- யார்?-நானா பைத்தியம்! உம்!—ஆம். இயற்கை எழிலைக் கண்டு ரசிப்பது, மனித சக்திக்கும் கற்பனைக்கும் எட்டாத வர்ண பேத நிகழ்ச்சிகளைக் காட்டும் மாலைவனப்பைக் கண்டு வியப்பது, ஜீவசிருஷ்டிகளின் விநோதச் செயல்களைக் கண்டும் பறவைகளின் இன்னிசையைக் கேட்டும் உவப்பது, மணமும், மனத்தைக் கவரும் எழிலும் நிறைந்த மலர்களைக் கண்டு களிப்பது, இலக்கிய இன்பத்திலும், கவிதை இன்பத்திலும் லயித்து தன்னை மறந்த பரவச நிலையை அடைவது; இவையெல்லாம் பைத்தியங்களின் செய்கைதானே?

குமுதம்:- இல்லை; அதற்குத்தான் உங்கள் கவிஞர் கூட்டத்தினர் ரசனை என்றொரு மாறு பெயரும் வைத்திருக்கிறார்களே! அப்படியும் சொல்லலாமல்லவா?

குணவதி:- ஆமாம்; குமுதா! நீ சொல்வதும் ஒருவகையில் உண்மைதான். கவிஞனும் ரசிகனும் சில சமயங்களில் உண்மையிலேயே பைத்தியமாகத்தான் ஆகிவிடுகிறார்கள். காரணம், அவர்கள் எந்தப் பொருளைக் கண்டாலும் அப்பொருளின் உட்பொருளைக் காண முயற்சிக்கின்றனர். அப்பொழுதுதான் அவர்கள் சித்திரத்தில் ஜீவனையும், கற்சிலையில் காவியத்தையும், இயற்கை எழிலில் இறைவனின் சக்தியையும் காணுகின்றனர். கவிஞர்கள் முன்பு கற்பனையிற் கண்ட அற்புதங்களல்லவா, இன்று ஒப்பற்ற காவியங்களாகவும் கவிதைகளாகவும் திகழுகின்றன. ஆஹா! வசந்தம் பூத்துக் குலுங்கும் புது மலர் மணத்தை வாரி யிறைத்துப் புளகமுண்டாக்கும் இவ்வின்ப வேளையில்......

குமுதம்:- (இடைமறித்து) மகாராஜாவும் உன்னுடன் இருந்தால் உனக்கு இன்னும் குதூகலமாகத்தான் இருக்கும்.

குணவதி:- சீ! போடி; இதுதான் உனக்குத் தெரியும். சந்தர்ப்பம் தெரியாமல் இப்படி யெல்லாம் பேசினால் எனக்குக் கோபம் வரும்.

குமுதம்:- வரும்; வரும்; உள்ளதைச் சொன்னால் கோபம் வராதா பின்னே?

குணவதி:- பின்னே என்னடியது? நானொன்று சொன்னால் நீ யொன்று சொல்கிறாயே!

குமுதம்:- நீ என்ன சொன்னாய்?

குணவதி:- இந்த இன்பக் காட்சிகளை யெல்லாம் புகழ்ந்து பாட இப்போது நம்முடன் புலவர் இல்லையே என்று...

குமுதம்:- ஆஹாஹா! சோழ நாட்டின் மகாராணிக்குப் புலவரைப் பற்றிய ஞாபகம்கூட இருக்கிறதே! ஆச்சரியம் தான்......!

குணவதி:- குமுதா! நீ என்னடி சொல்லுகிறாய்?

குமுதம்:- ஆமாம் நீ நமது நாட்டில் இருந்தபோதெல்லாம் புலவரை ஒரு நாளாவது பார்க்காமல் இருப்பாயா? மன்னரின் காதல் வலையில் வீழ்தாலும் வீழ்ந்தாய்! உலகையே மறந்து விட்டாய்! உங்கள் காதல் விளை யாடல்களுக்கு இடையூறாயிருக்க வேண்டாமென்று தானோ என்னவோ! புலவரும் பல நாட்களாக நம் அந்தப்புரம் பக்கமே வருவதில்லை.

குணவதி:- உண்மைதான். நானும் அவரைப் பார்த்து வெகு நாட்களாகி விட்டன. ஆனால் கற்பனை உலகில் திரியும் கவிஞர்களின் மனம் எப்போதும் ஒரே இடத்தில் நிலைத்திருக்க முடியாதல்லவா?

குமுதம்:- நல்ல கற்பனை உலகமம்மா இது! இப்படியே அவர் கற்பனை உலகிலும் நீ காதல் உலகிலும் சஞ்சரித்துக் கொண்டிருந்தால் நான் எந்த உலகில் சஞ்சரிப்ப தென்பதுதான் எனக்குப் புரியவில்லை. நீ சொல்வது போல் புலவர் கற்பனை உலகிலோ சொப்பன உலகிலோ இருப்பதாகத் தெரியவில்லை. சதா கவலை உலகில் தான் இருக்கிறார்.

குணவதி:- என்ன! கவலையா? புலவருக்கா?

குமுதம்:- ஆமாம்; அவர் யாரிடமும் எதையும் சொல்லுவ தில்லை. பல முறை வருந்தி அழைத்தும் கூட அவர் அந்தப்புரத்திற்கு ஏனோ வருவதில்லை. நீயும் அவர் விஷயத்தில்......!

குணவதி:- அவர் கவலைக்குக் காரணம்?

குமுதம்:- கூத்தர் தான்.

குணவதி:- கூத்தரா!

குமுதம்:- ஆமாம். கூத்தரின் பொறுமைக்குப் பலியான புலவர்கள் கணக்கற்றவர்களாம். இன்னும் இன்றும் கூடச் சிறையில் சித்திரவதைப்படும் புலவர்கள் எத்தனையோ பேராம். இவ்விஷயத்தில் மகாராஜாவும் கூத்தரின் கைப்பாவையா யிருக்கிறாராம். நமது புலவரின் கவலைக்கும் அதிருப்திக்கும் இதுதான் காரணம்.

குணவதி:- சரி; அதோ மகாராஜாவும் வருகிறார். இதைப் பற்றி நான் அவரிடமே கேட்கிறேன். நீ சற்று மறைவாயிரு.

குமுதம்:- அப்படியே.

(குமுதம் போகிறாள். குலோத்துங்கன் வருகிறான். குலோத்துங்கனைப் பார்த்தும் பாராதவளைப் போலிருக்கிறாள் குணவதி.)

குலோத்:- குணவதி! நீ தனியாகவா இங்கு வந்தாய்? குமுதம் வரவில்லையா உன்னுடன்?

குணவதி:- வந்தாள்.

குலோத்:- ஆனால், எங்கே?

குணவதி:- எங்காவது போயிருப்பாள்.

குலோத்:- உனக்குத் தெரியாமலா? குணவதி! உன் முகம் ஏன் வாடியிருக்கிறது? (முகத்தைக் கையால் திருப்பி) ஹா! அழுதுகூட இருக்கிறாயே! காரணம்?

குணவதி:- காரணம்; சோழநாட்டின் மகாராணியானதுதான்

குலோத்:- குணவதி! நீ சொல்வதொன்றும்......

குணவதி:- ஆமாம்; கூத்தரின் கைப்பாவையாக இருக்கும் தங்களுக்கு யார் எதைச் சொன்னாலும் புரியாதுதான்.

குலோத்:- குணவதி! இது அவசியமில்லாத வார்த்தை. மேலும் கூத்தரை என் முன் யாரும் அவமதிக்கச் சகியேன். கூத்தர் என் கலைக்கண்களைத் திறந்தவர். வாழ்க்கைப்பாதையை வகுத்துக் காட்டியவர். அவர் விருப்பத்திற்கு மாறாக இந்நாட்டில் எதுவும் நடவாது. அதுதான் அவர் அன்புக்கு நான் செய்யும் கைம்மாறு.

குணவதி:- அவர் விருப்பம் அக்கிரமத்தையும் அநீதியையும் விளைவிப்பதாயின்?

குலோத்:- அவர் முடிவு எதுவும் நியாயமானதாயிருக்கும் என்பதுதான் என் நம்பிக்கை.

குணவதி:- என்ன நியாயம்? கற்றறிந்த புலவர்களையும் கவிஞர்களையும் அவமதித்துச் சிறையில் வைத்துச்

சித்திரவதை செய்வது; இருவர் தலையை ஒன்றாய்ப் பிணைத்துத் தேவியின் பெயரால் பலியிடுவது. இதுதான் நியாயமோ?

குலோத்:- ஆம்; இலக்கிய மணமறியாதவர்களும், கவிதா ஞானமே இல்லாதவர்களும், இலக்கணத்தைப் பற்றிக் கேள்விகூட இல்லாத கயவர்களும் புலவர்களென்று ஏன் வெளியே வரவேண்டும்? இத்தகைய அரைவாயர் களையெல்லாம் அவ்வப்போது தக்கபடி தண்டித்து அடக்காவிட்டால், உண்மைப் புலவர்களுக்கு இழிவுண் டாவதுடன் தமிழ்வளர்ச்சிக்கு இடையூறல்லவா?

குணவதி:- ஆஹாஹா! தாங்கள் தமிழை வளர்க்கக் கையாளும் முறை வெகு விநோதமாயிருக்கிறது. கலையார்வ மிகுதியால் தமிழ்த் தொண்டு செய்ய வரும் ஆரம்பப் புலவர்களையும் கவிஞர்களையும் ஆதரித்து அவர்களிடமுள்ள குறைகளை அன்புடன் எடுத்துச் சொல்லித் திருத்தி முன்னேற்றத்திற்குக் கொண்டு வருவதை விட்டு, ஆரம்பத்திலேயே அவர்கள் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டு சிறையும் சித்திரவதையும் சிரச்சேதமும் செய்வது தான் தமிழை வளர்க்கும் முறை யென்று சொல்வதைவிட தமிழை அழிக்கும் முறை யென்று சொல்வதே பொருந்தும்.

குலோத்:- குணவதி! இது அரசியல் விஷயம். இதில் நீ தலையிடுதல் முறையல்ல.

குணவதி:- நானும் ஒரு ராஜகுமாரிதான். மேலும் ராஜ மகிஷியாக வேறு இருக்கிறேன். நானும் அரசியல் கலைகள் பயின்றிருக்கிறேன். என்னால் இத்தகைய கொடுமைகளைப் பொறுத்திருக்க முடியாது. அது மட்டுமல்ல; கூத்தரின் கொடுஞ்செயலால் என் தந்தையின் அபிமானப் புலவரும் என் ஆசிரியருமாகிய புகழேந்திப் புலவரும் வருந்துவதாகத் தெரிகிறது.

குலோத்:- திறமையிருந்தால் அரச சபையிற் கூத்தரின் கேள்விகளுக்குப் பதிலளித்துச் சமத்துவம் பெறலாம். இன்றேல் தோல்விக்கு வருந்த வேண்டியது நியாயம் தானே?

குணவல்:- தோல்வி யாருக்கென்பதைக் கூத்தரையே கேட்டால் சொல்லுவாரே! தங்களுக்குப் பெண் பேச வந்த போது பாண்டிய நாட்டரசவையில் சந்தர்ப்ப மறியாது பேசி எங்கள் புலவரால் தோல்வியடைந்து யாவராலும் அவமதிக்கப்பட்டு வெட்கி நின்ற கூத்தர் தானே தாங்கள் இப்போது புகழ்ந்து பேசும் கூத்தர்?

குலோத்:- குணவதி! எல்லாம் எனக்குத் தெரியும். கூத்தர் என்ற மதயானையைப் பகைத்த எந்தப் புலவனும் மீண்டதில்லை. ஆனால்......உன் பொருட்டு...! புகழேந்தி இன்னும் அவர் கோபத்திற்குத் தப்பியிருக் கிறார். ஞாபகமிருக்கட்டும்.

குணவதி:- இல்லை; எனக்காகவுமில்லை. கூத்தர் என்ற மதயானை புகழேந்தி என்ற சிங்கத்தைக் கண்டு மருண்டு ஒதுங்கியிருக்கிறது.

குலோத்:- குணவதி! வினையை விலைகொடுத்து வாங்க முயற்சிக்கிறாய்.

குணவதி:- இல்லை. நியாயத்திற்குத்தான் வாதாடுகிறேன்.

குலோத்:- நியாயம் எனக்குத் தெரியும். இனி எப்பொழுதும் நம்மிடையே இத்தகைய வாதம் நிகழக் கூடாதென்பது ஞாபகமிருக்கட்டும். நான் வருகிறேன்.

(கோபத்துடன் செல்லுகிறான்)

(திரை.)

இதை அடுத்து - விகடகவி புகழேந்தியைத் தேடி வந்து அளவளாவி மகிழ்தல். கூத்தர் குறுக்கிட்டுப் பேசி அவமானமும் ஆத்திரமும் அடைதல்.

## காட்சி—11.

**இடம்** - வசந்த மண்டபம். **காலம்** - மாலை

(குலோத்துங்கனும், உதயணரும் வருகின்றனர்.)

குலோத்:- மதிவாணரே! புகழேந்தியைக் காண்பது கூடக் கடினமாயிருக்கிறதே! சில நாட்களாக அரசவைக்குக்கூட வருவதில்லையே! காரணமென்ன?

மதிவாணர்:- ஆம்; அரசவைக்கு மாத்திரமல்ல, அரண்மனைப் பக்கமே வருவதில்லை. கூத்தர் புலவர்களைச் சிறையிட்டு வருத்துவதில் அவருக்கு அதிருப்தி அதிகம்.

குலோத்:- இது தங்களுக்கு எப்படி தெரியும்?

மதிவாணர்:- என்னிடமே நேரில் இதைப்பற்றிப் பல முறை சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டார்.

குலோத்:- அரசியல் விஷயங்களில் பிறர் தலையிடுவது குற்றமல்லவா? மேலும் இவரால் பொதுஜன அமைதிக்கும் பங்கம் விளையும் போலல்லவா தெரிகிறது?

மதிவாணர்:- ஆம்; ஆனால் இதைப்பற்றி அவர் வேறு யாரிடத்திலும் பிரஸ்தாபித்ததாகத் தெரியவில்லை.

(கூத்தர் வருகிறார்.)

குலோத்:- புலவரே! வாருங்கள். இப்படி அமருங்கள். ஏன் ஏதோ பதட்டத்துடன் இருப்பதுபோல் தோன்றுகிறதே. காரணம் என்ன?

கூத்தர்:- காரணம் புகழேந்திதான். நான் அகம்பாவம் பிடித்து அலைகிறேனாம். பொறாமையால் புலவர்களைச் சிறையிட்டு வதைக்கிறேனாம். ஊர் முழுதும் தூற்றுவதோடு இன்று நேரிலும் என்னை அவமதித்துப்

பேசிவிட்டான். மேலும் அவனது பாண்டிய நாட்டுத் தோழனாம் ஒரு கோமாளி. பெயர் விகடகவியாம் அவன் வேறு எவ்வளவு அவமதிப்பாகப் பேசிவிட்டான் தெரியுமா?

குலோத்:- அமைச்சரே! கேட்டீர்களா விஷயத்தை. புகழேந்தியின் விஷமம் அளவுக்கு மிஞ்சிவிட்டது. உடனே தக்க பாடம் கற்பிக்கவேண்டும்.

கூத்தர்:- முன்பே அவன் பாண்டியனின் அவையில் உங்களையும் என்னையும் அவமதித்த குற்றத்திற்குத் தக்க தண்டனையளியாது.மன்னித்துவிட்டதாலல்லவா இன்று இப்படிப் பேசுகிறான். எந்தப் புலவர்களுக்காக அவன் பரிந்து பேசுகிறானோ அந்தப் புலவர்கள் இருக்கும் சிறைச்சாலையிலேயே அவனையும் போட்டு வதைத்தால் அவன் இப்படியெல்லாம் பேசுவானா?

குலோத்:- ஆம்; தாங்கள் சொல்வதுதான் சரி; உடனே செல்லுங்கள். புகழேந்தி எங்கிருந்தாலும் தேடிப் பிடித்துச் சிறையிடச் செய்யுங்கள். அவருடன் இருக்கும் அந்தக் கோமாளியையும் சிறையிடுங்கள். அமைச்சரே! இதை முதலில் செய்தபிறகுதான் வேறு வேலை பார்க்க வேண்டும்.

உதயணர்:- அரசே! எதற்கும் புகழேந்திப் புலவரை நேரில் அழைத்துத் தாங்களே விசாரித்துப் பார்த்து......

குலோத்:- உதயணரே! கொக்கின் தலையில். வெண்ணெயை வைத்துப் பிடிக்க முயற்சிப்பது போல் இருக்கிறது தங்கள் யோசனை. நான் விசாரிக்கவேண்டிய அவசியமேஇல்லை. நான் சொன்னபடி இன்றிரவுக்குள் புகழேந்தியையும். விகடகவியையும் சிறையிடவேண்டும். இது என் கட்டளை புலவரே? வாருங்கள்; அரண்மனைக்குப் போகலாம்.

(அரசனும் கூத்தரும் செல்கின்றனர்.)

[திரை]

## காட்சி—12.

**இடம்**—உறையூரில் ஒரு வீதி. **காலம்**—பகல்.

(பொதுமக்கள் கூடிப் பேசிக்கொண்டிருக்கின்றனர்.)

முதல் ஆள்:- என்னா அக்ரமம் பாத்திங்களா அண்ணே! ஒட்டக் கூத்தருடைய கொட்டம் எப்பத்தான் அடங்குமோ தெரியலையே!

2வது ஆள்:- ஏம்பா! என்ன விஷயம்?

முதல் ஆள்:- விஷயம் ஒனக்குத் தெரியாதா? பாண்டிய நாட்டிலேருந்து நம் மகாராணிகூட வந்திருந்தாருல்லே புகழேந்திப் புலவரய்யா! அவரையும் புடிச்சி சிறையிலே போட்டுட்டாராம் கூத்தர்!

2வது ஆள்:- உம்......! நெசமாவா! அடாடாடா, அவரு ரொம்ப நல்லவருல்லே! இந்த சமாச்சாரம் மகா ராணிக்குத் தெரிஞ்சா!......

முதல் ஆள்:- உம்; தெரியாமேதான் இருக்குமோ, மகா ராஜாவே கூத்தர் சொல்றபடியெல்லாம் ஆடும்போது, மகாராணி என்ன செய்யமுடியும்?

2வது ஆள்:- ஐயோ பாவம். இவரையும் வழக்கப்படி இந்த வருஷம் தேவி பூசையிலே பலி கொடுத்துடுவானே இந்தப் பாவி.

முதல் ஆள்:- ஊஹூம், அதுமட்டும் நடக்காதண்ணே. நடக்காது.

2வது ஆள்:- ஏன் நடக்காது?

முதல் ஆள்:- புகழேந்திப் புலவரும் படிப்புலே ரொம்பக் கெட்டிக்காரராம். அதுனாலே, கூத்தர் என்னாக் கேளுவியக் கேட்டாலும் சொல்லிப் புடுவாருன்னு எல்லாருமே பேசிக்கிறாங்க.

2வது ஆள்:- என்னமோப்பா. இந்தக் கூத்தர் செய்யறது எனக்குப் புடிக்கவே இல்லே.

2வது ஆள்:- ஒனக்கு மட்டுமா புடிக்கலே. ஊருலே எல்லாருக் குந்தா புடிக்கல்லே. மகாராஜாவே அவருக்கு ஒடந் தையா இருக்கும்போது யாருதான் என்ன செய்யறது.

முதள் ஆள்:- ஆமாம்பா, இது அரமனை விஷயம். நாம் இதைப்பற்றி பேசறதே யாராவது கேட்டா நம்ம உசிருக்கே ஆவத்தா முடியும். பெரிய எடத்துப் பொல்லாப்பெல்லாம் நமக்கு எதுக்கு? உம். வா வா; பொளைக்கிற வழியைப் பாப்போம்.

(போகிறார்கள்.)

[திரை.]

## காட்சி—13.

இடம்—சிறைச்சாலை. காலம் – பகல்

(புகழேந்தி, விகடகவி, மற்றும் புலவர்கள்.)

விகடகவி:- பழைய நட்பை எண்ணிப், பார்த்து விட்டுப் போகலாமென்று வந்ததற்கு நல்ல வெகுமதி கிடைத்ததையா.

புகழேந்தி:- வெகுமதிக் கென்ன குறை? கவிகளுக்கு வேண்டிய தென்ன? ஒன்று நிம்மதியான தனி இடம். இரண்டு, வயிற்றுக்குச் சிறிது உணவு. இவ்வளவுதானே! இரண்டும் நமக்குக் கிடைத்திருக்கிறது. பொழுதெல்லாம் ஓய் விருக்கிறது, அதோ பாரும்! அகண்ட வானத்திடை நிகழும் வருணபேத விசித்திரங்களையும், கதிரவனின் ஜொலிப்பையும், பறவைகளின் இனிய ஓசையையும், நதியின் எழிலையும், மகளிர் கூட்டம் தோகை மயில் களின் கூட்டத்தைப் போல் ஒய்யாரமாய் நடந்து சென்று தண்ணீரெடுத்துப் போகும் காட்சியையும், கண்டு களித்து எத்தனையோ கவிதைகளையும், காவியங் களையும் எழுதலாமே! சிறைச்சாலையைக் கண்டு நடுங்க நாமென்ன கோழைகளா?

விகடகவி:- சரி; சரி. இதுவும் இன்பமா? நல்ல இன்பமையா இது! கல்லையும் மண்ணையும் காற்றையும் ஊற்றையும் பாடிப் பொழுதைக் கழிக்க, உங்களைப் போல் எனக்கவ்வளவு பொறுமையில்லை. எண்ணி இன்னும் இருபது நாளைக்குள் இந்த இருட்டறையில் இந்தக் கூழைக் குடித்துக் கொண்டிருந்தால் நிச்சயம் யமலோக யாத்திரைதான். சரிதான். சரிதான். தெரியாமலா

உம்மைப் பொம்மை மாதிரி சீதனப் பொருள்களுடன் சேர்த்துக் கொடுத்தார் பாண்டிய மன்னர்?

புகழேந்தி:- கொடுத்ததிலென்ன? இப்போதும் குலோத்துங்க மன்னன் என்னைப் பொம்மைப் போலத்தான் நடத்துகிறார்.

விகடகவி:- இல்லை; கூத்தர் என்ற குரங்கின் கையில் சிக்கிய பூமாலையாகி விட்டீர்கள்.

புகழேந்தி:- அது என் தவறல்லவே!

விகடகவி:- தவறு யாருடையதாக வேனும் இருக்கட்டும். அதன் பலனாக விளைந்த தண்டனையில் எனக்கும் பங்கு கிடைத்ததை நினைக்க நினைக்கத் தான் என் வயிறு எரிகிறது. அட கடவுளே...! வீட்டை விட்டு, ஊரை விட்டு, மனைவி மக்களை விட்டு இதற்குத்தானா நான் இங்கே வந்து சேர்ந்தேன்? இதுவும் என் தலையெழுத்தா!

(மற்ற புலவர்கள் வருகிறார்கள்.)

வேளாளன்:- ஐயா! உங்களுக்கு மட்டுமா தலையெழுத்து! எல்லோருக்குமேதான். நல்ல புலமையையும் பைசாசக் குணத்தையும் படைத்த இந்தக் கூத்தன், நம்மைப்போல் இன்னும் எத்தனை புலவர்களை இந்தத் துர்க்கைக்குப் பலியிடப் போகிறானோ! யார் கண்டார்கள்?

விகடகவி:- என்ன!......பலியா? துர்க்கைக்கா......! புலவர்கள் எல்லோரையுமா?......ஐயையோ!...

தட்டான்:- நாங்களும் அதை நினைந்துதான் வருந்திக் கொண்டிருந்தோம்.

புகழேந்தி:- அப்படியானால் நீங்கள் யாவரும் புலவர் கள் தானா?

குயவன்:- இல்லை. ஏதோ கொஞ்சம் படித்திருக்கின்றோம். வறுமையின் கொடுமை நீங்க ஏதேனும் சிறிது பொருள் பெறலாமென்று வந்த எங்களை இப்படிச் சிறையிட்டனர் குலோத்துங்கனும், கூத்தரும்.

புகழேந்தி:- பரிசில் பெற வந்த உங்களைச் சிறையிடக் காரணம்?

தச்சன்:- அதுதான் இந்தக் கூத்தரின் வழக்கமாம். புலவரென்று வருபவரை யெல்லாம் சிறையிட்டு வதைத்து முடிவில் விஜயதசமியன்று துர்க்கையின் சந்நிதியில், தன் கேள்விக்குத் தக்க விடையளிக்காத புலவர்களை யெல்லாம், இருவர் இருவர் தலைகளை ஒன்றாய்ப் பிணைத்துப் பலியிட்டு விடுவாராம்.

விகடகவி:- ஐயையோ...! கேட்கும்போதே பயமாய் இருக்கிறதே! எனக்கும் இக்கதிதானா! நான் ஏன் இந்தச் சங்கடத்தில் மாட்டிக் கொண்டேன்? உம்...ஐயா! புலவர் மணியே! உமக்குக் கோடி நமஸ்காரம். எனக்கு இந்த வேதனைகளை யெல்லாம் பொறுக்க முடியாது. எப்படியாவது நான் மட்டும் தப்புவிக்க வழி செய்யும் அடுத்த நாளே உம்மைத் தப்புவிக்கிறன்.

புகழேந்தி:- உம்மை நான் தப்புவிப்ப திருக்கட்டும். உம்மால் என்னை எப்படித் தப்புவிக்க முடியும்?

விகடகவி:- நேரே பாண்டிய மன்னரிடம் போய் புகழேந்தி யைக் கூத்தர் சிறையிட்டிருக்கிறார் என்று ஒரு வார்த்தை சொன்னால்...!

எல்லோரும்:- ஹா! தாங்கள் யார்? புகழேந்திப் புலவரா! (எல்லோரும் ஆச்சரியப்படுகின்றனர்).

விகடகவி:- ஆமாம் அவரேதான். இந்தப் புகழேந்திப் புலவருடன் சேர்ந்ததினால் தான் என் உயிருக்கும் ஆபத்து வந்தது.

புகழேந்தி:- உம் உயிருக்காக மட்டும் இவ்வளவு வருத்தப்படுகிறீரே. இந்தச் சிறையிலுள்ள மற்றவர்கள் உயிரைவிட உங்கள் உயிர் மட்டும் உயர்ந்ததா என்ன?

விகடகவி:- உமக்கென்ன தெரியும் என் உயிரின் பெருமை! எனக்கல்லவா தெரியும் (தனக்குள்) தலைதப்புவதே தம்பிரான் புண்ணியமாயிருக்கும் போது தாராள சிந்தனை வேறா வேண்டும்?

குயவன்:- புலவர் சிகாமணியே! தங்களைக் காணவேண்டுமென்றிருந்த எங்கள் நெடுநாளைய ஆவல் இன்று தான் நிறைவேறியது. நாங்கள் சிறையிடப் பெற்றதும் நன்மைக்கென்றே நினைக்கின்றோம்.

தட்டான்:- புலவர் தலைவ! இந்த ஒட்டக்கூத்தனின் கொட்டம் அடங்கத் தாங்கள்தான் ஒரு வழிசெய்ய வேண்டும். குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு போல் இவர் புலவரினத்தையே அழித்துவிடுவார் போலிருக்கிறது சோழ நாட்டில்.

விகடகவி:- (தனக்குள்) ஆமாம்! கற் கோட்டையிலிருந்து, மனக்கோட்டை கட்டவேண்டியதுதான்.

புகழேந்தி:- புலவர்களே! மரணத்தைக் கண்டு மருளாதீர்கள். தைரியத்தை இழக்காதீர்கள். மனிதன் இறப்பது ஒரே முறைதான். விஜயதசமி விழாஇன்னும் எத்தனைநாள் இருக்கின்றது?

கருமான்:- இன்னும் மூன்று மாதங்கள் இருக்கின்றன.

புகழேந்தி:- ஆமாம் அதுவே போதும் அதற்குள் உங்கள் எல்லோரையும் யார் எத்தகைய கேள்விகள் கேட்டாலும் தயக்கமின்றித் தைரியத்துடன் பதில் சொல்லும் பாண்டித்யமுடையவர்களாகச் செய்து விடுகிறேன். இவ்வாண்டு நவராத்திரி விழாவில் எல்லோர் முன்னிலையிலும், கூத்தர் உங்களால் அவமான மடைவார். அத்துடன் அவர் கொட்டமும் அடங்கிவிடும். என்ன சொல்கிறீர்கள்?

குயவன்:- குருடன் வேண்டுவது கண்ணைத்தானே! எப்படியும் கூத்தரின் செருக்கு அடங்கினால் சரிதான். மேலும் தங்கள் மாணாக்கர்களாய் இருக்க நாங்கள் பூர்வ புண்ணியம் செய்திருக்க வேண்டாமா?

விகடகவி:- ஊஹூம்; எனக்கு நம்பிக்கையில்லை. கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிக்க நினைப்பது போல் இருக்கிறது இந்த யோசனை.

புகழேந்தி:- பயப்படாதீர். நீர் இறந்து விடமாட்டீர்

விகடகவி:- நான் இறந்தால்! நீங்கள்மட்டும் என்னவாம்?

புகழேந்தி:- நீங்கள் யாவரும் நாளையிலிருந்து இலக்கணம் தொல்காப்பியம் முதலிய பாடங்களைச் சரிவரப் பயில வேண்டும்.

எல்லோரும்:- தங்கள் உத்திரவுப்படியே ஆகட்டும்.

விகடகவி:- சிறைச்சாலையைப் பள்ளிக்கூடமாகச் செய்து விடப் போகிறீர்களா? நல்ல யோசனை தான். நீங்கள் ஆசிரியர்; அவர்கள் மாணவர்கள். எப்படியோ உங்கள் பொழுது கழிந்துவிடும். நானென்ன செய்வது? நான் சும்மா இருந்தாலும் என் வயிறு சும்மா யிராதே!

புகழேந்தி:- செவிக்குணவில்லாதபோது சிறிது வயிற்றிற்கும் ஈயப்படும் என்றபடி, பகற்பொழு தெல்லாம் இலக்கியப் பயிற்சியிற் கழித்து மாலையில் வழக்கப்படி சிறைக் காவலர்களால் கொடுக்கப்படும் சிறிது கூழை யருந்திப் பொழுதைக் கழிக்கவேண்டியதுதான்.

விகடகவி:- நல்ல வேலையாய்ப் போச்சு. இந்த வாய்ப் பேச்சு வேதாந்தங்கள் நமக்குப் பிடிக்காதையா; பிடிக்காது. நாள் ஒன்றுக்கு ஆழாக்குக் கூழைக் குடித்துக்கொண்டு மனிதன் எத்தனை நாளைக்கையா இருக்க முடியும்?

புகழேந்தி:- நாம் மாத்திரமா இருக்கிறோம்? நம்மைப்போல் இன்னும் எத்தனை புலவர்கள் இந்தச் சிறையில் கஷ்டப் படுகிறார்கள். அவர்களும் நம்மைப்போல் மனிதர்கள் தானே?

விகடகவி:- ஐயா புலவரே! நான் சாப்பாட்டுராமன் என்பது உமக்குத் தெரியும். இந்தச் சமாதான மெல்லாம் எனக்கு வேண்டாம். அண்டம் புரண்டாலும் சரி, சூரிய சந்திரர் திசைமாறினாலும் சரி, கவலையில்லை. எனக்கு வேண்டியது வேளா வேளைக்குத் திருப்தியாய் குறைவில்லாமல் ருசியான சாப்பாடுதான். அதற்கும்வழி யில்லையென்றால், ஒருநாளைக்குக்கூட என்னால் இந்த இருட்டறையிலிருந்து காலம் தள்ள முடியாது. இதோ பார்த்தீரா! இந்தத்துணியை முறுக்கிக் கழுத்தில் சுருக் கிட்டுக்கொண்டு சிவசிவாவென்று தொங்கிவிடுவேன்.

புகழேந்தி:- அடடா!—இதேது! உம்மோடு பெரிய தொல்லை யாகவல்லவா இருக்கிறது! ஏனையா, சிறைச்சாலையில் உமக்கு மட்டும் வேளா வேளைக்குத் திருப்தியாய்க் குறையில்லாமல் ருசியான சாப்பாடு வேண்டுமென்றால் என்ன செய்வது?

விகடகவி:- என்ன செய்வீர்களோ! எனக்குத் தெரியாது எனக்கு வேண்டியது திருப்தியான சாப்பாடுதான்.

புகழேந்தி:- (சற்று யோசித்து) சரி, நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். அதன்படி செய்வீரா?

விகடகவி:- செய்தால் சாப்பாடு கிடைக்குமல்லவா?

புகழேந்தி:- ஆஹா! உமக்கு மட்டுமல்ல; எல்லோருக்குமே கிடைக்கும்.

விகடகவி:- உம்!...உண்மையாகவா! அதென்ன யோசனை?

புகழேந்தி:- அதோ பார்த்தீரா?

விகடகவி:- (எட்டிப் பார்த்விட்டு) எதை! தண்ணீ ரெடுக்கப் போகும் பெண்களையா?

புகழேந்தி:- ஆம்; காலையிலும், மாலையிலும் நகரப் பெண்கள் அனைவரும் தண்ணீர் எடுக்க ஆற்றுக்கு இந்த வழியாகத்தான் போகிறார்கள். ஆகையால் அவர்கள் விரும்பிக் கேட்கும் முறையில் எளிய நடையில் ஈரடிப் பாக்களாக சில கற்பனைக் கதைகளை ஒழிந்த நேரங்களில் சொல்லுகிறேன். அவைகளை ஓலைச் சுவடியில் எழுதிக்கொண்டு, அவர்கள் இந்த வழியில் போகும் பொழுதெல்லாம் பாடினால் உமது இனிய இசையில் மயங்கி உமக்கு வேண்டிய உணவுப்பொருள் களெல்லாம் கொண்டுவந்து கொடுப்பார்கள் ........?

விகடகவி:- ஆஹாஹாஹா! அருமையான யோசனை. இனி எனக்குக் கவலையே இல்லை! இனிமேல் இந்தச் சிறையே எனக்குச் சொர்க்கம். இதோ ஓலையும் எழுத்தாணியும் தயார். எங்கே! ஏதாவது ஒரு கதை சொல்லுங்கள்.

புகழேந்தி:- சொல்லுகிறேன். எழுதுங்கள்.

[திரை]

## காட்சி—14.

இடம்—ஆற்றங்கரை. **காலம்:—பகல்**

(நகரப் பெண்கள் பலர் குளிப்பதும் தண்ணீரெடுத்துப் போவதுமாக இருக்கின்றனர்.)

கமலம்:- ஏண்டீ! சாவித்திரி, நீங்கள்ளாம் வெகு நேரத்துக்கு முன்னேயே வந்திங்களே! இந்நேரம் என்ன பண்ணீங்க! காவேரி விடமாட்டேங்கறதா என்ன!

சாவித்ரி:- இந்நேரம் சிறையிலே கதை கேட்டுட்டு இப்பத் தானே வந்தோம்.

கமலம்:- அதென்னடி சிறைச்சாலையிலே கதை! கதையின்னா எங்கேயாவது கோவில்லே, மடத்துலே நடக்கும்னு பேரு! நீங்க என்னடீன்னா! சிறையிலே கதை கேட்டேங்கு நீங்களே!

கோமளம்:- அடீ சாவித்திரி, அவளுக்கு விஷயம் தெரியாது போலிருக்கு. முன்னாடியே சொல்லியிருந்தா அவளும் வந்திருப்பாள்.

அலமேலு;- சரிதான். வேறெ வெனையே வேண்டாம் சும்மா இருக்கும்போதே அவமாமியார், ஆயிரம் குத்தப் பத்திரிக்கை வாசிப்பாள். இன்னும் அவ கதை வேறே கேக்க வந்துட்டான்னா...போதும்.

சாவித்ரி:- அதிலேயும் நம்மோடு சேர்ந்து வந்தான்னு தெரிஞ்சா......?

கோமளம்:- இன்னம் ரொம்பநல்லாயிருக்கும். வெறும்வாயை மெல்றவளுக்கு ஒரு பிடி அவலுங் கிடைச்ச மாதிரிதான்.

கமலம்:- அடியம்மா! கோமளம். நீ ரொம்ப பெரிய மனுஷி. அதிகமா பேசுவே. நான் ஒன்னெ ஒன்னுங் கேக்கல்லே! சும்மா இரு.

அலமேலு:- பாத்தியாடீ! மாமியாரைப்பத்திச் சொன்ன வுடனே அவளுக்கு கோவத்தை.

சாவித்திரி:- பின்னெ என்னாடி? அவளுக்கு எதுக்கவே அவமாமியாரைக் கேலி பண்ணினா அவளுக்குக் கோபம் வராமெ இருக்குமா?

கமலம்:- அதுக்கில்லேடி! என்னமோ கதை கேட்டோன்னிங் களே! என்ன கதை? எப்படி இருந்ததுன்னு கேட்டா......! விஷயத்தைச் சொல்லாமல், மாமியாள் கோவிச்சிக் கிடுவாள்; மருமகள் கோவிச்சிக்கிடுவான்னா!......

அலமேலு:- ஓகோ! அதைக் கேக்கிறியா? சொல்றேன் கேளு. நம்ம மகாராணிகூட பாண்டிய தேசத்திலேருந்து ஒரு புலவர் வந்திருந்தாரில்லே, அவரு இப்போ சிறையிலே இருக்கிறாரு. அவரு சிறையிலேயே என்னன்னமோ கதையெல்லாம் எழுதுறாராம். அதையெல்லாம் அவரு கூட சிறையிலே இருக்கிற இன்னொரு புலவர் ராகத் தோட படிச்சிச் சொல்லுகிறாரு பாரு! ஆகா! இன்னைக் கெல்லாங் கேக்கலாம் போலிருக்கு.

கமலம்:- உம்; அப்படியா! அடெடே! சொல்லியிருந்தா நானுங்கூட வந்திருப்பேனடீ!...இப்ப என்ன கதை நடக்குது?

அலமேலு:- பத்து நாளா, அல்லி அரசாணி மாலைன்னு ஒரு கதை நடந்தது. நாளையிலிருந்து புலந்திரன் களவு மாலைன்னு ஒரு புதுக்கதை தொடங்கப்போறாங்களாம். நாளைக்கு வாரியா?

கமலம்:- ஓ! கண்டிப்பா வர்ரேன்; நீங்கமட்டும் போறபோது மறந்துடாமே என்னையும் ஒரு சத்தம் கூப்பிடுங்கோ.

சாவித்திரி:- சும்மா வரக்கூடாதடியம்மா. சும்மா வரக் கூடாது. வரும்போது தின்பண்டம், பழம், அரிசி ஏதாவது கொண்டு போகணும். ஏன்னா அவங்க சிறையிலே இருக்கிறவங்க தானே. அங்கே ஒழக்குக் கூழைத் தவிர என்ன கிடைக்கும்?

கமலம்:- ஏதாவது கையிலே கெடைச்சதே கொண்டு போனாப் போவுது.

சாவித்திரி;- சரி; நாழியாகிவிட்டது. வாங்கடி போகலாம். (போகிறார்கள்.)

[திரை]

## காட்சி—15.

**இடம்**:- சிறைக்கூடவீதி **காலம்**:-பகல்

(நகரெங்கும் அலங்கரித்திருக்கிறது. புலிக்கொடிகள், திரிவட்டம், பூச்சக்கரக் குடை முதலியவற்றைத் தூக்கியபடி கணக்கற்ற ஏவலாளர்களும் பொது மக்களும் மன்னனையும் நாட்டையும் வாழ்த்திக் கோஷமிடு கின்றனர். வாளும், வேலும், வில்லும் தரித்த ஆயிரக் கணக்கான வீரர்கள் புரவிகளின் மீதும் யானைகளின் மீதும் முன்னும் பின்னும் தொடர்ந்துவர, அரசன் குலோத்துங்கன் பவனி வருவதை ஆங்கு சிறைக்கூடத் திலிருந்த புகழேந்தி முதலிய புலவர்களும் காணு கின்றனர். புகழேந்தியைக்கண்ட அரசன் விசனிக்கிறான்

குலோத்:- கூத்தர்பெரும! இன்று குதூகலத்துடன் பவனி வரும் நம்மைக் கண்டு, நாளை துர்க்கையின் பலிபீடத் தில் உயிர்விடப்போகும் புவவர்களின் மனம் எவ்வளவு வேதனை அடையும்?

கூத்தர்:- ஆம், ஆம்; இவர்கள் மனவேதனைப்பட வேண்டியது தான். புலவரென்ற பெயரைத் தங்களுக்குத் தாங்களே சூட்டிக்கொண்டு பலரை ஏமாற்றிப் பிழைக்கும் இவர்கள் மனம் வேதனையடைய வேண்டியது நியாயம்தானே!

குலோத்:- என்ன இருந்தாலும் புலவர்கள் விஷயத்தில் நாம் அதிகக் கொடுமையாகத்தான் நடந்து கொள்கிறோம். தமிழார்வத்தால் புலவரென்று வெளிவரும் இவர்களை யெல்லாம் வருத்திக் கொல்வதைவிட அவர்களின்ஆர்வம் வீணாகாதபடி தக்க பயிற்சியளித்தால் தமிழ் நாட்டில் எத்தனை உயர்ந்த புலவர்களைக் காணலாம். இதனால் தமிழ்க் கலையும் முன்னேற்றம் அடையு மல்லவா!

கூத்தர்:- அரசே தாங்கள் நினைப்பது தவறு. நாய்வாலை நிமிர்த் தாலும் நிமிர்த்தலாம். இவர்களைத் திருத்த முடியாது. இவர்கள் அனைவரும் மடையர்கள். இவர் களால் புலவன் என்ற சொல்லுக்கே இழிவுண்டாகிவிடும். இவர்களிடம் கருணை காட்டவே கூடாது. வழக்கப்படி இவர்களைத் தலையோடு தலையாகப் பிணைத்து இரட்டைக் கடாக்களாகப் பலியிட வேண்டியது அவசியமே.

குலோத்:- என்ன! எல்லோரையுமா அப்படிச் சொல்லுகிறீர் கள்? புகழேந்தி மகாகவியல்லவா? நம் நியதியின்படி புகழேந்தியையும் கொன்று விட்டால், நமக்கும் நாட்டிற் கும் பெரிய நஷ்டமல்லவா! மேலும் ஒரு ஒப்பற்ற தமிழ்ப் புலவரை குலோத்துங்கன் கொன்றான் என்ற பழிச் சொல் என்றும் நீங்காதல்லவா!

கூத்தர்:- அரசே! நீங்கள் யாரை மகாகவி யென்று சொல்லுகிறீர்கள்? எனக்கு முன் நிற்கவும் தகுதியற்ற இந்தப் பதரையா?

(பாட்டு)

**"மான்னிற்குமோ இந்த வாளரிவேங்கை முன் வற்றிச் செத்த**
**கான்னிற்குமோ இவ்வெரியுந் தழலின்முன் கனைகடலின்**
**மீன்னிற்குமோ இந்தவெங்கட்சுறவமுன் வீசுபனி**
**தான்னிற்குமோ இக்கதிரோனுதயத்தில் தார் மன்னனே"**

[சிறைக்கூடத்தில் இருந்து இப், பாடலைக் கேட்ட புகழேந்தி அலட்சியமும் ரௌத்திரமும் தொனிக்க நகைக்கிறார்]

புகழேந்தி:- அரசே! இப்பாடலை வெட்டிப் பாடவோ? அல்லது ஒட்டிப் பாடவோ?

குலோத்:- ஒட்டியே பாடுங்கள். பார்ப்போம்.

புகழேந்தி:- பாடுகிறேன்.

பாட்டு

**"மானவன் நானந்த வாளரிவேங்கையும்; வற்றிச்செத்த**
**கானவன்! நானவ் வெரியுந்தழலுங் கனைகடலின்**
**மீனவன்! நானந்த வெங்கட்சுறவமும், வீசுபனி**
**தானவன்! நானந்தக் கதிரோனுதயமுந் தார்மன்னனே"**

(சிறையிலுள்ள மற்ற புலவர்களும் நகர்வலக் கூட்டத்தினரும் கைகொட்டி நகைக்கின்றனர். கூத்தர் ஆத்திரப் படுகிறார்.)

கூத்தர்:- அரசே! பார்த்தீர்களா! அவன் செருக்கை. இன்னும் அவன் ஆணவம் குறைந்தபாடில்லையே?

குலோத்:- ஆமாம்; அணையப்போகும் தீபம் சுடர் விட்டெரிவது இயல்புதானே! துள்ளிய மாடு நிச்சயம் பொதி சுமக்கும்.

உதயணர்:- தாங்கள் பாடிய பாடலுக்குத்தானே அவர் பதில் சொன்னார். இதில் தவறொன்று மில்லையே!

கூத்தர்:- பதில் சொன்னது சரிதான். ஆனால் அந்தப் பதிலால் என் கோபத்தையும் கிளறித் தன் முடிவையும் நிச்சயித்துக் கொண்டான்!

உதயணர்:- பிறர் முடிவை நிச்சயிக்கும் சக்தி நம் சக்திக்கு அப்பாற்பட்டதல்லவா?

குலோத்:- ஆம். உதயணர் சொல்லுவதும் உண்மை தான்.

கூத்தர்:- சாதாரண மனிதரைப் பொறுத்தவரை உதயணர் சொல்வது உண்மைதான். ஆனால் நான் இந்நாட்டின் மன்னரின் அன்பிற்கும் ஆதரவிற்கும் உரிய அரசவைப் புலவன். மன்னர் என் விருப்பத்தை என்றும் புறக்கணித்ததில்லை. இனியும் புறக்கணிக்கமாட்டார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஆகையால் இது ஒரு பெரிய காரியமா! எனக்கு.

(வெகுண்டு செல்லுகின்றனர்)

[திரை.]

## காட்சி—16.

**இடம்:-** குணவதியின் அந்தப்புரம். **காலம்:-**பகல்

(குணவதி குமுதவல்லியுடன் வருகிறாள்.)

குணவதி:- குமுதம்! எங்கே இன்னும் உதயணரைக் காண வில்லை! ஒருக்கால் அவர் வராமலே இருந்து விட்டால் பிறகு...-?

குமுதம்:- இல்லை. 'அவசியம் இன்று பதினேழு நாழிகைக்குள் வந்து விடுகிறேன். நீ முன்னால் போய் மகாராணியிடம் சொல்லு' என்று சொன்னார்.

குணவதி:- பொழுது சாய்ந்து விட்டதே! இப்போது பதினெட்டு நாழிகைக்கு மேல் இருக்கும் போலிருக் கிறதே! விழா ஆர்ப்பாட்டத்தில் உன்னிடம் சொன்னதை மறந்து வராமல் இருந்து விட்டால்? பிறகு புலவரின் கதி ஐயோ! குமுதா, அதை நினைக்கும்போதே என் உடல் பதறுகிறதே!

குமுதம்:- உதயணர் சொன்ன சொல் தவறமாட்டார். எப்படியும் இன்னும் சற்று நேரத்திற்குள் வந்து விடுவார் ஆனால் அவர் இங்கு வருவது வேறுயாருக்கும் தெரியக் கூடாது. அதற்காகவே அவர் தக்க சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருப்பாரென்று நினைக்கிறேன்.

குணவதி:- இது கோழைத்தனம். காரியம் மிஞ்சும் பொழுது உயிர் என்ன வெல்லமா? வருவது வரட்டுமே. புலவரின் உயிரைவிட நம் உயிர் என்ன அவ்வளவு உயர்வு?

குமுதம்:- நீங்கள் ஏன் இப்படி அதைரியப்படுகிறீர்கள்? நான் எவ்வளவோ அவருடன் வாதாடி அவர் உள்ளத்தைக்

கிளறிப் பார்த்தேன். தாங்கள் சந்தேகப்படுவதைப் போல் ஒன்றும் புலவருக்கு நேர்ந்துவிடாதென்று உறுதியாகச் சொல்லுகிறார். அதோ! பாருங்கள். அவரே வந்துவிட்டார்!

(உதயணர் வேகமாக வருகிறார். குணவதி ஓர் திரைக்குப் பின்னே மறைவாக நின்று கொள்ளுகிறாள்.)

குமுதம்:- நல்ல வேளையாக வந்தீர்கள். நீங்கள் வராமல் இருந்துவிடுவீர்களோ வென்று மகாராணி துடியாய்த் துடித்தார்கள்.

உதயணர்:- ஆம்; வருவது கஷ்டமாகத்தான் போய்விட்டது. இப்போதும் அதிக நேரம் தாமதிக்க முடியாது. மகாராணியார் எங்கே?

குணவதி:- என்ன! உதயணரே! மகாராணியைக் காண இன்று வந்ததைவிட புகழேந்திப் புலவரின் தலையைத் துர்க்காதேவிக்குப் பலியிட்ட பின் மன்னருடன் மகிழ்ச்சி யாக நாளை வந்தால் மகாராணியின் உயிரற்ற உடலை யும் கண்டு மகிழ்ந்திருக்கலாமே! ஏன்? அதற்குள் விஷய மெல்லாம் அந்தப்புரத்திற்குத் தெரிந்துவிட்டதே என்று யோசிக்கிறீர்களா?

உதயணன்:- (காதைப் பொத்தி) சிவசிவா! மகாராணி மன்னிக்க வேண்டும். என் தவறு எதுவுமில்லை. கூத்தரின் சூழ்ச்சி வலையில் வீழ்ந்து மீள முடியாது தவிக்கின்றார் மன்னர். ஒரு சமயம் புகழேந்திப் புலவரைச் சிறையிட்டதே தவறென்று நினைக்கிறார். ஆனால் கூத்தரைக் கண்ட மறுகணமே அவர் மனோ நிலையும் மாறி விடுகிறது. மன்னரின் செய்கையைத் தடுக்க யாராலாகும். அவர்குணம் தாங்கள் அறியாததா?

குணவதி:- உதயணரே! வெகுநன்றாயிருக்கிறது உமதுபேச்சு. கூத்தரின் சூழ்ச்சி வலையிற்பட்டு அரசர் ஆடுகிறார்.

அரசரின் ஆட்டத்துக்கு நீங்கள் தாளம் போடுகிறீர்கள். உம்...அப்படித்தானே! பசுங்கன்றைத் தேர்க்காலிற் கொன்ற குற்றத்திற்காகத் தனது பாலகன் என்பதையும் மதியாது கொன்று மனுநீதி கண்ட சோழன் என்ற மாசிலாப் புகழ்படைத்த சோழ பரம்பரையில் வந்த உங்கள் மன்னரின் ஆட்சியில் இன்று அநீதி தாண்டவ மாடுகிறது. அறிஞர்களையும், கவிஞர்களையும் போற்றிப் புகழ்ந்து அவர்கள் கற்பனையில் கண்டு உருவகப்படுத்தியளிக்கும் அழியாக் கலைப் பண்புகள் நிறைந்த காவியங்களையும், கவிதைகளையும் கண்டு களித்து அவைகளின் மேன்மைகளை எண்ணி எண்ணிப் பூரித்துப் பிறருக்கும் எடுத்துக்காட்டி மகிழ்ச்சியடைய வேண்டிய சுபதினமாகிய விஜயதசமித் திருவிழாவன்று, கவிஞர்களையும் புலவர்களையும் தேவியின் பெயரால் பலியிட்டு அழியாப் பெரும் பழியைத் தேடிக்கொள்ளும் உங்கள் மன்னவரின் போக்கு வெகு நன்றாயிருக்கிறது.

உதயணரே! அரசர் தவறு செய்தால் அதை எடுத்துக் காட்டித் திருத்தவேண்டியது அமைச்சரின் கடமையல்லவா?

ஏன் மௌனம் சாதிக்கிறீர்? வெளியுலகம் தெரியாது அந்தப்புரத்தில் அடைபட்டிருக்கும் ஒரு பெண், நமது அரசரையும், ஆஸ்தானப் புலவரையும், நம்மையும் இப்படி அவமதித்துப் பேசுகிறாளே! என்று யோசிக்கிறீரா? நான் பெண்தான். என்றாலும் கோழையல்ல. குற்றவாளி யென்று கொலை செய்விக்கப்பெற்ற கோவலன் நிரபராதி என்ற உண்மை தெரிந்த அக்கணமே தன் உயிரைப் போக்கிக்கொண்ட பாண்டியன் நெடுஞ்செழியனும், கணவன் இறந்த உடன் தன்

உயிரையும் போக்கிக் கொண்ட கோப்பெருந்தேவியும், சந்தேகத்தால் ஒரு அந்தணன் வீட்டுக் கதவையிடித்த குற்றத்திற்காகத் தன் கையைத் தானே வெட்டிக் கொண்ட பொற்கைப் பாண்டியனும் தோன்றிய மரபில் தான் நானும் தோன்றினேன். உயிரினும் நீதியே எனக்குச் சிறந்தது. இதை இன்று அரசரிடமே நேரில் சொல்லவேண்டு மென்றிருந்தேன். முடியவில்லை. புகழேந்தியைக் கூத்தர் புலமையில் வெல்ல முடியா தென்பதை நானறிவேன். என்றாலும் கூத்தரின் சொல்லுக்குக் தக்கபடி கூத்தாடும் மன்னர் சரியான நியாயம் வழங்குவாரென்று நினைப்பதற்கில்லை. அரசரின் அநீதத் தீர்ப்பால் பெருந் தமிழ்ப் புலவருக்கு ஏதேனும் விபரீதம் நேர்ந்தால் அக்கணமே இந்நாட்டு அரசியையும் இழந்து விட்டீரென்று உமது அரசரிடம் தெரிவித்துவிடும். இதைச் சொல்லவே உம்மை இங்கு அழைத்து வரச் சொன்னேன். இனி நீங்கள் போகலாம்.

உதயணர்:- தேவி! இதென்ன விபரீத முடிவு. அரசர் கூத்தரின் கைப்பாவையாக இருப்பது உண்மையே! ஆனாலும் சிறந்த கலா ரஸிகரும் அறிஞருமாகிய அவர் புகழேந்திப் புலவரின் உயிருக்கு எவ்விதத் தீங்கும் இழைக்கத் துணியார். தாங்கள் அவசரப்பட்டுத் தவறான காரியம் எதுவும் செய்துவிடாதீர்கள். இன்று காலையில்கூட மன்னர் புகழேந்திக்குப் பரிந்து கூத்தரிடம் நெடுநேரம் விவாதித்தார்.

குணவதி:- ஆமாம். புகழேந்தியை இத்தனை நாளாகச் சிறையிட்டிருப்பதிலிருந்தே தெரியவில்லையா அரசரின் அனுதாபம். உதயணரே! அதிக நேரமாகிவிட்டது. வீண் காலதாமதமும் போலி சமாதானமும் வேண்டாம். இது என் கட்டளை யென்று மன்னரிடம் சொல்லுங்கள்.

காரியம் மிஞ்சுவதற்குள் உமது கடமையை நிறை வேற்றும். இன்னும் சற்று நேரம் நீர் வராதிருந்திருந் தால் துர்க்கையின் ஆலயத்திற்கு நானே நேரில் மாறு வேடத்துடன் வர இருந்தேன். ஆனால்... ..?

உதயணர்:- தேவி! வேண்டாம் வேண்டாம். தாங்கள் நினைப் பதைப் போல் புலவருக்கு ஒன்றும் நேர்ந்து விடாது. இன்றிரவுக்குள் நான் தங்களுக்கு நல்ல சேதியைக் குமுதத்திடம் சொல்லி அனுப்புகிறேன். தங்கள் கட்டளையையும் அரசரிடம் தெரிவிக்கிறேன். நான் போய்வருகிறேன்.

(வணங்கிச் செல்லுகிறார்.)

(திரை)

## காட்சி—17

**இடம்:-** சிறைச்சாலை **காலம்**—மாலை.

(புகழேந்தி மற்றப் புலவர்களுடன் உரையாடிக் கொண் டிருக்கிறார்.)

விகடகவி:- எனக்கு அப்பொழுதே தெரியும். தெரிந்தும் தெரியாத்தனமாய்வந்து இந்தச் சங்கடத்தில் மாட்டிக் கொண்டேன். அடகடவுளே! உனக்குக் கண் இல்லையா? இன்னும் கொஞ்ச நேரத்தில் அந்தக் கூத்தனின் ஆட்கள் வந்து இழுத்துக் கொண்டுபோய் ஆட்டுக்கடாவை வெட்டி எறிவதைப்போல் வெட்டிஎறிந்துவிடுவார்களே. கடைசியில் எனக்கு இந்தக் கதியா வரவேண்டும்.

புகழேந்தி:- நண்பரே நீர் மகா கோழை. இவர் களெல்லோரையும் பார்த்தீர்களா! எவ்வளவு தைரியமா யிருக்கிறார்கள்.

தட்டான்:- இன்று காலை பட்ட அவமானம் போதாதா கூத்தருக்கு. இனிமேலும், அவர் தங்களுடன் கலை விவாதத்திற்கு வரப் பயித்தியமா என்ன?

குயவன்:- ஆம். இனி தங்கள் பெயரைக் கேட்டாலும் நடுங்குவார். மேலும் அரசர்கூடத் தங்களுக்காக அதிகம் பரிந்து பேசினாரே!......

விகடகவி:- அரசன் புகழேந்திப் புலவருக்காகத்தானே பரிந்து பேசினார். நம் கதி?

புகழேந்தி:- விகடகவியாரே! அப்படி ஒன்றும் நேர்ந்து விடாது. பயப்படாதீர். உங்கள் எல்லோரையும் விட

என் உயிர்மட்டும் உயர்ந்ததா என்ன? ஒருபோதுமில்லை. மாண்டால் யாவரும் மாள்வோம். மீண்டால் யாவரும் மீள்வோம். போதுமா?

கருமான்:- வேண்டாம்; வேண்டாம். நாங்கள் யாவரும் மடிந்தாலும் கவலையில்லை. எப்படியும் நீங்கள் இன்னும் நெடுங்காலம் தமிழைவளர்க்க வேண்டும். இது தான் எங்கள் ஆசை.

புகழேந்தி:- நான் சொன்னபடி சிறிதும் அதைரியமின்றி ஒவ்வொருவரும் கூத்தர் கேட்கும் கேள்விகளுக்குத் தயக்கமின்றி விடையளித்தால், நாம் அனைவருமே மீட்சியடைவோம்.

கண்ணான்:- புலவர் பெரும; தங்களைக் கண்ட அன்றே கோழைத்தனமும் பயமும் எங்களைவிட்டு நீங்கிவிட்டது. இனி கூத்தரின் கேள்விக்கோ அல்லது கொலைஞர்கள் கூர்வாளுக்கோ அஞ்சோம். இது சத்தியம்.

புகழேந்தி:- அப்படியாயின் வெற்றி நிச்சயம். என்ன விகடகவியாரே! உமது முடிவு என்ன?

(பயத்தில் திக்கித்திணறியபடி)

விகடகவி;- அதே முடிவுதான்! நான் மட்டும் கோழையா என்ன?

புகழேந்தி:- சபாஷ்! விகடகவியாரே! அப்படிச் சொல்லும்... உம். நான் சொன்னதெல்லாம் எல்லோருக்கும் ஞாபகம் இருக்கிறதல்லவா?

எல்லோரும்:- ஆம். ஞாபகமிருக்கிறது.

புகழேந்தி:- கூத்தரின் சேள்விக்கு உங்கள் பதில் எப்படி இருக்கவேண்டும்?

விகடகவி:- கூத்தரை வெட்கித் தலைகுனியச் செய்யக் கூடியதாயிருக்க வேண்டும்?

எல்லோரும்:- ஆமாம்; ஆமாம். (எல்லோரும் ஆரவாரம் செய்கின்றனர், இரு காவலர்கள் வருகின்றனர்.)

காவலன்:- (அதிகாரத்துடன் அதட்டி) உஸ்......என்ன இங்கே சத்தம்? எல்லோரும் வாருங்கள் இங்கே.

விகடகவி:- எங்கே!

காவலன்:- துர்க்கை ஆலயத்திற்கு. உம்; புறப்படுங்கள்!

விகடகவி:- எங்களை அங்கே கூட்டிக்கொண்டு போய் என்னப்பா செய்யப்போகிறீர்கள்!

காவலன்:- எங்க புலவர் கேக்கும் கேள்விக்குப் பதில் சொன்னா விட்டுடுவோம். சொல்லாவிட்டா தலையை மட்டும் தனியா எடுத்துடுவோம்.

விகடகவி:- உம்!....அப்படியா! கேள்விக்குச் சரியான பதில் சொல்லிவிட்டால் உங்கள் புலவரின் தலையை வெட்டி விடுவீர்களோ!

காவலன்:- எங்கள் புலவர் தலையை வெட்டுவதா! சரிதான். ஆளைப் பாருடா!...எங்க புலவரு தலையே இவரு வெட்டிப்புடுவாராம். இவரு! உம்...உம். சரிதான் வாங்கையா.

(எல்லோரும் போகிறார்கள்.)

**(திரை)**

## காட்சி—18

**இடம்:-** துர்கையின் ஆலயம். **காலம்:-** மாலை

(குலோத்துங்கன், கூத்தர், உதயணர், புலவர்கள், பூசாரி, கொலையாளிகள், ஏவலாளர்கள் மற்றும் பிர பலஸ்தர்கள் பிரசன்னமாயிருக்கின்றனர்.)

கூத்தர்:- மற்ற ஆண்டுகளைவிட இவ்வாண்டு துர்க்கையின் பூஜை மனத்திற்கு அதிக மகிழ்ச்சியை அளிக்கும். அல்லவா?

குலோத்து:- காரணம்?

கூத்தர்:- பலியிடப்போகும் புலவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய நூற்றுக்கு மேலிருக்கும். விழாவின் சிறப்புக்கு இதைவிட வேறென்ன வேண்டும்?

குலோத்து:- (மௌனமாக இருக்கிறான்.)

(காவலர் இருவர் வந்து வணங்குகின்றனர்.)

கூத்தர்:- எங்கே சிறையிலுள்ள புலவர்களையெல்லாம் அழைத்து வந்து விட்டீர்களா? எங்கே அவர்கள்?

காவலன்:- எல்லோரும் தக்க பாதுகாப்புடன் வெளியே நிற்கின்றனர்.

கூத்தர்:- அவர்கள் எல்லோரையும் சீக்கிரம் இங்கு கொண்டு வந்து வரிசையாய் நிறுத்துங்கள்.

(காவலர் வணங்கிச் சென்று எல்லோரையும் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள்)

*கூத்தர்:-* *(துர்க்கா தேவியை நோக்கிக் கைகூப்பியவாறு)*

**"ஆடுங்கடைமணி நாவசையாம லகிலமெல்லாம்**
**நீடுங்குறையிற் றரித்தபிரான் என்றும்......**

*குலே:-* *(இடைமறித்து)*

**நித்நவம் பாடும்புலவர் பணிகொண்ட**
**கூத்தன் பதாம்புயத்தைச்**
**சூடுங்குலோத்துங்க சோழனென்றே**
**எனைச் செப்புவரே.**

*(என்று பாட்டைப் பூர்த்தி செய்து கூத்தருக்கு வணக்கஞ் செய்கிறான்.)*

*கூத்தர்:-*

*(செருக்குடன் எதிரே நிற்கும் புலவர்களையெல்லாம் நோக்கிவிட்டுப் பின், முதலில்நிற்கும் குயவனைக் கேள்வி கேட்கத் தொடங்குகிறார்.)*

*கூத்தர்:-* *(குயவனை நோக்கி)*

**"மோனை முத்தமிழ் மும்மதமும் பொழி**
**யானை முன்வந் தெதிர்த்த வன்யாரடா?"**

*குயவன்:-*

**"கூனையுங் குடமுங் குண்டு சட்டியும்**
**பானையும்பண்ணு மங்குசப்பயல் நானடா'**

*(அரசன் வியப்படைகிறான். புலவர்கள் நகைக்கின்றனர். கூத்தரும் திகைக்கிறார்.)*

*கூத்தர்:-* உம்...இவன் ஒரு அகம்பாவி! இருக்கட்டும்? நீ இப்படிப் போய் நில். *(அடுத்தவனை நோக்கி)*

**"விண்பட்ட கொக்குவல்லூறுகண்டென்ன விலவிலக்கப்**
**புண்பட்ட நெஞ்சொடு மிங்கு நின்றாய்ப் பொட்டையா!**
**புகல்வாய்"**

எங்கே! இதற்குப் பதில் சொல்வாய். உன் கவித் திறத்தையும் பார்ப்போம்!

அம்பட்டன்:-

**"கண் பொட்டையாயினும் அம்பட்டன்நான் கவிவாணர் முன்னே.**

**பண்பட்ட செந்தமிழ் நீயுந் திடுக்கிடப் பாடுவனே"**

(மறுபடியும் புலவர்கள் நகைக்கின்றனர். அரசன் கூத்தரைப் பார்த்து திகைக்கிறார்)

கூத்தர்:- வாயாடி, கண்ணற்ற குருடனுக்குத் திமிரைப் பார்! யாரங்கே? இவனையும் அப்படி இழுத்து நிறுத்து. (காவலன் அவனையும் இழுத்து நிறுத்துகிறான்.)

கூத்தர்:- (மூன்றாவது நின்றவனை நோக்கி) உம். என்ன! நீயும் புலவன்தானோ?

கொல்லன்:-

**"செல்வன் புதல்வன் திருவேங்கடவன் செகத்குருவாம்**
**கொல்லன் கவியைக் குறைசொன்ன பேரைக் குறடு கொண்டு**
**பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்டமாடிப் பகைவர் முன்னே**
**அல்லும் பகலும் அடிப்பேன் கவியிருப்பாணி கொண்டே"**

(மறுபடியும் யாவரும் சிரிக்கின்றனர்.)

கூத்தர்:- (சினத்துடன்) சே! மடையன், யாரென்று கேட்டால் ஜாதித் தொழிலைக் காட்டுகிறான். போ இப்படி.

(கொல்லனை இழுத்துத் தள்ளச் செய்கிறார்.)

கூத்தர்:- (வண்ணானை நோக்கி) நீ யார்?......

வண்ணான்:- (மேலும் கேள்வி கேட்கவிடாமல் விரைந்து பதிலளிக்கிறான்.)

சேலேய் விழிமடவாரிற் செங்கா
லன்னஞ் சேர்பழனப்
பாலேய் மணவயிற் கூத்த! நின்
போலியர்ப் பாப்புனைந்த
நூலேய் துகளறத் தூய்தாக்கு
நோன்மை நுகல்வ தல்லால்
மேலேய் தமிழ்ப்புலவோ ரென்னை
யென்ன விளம்புவரே!

*கூத்தர்:- (அவமானத்தை வெளிக்குக் காட்டாமல் அட! வண்ணானின் கின்னாரப் பேச்சைப் பாருங்களேன்! (அடுத்தவனைப் பார்க்கிறார்,)*

*தச்சன்:- என்னை யாரென்றுதானே கேட்கிறீர்? சொல் கிறேன் கேளும்.*

சொன்ன சந்தக்கவி யாவருஞ்
சொல்லுவார் சொற்கவைசேர்
இன்ன சந்தக்கவி யேதென்ற போதி
லெதிர்த்தவரை
வன்ன சந்தங்கெட வாயைக்
கிழித்திந்த வாச்சியினால்
கன்ன சந்தங்களினிற் கவியாப்பைக்
கடாவுவனே.

*கூத்தர்:- (மிகுந்த கோபங்கொண்டு) மூடர்கள், சூரியனுக்கு முன் மின்மினிகளைப் போல் புலவரென்று வெட்க மில்லாமல் வெளியே வந்துவிடுகிறார்கள்.*

*(அடுத்து நின்ற வேளாளன் செருக்குடன் முன் வருகிறான்.)*

*வேளாளன்:- கூத்தரே! வெட்கம். யாருக்கு என்பதை யோசித்துச்சொல்லும். நாங்கள் எதிர்பார்ப்பது வெற்றி அல்லது வீர சொர்க்கம்,*

**"கோக்கண்டு மன்னர் குறைகடற்புக்கிலர் கோகனகப்
பூக்கண்டு கொட்டியும்·பூவாதொழிந்தில பூதலமேழ்
காக்கின்ற மன்ன கவியொட்டக் கூத்தநின் கட்டுரையாம்
பாக்கண்டொளிப்பரோ தமிழ்பாடிய பாவலரே!"**

கூத்தரே! உம் கூற்று விநோதத்திலும் விநோதம் நிறைந்தது. தமிழறிந்த புலவர்களை யெல்லாம் அழிக்கும் நீர்தான் தமிழை வளர்க்கும் புலவரோ! நீர் புலவர்களையா அழிக்கிறீர்? இல்லை; தமிழையே அழிக்கிறீர். கசடறக் கற்றவனே புலவனென்னும் பெயர் வகிக்கத் தகுந்தவன் என்பது உமது வாதமென்றால் கணக்கற்ற பிழைகள் நிறைந்த பாடல்களால் ஏட்டை நிரப்பும் நீர் மட்டும் புலவரென்று சொல்லிக்கொள்ள என்ன உரிமை இருக்கிறது?

கூத்தர்:- ஆ! என்ன சொன்னாய்? என் பாட்டில் குற்றம் கண்டாயா! நாவைத் துண்டித்து விடுவேன். ஜாக்கிரதை!

வேளாளன்:- கூத்தரே! வீண் மிரட்டல் வேண்டாம். தலையையே துண்டிக்கத் தயாராய்க் காத்திருக்கும் உமது கொலைஞர்களைக் கண்டும் அஞ்சாத நாங்கள் நாவைத் துண்டிப்பதற்காகப் பயந்து விடமாட்டோம். நெற்றிக் கண்களைக் காட்டினும் குற்றம் குற்றமே என்று கூறிய நக்கீரன் போன்ற வீரப்புலவர்கள் என்றும் தமிழ் நாட்டில் இருப்பார்கள் என்பதை மறந்துவிடவேண்டாம்.

கூத்தர்:- தற்புகழ்ச்சி வேண்டாம். என் பாட்டில் கண்ட குற்றத்தை எடுத்துரையும். இல்லையேல் இறப்பதற்குச் சித்தமாகுக.

வேளாளன்:- அரசே! பேசுந் தெய்வங்களாகிய புலவர்களே! அவையினர்களே! எல்லோரும் கேளுங்கள். முன்பொரு சமயம் இவர் விக்ரமசோழ மகாராஜாவின் மேற்பாடிய அண்டத்துப் பரணி என்னும் நூலில்,

"கரத்துஞ்சிரத்துங் களிக்குங்
களிற்றுடைக்கண்டன் வந்தான்
இரத்துங் கபாடமினித்திறப்
பாய்பாண்டியனணங்கே!
உரத்துஞ் சிரத்துங் கபாடந்திறந்
திட்ட துண்டிலங்கா
புரத்துங் கபாடபுரத்துங் கல்யாண
புரத்தினுமே"

*என்று பாடி இருக்கின்றார். பாட்டின் பொருளை நன்றாகக் கவனியுங்கள். இந்தப் பிரம்மாண்டமே நகரமாம். பூமியைச் சுற்றிலும் சக்ரவாளகிரியே மதில்களாம். அதற்கு உட்புறம் உள்ள சப்த சமுத்திரங் களும் அகழிகளாம். மகாமேருதான் கோட்டையின் கொடிக்கம்பமாம். எப்படி? கோட்டைக்கும் மதிலுக்கும் பாதுகாப்பாக உள்ள அகழி மதிலுக்குள் அமைந் திருக்கப் பார்த்தீர்களா யாரேனும்?*

*எல்லோ:-* இல்லை, இல்லை.

*வேளாளன்:-* கேள்விப்பட்டதாவது உண்டா?

*எல்லோ:-* இல்லை; எங்கும் கேட்டதில்லை.

*வேளாளன்:-* *மதிலுக்குள் அகழியைக் கற்பித்துப் பாடியது குற்றமல்லவா? அகத்திலுள்ள அகழால் கோட்டைக்கு என்ன பயன்? இராமாயணத்தில்கூட கவிச்சக்கரவர்த்தி கம்பர் நகரச் சிறப்பைச் சொல்லும்போது,*

"நேமிமால் வரைமதிலாக நீள்புறப்
பாமமாகடல் கிடங்காகப் பன்மணி
வாமமாளிகை மலையாக மன்னர்க்குப்
பூமியும் அயோத்தியுமா நகரம் போலுமே"

என்று அண்டத்திலுள்ள பெரும்புறக்கடலையல்லவா அகழென்று அழகாகச் சொல்லியிருக்கிறார். இதை நீர் கேட்டதுகூட இல்லையா?...உம். இப்பேர்ப்பட்ட நீர்தானா எங்களைத் தண்டிக்கப் போகிறீர்? வெட்கம்; வெட்கம். இது எங்கும் காணாத நீதி.

விகடகவி:- நீதியா! அப்படியும் ஒன்றா இங்கே இருக்கிறது? இதோ நிற்கிறாரே சாட்சாத் நீதியின் பிரதிபிம்பம்.

(கூத்தரைக் காட்டி இப்படிச் சொல்ல புலவர்கள் சிரிக்கின்றனர்.)

குலோத்:- சட்! வாயாடிகளே! நாவைத் துண்டித்து விடுவேன்.

கூத்தர்:- அரசே! எய்தவனிருக்க அம்பை நோவதில் பயனென்ன? இவர்களைக் கடிந்துகொள்வதில் பயனொன்றுமில்லை. இவ்வளவும் நம்மை அவமானம் செய்யும் நோக்கத்துடன் சிறையிலேயே புகழேந்தி செய்த சூழ்ச்சியே ஆகும். ஆகையால் இவர்கள் இழைத்த குற்றத்தின் தண்டனை யனைத்தையும் புகழேந்தியே அடையவேண்டும்.

குயவன்:- இல்லை; இல்லை. நீர் கேட்ட கேள்விகளுக்கு நாங்கள் பதில் அளித்தது குற்றமானால், அதற்கு நாங்களே பொறுப்பாளிகள். புகழேந்திப் புலவர் எங்களனைவருக்கும் ஆசிரியராகையால் எங்களுக்கு விடுதலை யென்றால் அவரும் விடுதலையடைய வேண்டும், இல்லையேல் எங்களையும் தண்டிக்க வேண்டும்.

கூத்தர்:- பார்த்தீர்களா! இத்தனையும் அவன் செய்த சூழ்ச்சியே என்பது இப்பொழுதாவது தெரிகிறதா?

குலோத்:- ஆம், இத்தனைக்கும் காரணம் புகழேந்திப் புலவர் தான். ஆனால்...இவர்களை யெல்லாம்......

கூத்தர்:- இவர்களையெல்லாம் விடுதலை செய்துவிட்டு! புகழேந்தியை மட்டும் கைவாளுக்கு!......?

உதயணர்:- அரசே! இது கொஞ்சமும் நீதியற்ற செயலாகும். யாருக்கும் எத்தகைய தீங்கும் செய்தறியாத புகழேந்தியைக் கொன்றால் அப்பழி இவ்வுலகுள்ளவரை அகலாது.

குலோத்;- ஆமாம்! உதயணரே! அதைப்பற்றி பிறகு சாவகாசமாக யோசிக்கலாம். இப்போது எல்லோரையும் விடுதலை செய்துவிட்டு புகழேந்திப் புலவரை மட்டும் சிறையிலேயே வையுங்கள்—உம் காலதாமதமாகி விட்டது. பூசை நடைபெறட்டும்.

(துர்க்கைக்குப் பூஜை நடைபெறுகிறது.)

[திரை.]

## காட்சி—19.

**இடம்**:-குணவதியின் அந்தப்புரம். **காலம்**:- மாலை.

(குணவதியும் உதயணரும் உரையாடுகின்றனர்.)

குணவதி:- உதயணரே! இவையெல்லாம் வீண் சமாதானங்கள்; நான் யாருக்குச் சலுகை காட்டவேண்டுமென்று வற்புறுத்தினேனோ அவரைச் சிறையிலேயே வருந்த விட்டு மற்றவர்களை யெல்லாம் விடுதலை செய்வதென்றால் இதிலிருந்தே அரசரின் போக்கு விளங்க வில்லையா?

உதயணர்:- தேவி! கூத்தரின் கொடுமைக்கு அரசரைக் குறைகூறிப் பயனில்லை. அரசர் குறுக்கிடா திருந்தால் கூத்தர் இன்று நமது புலவரைக் கொன்றே தீர்த்திருப்பார்.

குணவதி:- உதயணரே! உமது பேச்சு வெகு விசித்திரமாயிருக்கிறது. மீண்டும் புலவரைச் சிறையிட்ட சோழ மண்டலாதிபதியின் கருணையை உம்மைத் தவிர வேறு யார்தான் புகழமுடியும்?

உதயணர்:- சந்தர்ப்பம் அப்படியாகி விட்டது. என்மீது எவ்விதத் தவறும் இல்லை. தங்கள் கட்டளையை நான் நிறைவேற்றி விட்டேன்.

குணவதி:- நீங்கள் நிறைவேற்றியிருக்கலாம். ஆனால் அதற்குப் பலன்தான் இல்லை. குருவுக்கேற்ற அரசர்; அரசருக்கேற்ற அமைச்சர்.

(தோழி ஒருத்தி வந்து குணவதியை வணங்குகிறாள்.)

குணவதி:- என்ன விஷயம்?

தோழி:- அரசர் அந்தப்புரம் வருவதாக அறிவிக்கச் சொன்னார்.

குணவதி:- அரசர் இப்போது எங்கிருக்கிறார்?

தோழி:- வசந்த மாளிகையில் கூத்தருடன் பேசிக் கொண்டிருந்தார். அநேகமாய் வரும் சமயந்தான்.

குணவதி:- சரி; நீ போ.

(தோழி போகிறாள்.)

உதயணரே! இனி தாங்களும் போகலாம்.

உதயணர்:- வணக்கம்; நான் வருகிறேன்.

குணவதி:- குமுதா! அரசர் இப்போது இங்கு வருகிறாராம். புலவரைச் சிறையிலிருந்து விடுதலை செய்யும் வரை எனக்கு அரசரைப் பார்க்க விருப்பமில்லை. நீ போ. சீக்கிரம் எல்லாக் கதவுகளையும் தாளிட்டுவிடு. என் உத்திரவில்லாமல் யாரும் கதவைத் திறக்கக் கூடாது.

குமுதம்:- அம்மணி! இது விபரீதமான சங்கல்ப மல்லவா?

குணவதி:- ஆம்; வேறு வழியில்லை. கலகம் பிறவாமல் நியாயம் பிறவாது.

குமுதம்:- அரசரின் கோபத்தி...:. ற்......கு......?

குணவதி:- பொறுப்பாளி நான். உம். சீக்கிரம் நான் சொன்னபடி செய். அரசர் என்ன கேட்டாலும் யாரும் பேசலாகாது.

குமுதம்:- உத்திரவு.

(கதவுகளைத் தாளிடுகிறாள்.)

(குலோத்துங்கன் வருகிறான். கதவடைப்பைக் கண்டு திகைக்கிறான்.)

குலோத்:- ஆகா! என்ன? இந்நேரத்தில் கதவுகளெல்லாம் தாளிடப் பெற்றிருக்கின்றன. (சுற்றிப் பார்த்து) யார்!

யாரிங்கே! இங்கே ஒருவருமில்லையா? குணவதி!- குமுதா!-குணவதி!

(கதவைத் தட்டுகிறான்.)

என்ன! பதிலையே காணோம்!...குணவதி! குணவதி!

(மீண்டும் கதவைத் தட்டுகிறான்.)

என்ன ஆச்சர்யம்! நூற்றுக் கணக்கான பணியாளர்கள் நடமாடிக்கொண்டிருக்கும் இம்மாளிகை மனிதவர்க்கமே இல்லாத பிலத்துவாரம் போல் சலனமற்றிருக்கிறதே! (மீண்டும் ஆவேசத்துடன் கதவை உதைக்கிறான்.) குணவதி! குணவதி!......? குணவதிக்கு என்மீதில் ஏதேனும் கோபமாய் இருக்குமோ?...ஆம்; ஆம்; அப்படித் தான் இருக்கவேண்டும். அப்படி ஒன்றும் அவள் மனம் நோக நான் நடந்ததில்லையே......! அப்படியே அரசிக்கு என்மீது கோபமிருந்தாலும் இங்குள்ள மற்றப் பணிப் பெண்கள் கூடவா என் கூப்பாட்டை அசட்டை செய்வார்கள்? முடி மன்னர்களெல்லாம் நடுங்கி அடிபணிந்து திரைப் பொருள் அளக்க அரசாட்சி செய்யும் குலோத்துங்கனுக்கா தன் அந்தப்புரத்திலேயே அவமதிப்பு? (பெருமூச்சுவிட்டு) உம்; இருக்கட்டும். அரச முறைப்படி நமது அரசவைப் புலவரையே அழைத்து அரசியின் ஊடலைத் தீர்க்க ஏற்பாடு செய்வோம்.

(அங்குள்ள மணியை அடிக்கிறான். ஒரு காவலன் வருகிறான்')

ஓடு சீக்கிரம்.

(காவலன் ஓடுகிறான்.)

டேய்! டேய்! இங்கே வாடா!

காவலன்:- (திரும்பி வந்து) என்ன உத்தரவோ?

குலோத்:- எங்கேயடா ஓடுகிறாய்? மடையா!

காவலன்:- நீங்கள்தானே மகாராஜா ஓடச்சொன்னீர்கள்.

குலோத்:- நான் எங்கே போகச் சொல்லுகிறேன் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

காவலன்:- ஆமாம். சொல்லுங்கள்!

குலோத்:- நமது அரசவைப் புலவரிடம் போய் நான் இங்கு அவரை வரச் சொன்னதாகச் சொல்லிச் சீக்கிரம் அழைத்துவா.

காவலன்:- உத்தரவு!

(ஓடுகிறான் )

குலோத்:- என்ன! உள்ளே ஆட்கள் நடமாடும் சப்தம் கேட்கிறதே! எதற்கும் இன்னொரு முறை அழைத்துப் பார்ப்போம். குணவதி! குமுதவல்லி!

(மீண்டும் தட்டுகிறான்.)

விருத்தம்.

**''கனவண்டலிடு கனக கொங்கைமிசை நிலவெழுந்து**
**கனல் சொரியுமென்றளக பந்திமிசை யளிகள் பந்தரிடு**
**மரிவைமீர் கடைகடிற மினோ! சூதள வளவெனு**
**மிளமுளைத் துடியள வளவெனு நுண்ணிடைக்**
**காதளவெனுமாதர் விழிக் கடலமு தனையவர் திறமினோ''**

குணவதி! உனக்கு நேர்ந்த குறைதான் என்ன என்பதை என்னிடம் சொல்லலாகாதா! மன்னர் மன்னர்களும் வருகை கண்டு எதிர்கொண்டு வணங்கி உபசரிக்கும் உன் நாயகன், சோழ மண்டலத்தின் துணைவன், உன் தரிசனத்திற்காக எத்தனை நேரம் காத்திருக்கிறான்? இந்த இழிவு உன்னையன்றோ சாரும். உன் நாயகன் கால்கள் சோரக் காத்திருப்பது கண்டுமா உன் மனம் இளகவில்லை?

(கூத்தரும் காவலனும் வருகின்றனர்.)

கூத்தர்:- மன்னா! என்ன விஷயம்? ஏன் இத்தனை அவசரமாக என்னை இங்கழைத்துவரப் பணித்தீர்கள்?

குலோத்:- விஷயம் என்னவென்று எனக்கே விளங்கவில்லை. வழக்கப்படி அந்தப்புரத்திற்கு வந்தேன். வழக்கத்திற்கு மாறாக அந்தப்புரக் கதவனைத்தும் அடைபட்டிருக்கிறது. என்ன சொல்லியும் பதிலில்லை. கதவும் திறந்தபாடில்லை.

கூத்தர்:- அரசியின் இத்தகைய ஊடலுக்குக் காரணம்?

குலோத்:- அதைத் தெரியவும் தீர்க்கவும் தானே தங்களை அழைத்தேன்.

கூத்தர்:- இங்குள்ள பணியாளர்களெல்லாம் எங்கே?

குலோத்:- இல்லை; ஒருவரையுமே காணவில்லை.

கூத்தர்:- சரி; இருக்கட்டும். நான் அழைத்துப் பார்க்கிறேன்.

(கதவைத் தட்டி)

குணவதி! குணவதி! மகாராணி! உன் நாயகன் வாயிலில் காத்திருப்பது உனக்கு வருத்தமாயில்லையா? உலகெலாம் வணங்கும் வீரப்ரதாபன் உன் வாயிலில் உன் சேவைக்குக் காத்திருக்க உதாசீனம் செய்வது முறையல்ல.

விருத்தம்.

**"நானே யினியுன்னை வேண்டுவதில்லை நளின மலர்த்**
**தேனே கபாடந் திறந்திடுவாய்; திற வாவிடிலோ**
**வானேறனைய விரவிகுலாதிபன் நின்வாசல் வந்தால்**
**தானே திறக்கும் நின்கையிதழாகிய தாமரையே!"**

(கூத்தர் பாடி முடிந்ததும் குணவதி மீண்டும் ஒரு தாளிடுகிறாள்.)

குணவதி:- ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்.

(கூத்தர் அவமானமும் கோபமும் கொண்டு திரும்புகிறார்.)

குலோத்:- புலவரே! தாங்களும் இப்படி முனிவு கொண்டு சென்றுவிட்டால் நான் என்ன செய்வேன்? அவள் பேதை. என் பொருட்டு தங்களுக்கு நேர்ந்த அவமதிப்புக்கு மன்னித்து, அரசியின் கோபத்தைத் தணிக்க தாங்கள் தான் வழிசெய்ய வேண்டும்.

கூத்தர்:- என்னை விஷப் பரீக்ஷையில் இறக்கி வேடிக்கை பார்த்து விட்டீர்கள்!

குலோத்:- நடந்ததை நினைத்து வருந்திப் பயனில்லை. தங்களையன்றி......

கூத்தர்:- வேந்தே! இனி இவ்விஷயத்தில் தலையிட எனக்கு விருப்பமில்லை. அதோ! அமைச்சர் உதயணர் வருகிறார் அவரைக் கேட்டால் ஒருக்கால்......?

(உதயணர் வருகிறார்.)

உதயணர்:- அரசே! வணக்கம்!.........அரசே! இதென்ன இப்படி இங்கு நிற்பானேன்? ஏதோ கவலை கொண்டவர் களைப் போல் நிற்கக் காரணம்?

குலோத்:- காரணம்; (கேலிச்சிரிப்புடன்) குணவதியின் அந்தப் புரத்திற்குட் செல்லக் குலோத்துங்கனுக்குத் தடை?

உதயணர்:- ஆகா! என்ன ஆச்சர்யம்!

கூத்தர்:- ஆச்சர்ய மில்லை; உண்மை!

உதயணர்:- விஷயமின்ன தென்...று.........!

கூத்தர்:- அதுதான் ஒருவருக்கும் விளங்கவில்லை.

உதயணர்;- (கூத்தரிடம்) ஏன் தாங்களாவது அழைத்துப் பார்த்தால்......?

கூத்தர்:- எல்லாம் ஆயிற்று. என் குரல் கேட்டதும் இன்னொரு தாளும் போடப்பட்டு விட்டது.

உதயணர்:- ஒகோ! அப்படியா விஷயம்.!

குலோத்:- என்ன, உதயணரே! இதன் காரணம் ஏதேனும் உமக்குத் தெரியுமா?

உதயணர்:- எனக்கொன்றும் தெரியாது. ஆனால், நீங்கள் சொல்வதிலிருந்து புகழேந்திப் புலவரைச் சிறையிட்டு இருப்பதுதான் அரசியின் கோபத்திற்குக் காரணமா யிருக்கலாமென்று நினைக்கிறேன். இல்லையானால் நமது சமஸ்தானப் புலவர் வேண்டுகோளையும் மறுத் திருக்க மாட்டார்களல்லவா? எதற்கும் புகழேந்திப் புலவரை விடுவித்து அவரைக்கொண்டே அரசியின் கோபத்தைச் சமாதானம் செய்வது நலமென நினைக்கிறேன்.

குலோத்:- ஆம். உதயணர் சொல்வதும் உண்மைதான். அவள் தந்தையின் அபிமானப் புலவரும் அவள் ஆசிரியருமாகிய புகழேந்திப் புலவரைச் சிறையிட்டது தான் அவளுடைய வருத்தத்திற்குக் காரணமா யிருக்கலாம். ஆம்; அவரை விடுவித்து அவரைக் கொண்டே.........

கூத்தர்:- வேந்தே! இது விபரீத முடிவு! அரசத்துரோகியும், நாட்டில் அமைதியைக் குலைக்கும் கலகக்காரனுமாகிய புகழேந்தியை விடுவிப்பது பெரும் ஆபத்தில் முடியும்.

உதயணர்:- அரசே! புலவர் சொல்வதைப்போல், புகழேந்திப் புலவர் அவ்வளவு பயங்கர மனிதராக எனக்குப் புலப்பட

வில்லை. அவர் மகா உத்தமர். கனவிலும் பிறருக்குத் தீங்கிழைக்கக் கருதாத அவரைச் சிறையில் வைத்திருப்பதுதான் நம் நாட்டு மக்களுக்கு அதிருப்தியே தவிர, அவரை விடுதலை செய்தால் யாருக்கும் அதிருப்தி உண்டாகாது. மேலும் அவர் விடுதலையால் பட்ட மகிஷியும் மகிழ்ச்சியடைவார்கள்.

குலோத்:- ஆம்; நீங்கள் சொல்வதுதான் சரி! இதோ என் கணையாழி! இதைச் சிறைக்காவலரிடம் காட்டி, நமது உத்தரவென்று சொல்லி புகழேந்திப் புலவரை விடுதலை செய்து, தக்க மரியாதையுடன் சிவிகையில் இங்கு அழைத்து வாருங்கள்.

(கணையாழியை உதயணரிடம் கொடுக்கிறான்.)

உதயணர்:- உத்தரவு! (வணங்கிச் செல்லுகிறார்.)

கூத்தர்:- மன்னா! தங்கள் செய்கையின் மர்மம் எனக்கொன்றும் விளங்கவில்லை. இதைவிட நீர் என்னையே சிறையிட்டு விட்டோ அல்லது நாடு கடத்திவிட்டோ புகழேந்தியை விடுதலை செய்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்.

குலோத்:- புலவரே! மன்னிக்க வேண்டும். குணவதியின் ஊடலைத் தவிர்க்க வேறு வழியில்லை. இந்தத் தர்ம சங்கடத்திற்கிடையே நான் வேறு என்ன செய்ய முடியும்?

கூத்தர்:- அதற்காக நம் வைராக்கியத்திலிருந்து தவறி விடுவதா? பலர் முன் பல முறை தங்களையும் என்னையும் அவமதித்துப் பேசிய புகழேந்தியை இந்த அற்ப காரணத்திற்காக விடுதலை செய்தால்—கண்டவர் நம்மை நகைக்க மாட்டார்களா?

குலோத்:- இதில் நகைப்புக்கென்ன இருக்கிறது? குற்றவாளிகளைத் தண்டிப்பதும் விடுவிப்பதும் இயற்கை தானே?

(உதயணர் வருகிறார்.)

உதயணர்:- அரசே! வணக்கம்!

குலோத்:- யார்! உதயணரா! என்ன! இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டீர்கள்! ஏன் புலவர் வரவில்லையா?

உதயணர்:- ஆம்; அதோ சிவிகையில் வருகிறார். சீக்கிரம் வரவேண்டுமென்றே குதிரையில் சென்று வந்தேன்.

கூத்தர்:- ஆஹா! புகழேந்தியின் விடுதலையில் உதயணருக்கு எவ்வளவு அக்கரை? காரியம் வெகு விரைவிலல்லவா நடைபெறுகிறது.

உதயணர்:- புகழேந்திப் புலவரின் விடுதலையில் எனக்கு மட்டுமல்ல, இந்நாட்டு மக்கள் அனைவருக்குமே அக்கரையுண்டு. ஆனால், காரியம் விரைவில் நடைபெறுவதற்குக் காரணம் அதுவல்ல. மகாராணியின் கோபம் தணிந்து மன்னரின் மனமும் மகிழ்ச்சியடைய வேண்டு மென்பதுதான்.

(சிவிகை வரும் சப்தம் கேட்கிறது.)

அதோ அவரும் வந்துவிட்டர்.

கூத்தர்:- (தனக்குள்) ஆம்; அதோ வந்துவிட்டார் கல்விக் கடல்; புலவர் சிகாமணி! (கேலிச்சிரிப்பு.)

(புகழேந்தி வருகிறார்.)

குலோத்:- வருக! வருக! புலவர் பெருமானே! நடந்தவற்றை எண்ணி வருந்தாது மன்னிக்கவேண்டும். இனி......!

(வணங்குகிறான்.)

புகழேந்தி:- (வணங்கிய அரசனைப் பரிந்து தழுவி) வேந்தே! இதென்ன விளையாட்டு! யாரை யார் மன்னிப்பது? மனிதனை மனிதன் தண்டிப்பதும், மன்னிப்பதும், மண் வீடு கட்டி விளையாடும் சிறுவர்களின் விளையாட்டைப் போன்றது. நம் அனைவரையுமே மன்னிக்கவும் ரக்ஷிக்கவும் இறைவன் ஒருவன் இருக்கிறான்.

குலோத்:- ஆம்; என் மனோசாந்திக்காகவேனும், என்னை மன்னித்தேனென்று தாங்கள் ஒரு வார்த்தை சொல்லா விடில்......!

புகழேந்தி:- கடவுள் தங்களை மன்னிப்பார். வேந்தே! திடீரென்று என்னை விடுதலை செய்து இங்கு அழைத்துவரக் காரணம்?

குலோத்:- காரணம்! உதயணர் சொல்லவில்லையா?

புகழேந்தி:- இல்லை. என்னை விடுவித்து சீக்கிரம் அழைத்து வரவேண்டுமென்பது தங்கள் கட்டளையென்றும், வேறொன்றும் தமக்குத் தெரியாதென்றும் சொன்னார்.

கூத்தர்:- (தனக்குள்) உம்...எல்லாம் கபட நாடகம்.

புகழேந்தி:- (கூத்தரைத் திரும்பிப் பார்த்து) யார்? கூத்தரா! வணக்கம். வணக்கம். இதுவரை நான் கவனிக்கவில்லை. மன்னிக்க வேண்டும்.

கூத்தர்:- பரவாயில்லை.

குலோத்:- மகாராணிக்கு இன்று அளவற்ற கோபம் வந்து விட்டது. எதற்காக யார்மேல் என்ற விவரமொன்றும் தெரியவில்லை. அந்தப்புரக் கதவனைத்தும் அடை பட்டிருக்கிறது. அழைத்தாலும் பதிலில்லை,

புகழேந்தி:- ஆச்சரியம்தான். உம். (சற்று மௌனம்) ஏன் நமது கூத்தரைக் கொண்டு அரசியின் கோபத்தைத் தணிக்க.........?

குலோத்:- எல்லாம் ஆயிற்று. ஒன்றும் பயனில்லை. இனி தங்களால் தான் குணவதியின் கோபத்தைத் தவிர்க்க முடியும்.

புகழேந்தி:- கூத்தராலேயே முடியாத காரியம் என்னால் எப்படி முடியும்?

குலோத்:- குணவதியின் விஷயத்தில் அப்படி நினைப்பதற் கில்லை. ஏனெனில் அவள் உங்கள் மாணவி என்பதோடு மட்டுமின்றி அபிமானப் புத்திரியாகவும் இருப்பதால் அவசியம் உங்கள் சொல்லைத் தட்டமாட்டாள். பாம்பின் கால் பாம்புக்குத்தான் தெரியும். அவள் மனோநிலையை உங்களால்தான் அறிய முடியும்.

புகழேந்தி:- குணவதிக்கும் எனக்கும் உள்ள தொடர்பையும் அன்பையும் இப்போதாவது நீங்கள் உணர்கிறீர்களே! அதுவே போதும்...உம்...ஏதோ...! அதையும் சோதித்துப் பார்ப்போம்.

(கதவருகிற் சென்று பாடுகிறார்.)

**''இழையொன்றிரண்டு வகிர்செய்த நுண்ணிடை ஏந்தியபொற்**
**குழையொன்றிரண்டு விழியணங்கே! கொண்டகோபந்தணி**
**மழையொன்றிரண்டுகைம் மானாபரணன்நின் வாசல்வந்தால்**
**பிழையொன்றிரண்டு பொறாரோ குடியிற் பிறந்தவரே.''**

(குணவதி கதவைத் திறந்து வந்து புகழேந்தியை வணங்கு கிறாள்.)

குணவதி:- புலவர் நாயகமே! வணக்கம்; வாருங்கள். ஏன் நிற்கவேண்டும்? இதோ இந்த ஆசனத்தில் அமருங்கள்.

புகழேந்தி:- குணவதி! உன் அன்புக்கு மகிழ்ச்சி. நான் அமருவதிருக்கட்டும். உன் வாழ்க்கைத் துணைவன்

இந்நாட்டின் தலைவன், சோழர் குலத்தின் சுடரொளி, படைமுகமெங்கணும் பகைவர்கள் நடுங்கப் போர் புரிந்து வெற்றி விருதுகளின் கொற்றம் துலங்கச் சீரரசு செலுத்தும் உன் அன்பிற்குரிய நாயகன், உனது கருணாகடாட்சத்துக்காகக் காத்திருக்கக் கண்டும் காணாதவள் போல் இருப்பது, உன்போன்ற உயர்குடிப் பிறந்த மங்கையர்களுக்கு அழகல்ல! முதலில் உன் மணாளனை அமரச் செய்.

குணவதி:- ஐயனே! அதைப்பற்றிப் பிறகு யோசிக்கலாம். தாங்கள் அமருங்கள்.

புகழேந்தி:- குணவதி! உனக்கும், உன் நாட்டிற்கும் உன் நாட்டு மக்களுக்கும், இரவலர்களுக்கும், புலவர்களுக்கும், தற்போது எனக்கும் நாயகனாகிய சோழ மன்னனும்' சோழ நாட்டின் அரசவைப் புலவராகிய கூத்தரும் உன் வாசல் வந்து கால்கடுக்கக் காத்திருக்கக் கண்டும், அவர்களைக் கௌரவிக்காமல் என்னை மட்டும் அமரச் சொல்வது நியாயமா? பெண்கள் பொறுமையின் வடிவங்களாகும். உன் நாயகன் ஒன்றிரண்டு குற்றமிழைத்திருந்தாலும் அதைப் பொறுப்பதுதான் உத்தமப் பெண்களின் கடன்.

குணவதி:- என் நாயகன் எனக்கு ஏதாவது குற்றமிழைத்திருந்தாலல்லவா? அப்படியொன்றும் இதுவரை நேர்ந்ததே இல்லையே?

புகழேந்தி:- பின்பு உனக்கு அரசரின்மேல் கோபம்வரக் காரணமென்ன?

குணவதி:- அரசர் தங்கள் விஷயத்தில் இழைத்த தவறை என்னால் தாளமுடியவில்லை,

புகழேந்தி:- குணவதி! என் பொருட்டாகவா உனக்கு மன்னரிடம் இத்தனை கோபம்? இது அறியாமை. அரசன் நாட்டின் நன்மை தீமைகளைக் குறித்து இத்தகைய காரியங்கள் அநேகம் செய்ய நேரிடலாம். இதற்கெல்லாம் நீ கோபிக்கலாமா? மேலும் தண்டனையை ஏற்றுக்கொண்ட நானே மன்னருடன் மகிழ்ச்சியோடு நேசமாய் இருக்கும் போது, எனக்காக நீ வருந்துவது நியாயமா?

குலோத்:- பிறர் குற்றத்தைப் பொறுப்பதுதான் தங்களைப் போன்ற பெரியோர்களின் குணம். தங்களுக்கு நான் உண்மையிலேயே மன்னிக்கக் கூடாத பெருந் தவறிழைத்து விட்டேன். ஆனால், இப்போது அதை நினைந்து வருந்துகிறேன். வெட்கமடைகிறேன். குணவதி இன்று என் அறிவுக் கண்களைத் திறந்தாள். குணவதி யின் ஊடலே இன்று எனக்கு ஓர் ஒப்பற்ற உத்தமரின் தோழமையை உண்டாக்கியது.

புகழேந்:- எல்லாம் நன்மைக்கே. சென்றதைச் சிந்தித்து வருந்துவதிற் பயனில்லை. வாருங்கள். எல்லோரும் அமருவோம்.

குலோத்:- அமருவதற்கு இன்னும் மகாராணியின் தயவு பிறக்கவில்லையே!

குணவதி:- மகாராணியின் விருப்பம் எதுவோ அது நிறைவேறி விட்டது. இனி எப்போதும்போல் குணவதி உங்கள் அடிமைதான்.

குலோத்:- அப்பா! இந்தப் பெண்களே பொல்லாதவர்கள். நினைத்ததை முடித்தே தீருவார்கள்.

(எல்லோரும் அமருகிறார்கள்.)

கூத்தர்:- அதற்கு அனுசரணையாக உதயணரைப் போல் ஒரு ஆள் இருந்தால் நினைத்த காரியம் ஏன் முடியாது?

குணவதி:- ஆமாம். ஆனால் அவர் அனுசரணையால் புலவர்களைச் சிறையிடவோ, பலியிடவோ முடியாது. இத்தகைய நல்ல காரியங்களுக்குத்தான் அவர் பாடுபடுவார்.

புகழேந்தி:- இதென்ன பேதமை! பெரியோர்கள் மனம்நோக இப்படியெல்லாம் பேசலாமா? அவர் என்னைச் சிறையிடாதிருந்திருந்தால் இத்தனை தமிழ்ப் புலவர்களின் நட்பும் எனக்குக் கிடைத்திருக்குமா? சிறைக் கூடமா அது? இல்லை இல்லை, கலைக்கூடமாகவே திகழ்ந்தது எனக்கு. ஆஹா! அங்கு நான் கண்ட இன்பக் காட்சிகளையும், சிந்தனைச் சிற்பங்களையும் இன்ப நினைவுகளையும் என்றைக்கும் மறக்க முடியுமா? ஆஹா! அமைதி இன்பத்தையும் அறிவின் ஆராய்ச்சித் திறத்தையும், அருந்தமிழ்த் திறத்தையும், அன்பின் பெருமையையும், நான் அங்கல்லவா பூரணமாகக் கண்டேன்?—கள்ளம், கபடம், சூது, காமம் முதலிய துர்க்குணமுள்ளவர்களுக்குத்தான் சிறை ஒரு நரகம் போலும். என் வரை சிறைவாழ்க்கை ஸ்வர்க்க வாழ்க்கையாகவே திகழ்ந்தது.

குலோத்:- நன்மையாயினும் தீமையாயினும் நடந்தவற்றையெல்லாம் மறந்து, புலவர் மணிகளாகிய நீங்கள் இருவரும் நட்பினர்களாயிருந்து எனக்கும் என் நாட்டு மக்களுக்கும் அறிவுரை பலவும் கவிதை, காவியம், இலக்கியம் முதலிய தமிழ்ச் சுவையமுதும் ஊட்டி மகிழ்விக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். இம்மகிழ்ச்சியின் அறிகுறியாக நாளை வசந்த மாளிகையில் ஒரு சிறு விருந்தளிக்க ஏற்பாடு செய்ய நினைக்கிறேன். அதில் நீங்கள் இருவரும் மகிழ்ச்சியோடு கலந்து கொள்ள வேண்டும்.

இரு புலவர்களும்:- ஆஹா! அப்படியே!

[திரை]

## காட்சி—20

**இடம்:**- முரணை நகர் அரண்மனை தர்பார். **காலம்:**- பகல்

(சந்திரன், அமைச்சர், புலவர்கள் முதலானவர்களுடன் வீற்றிருக்கிறான். சபையோரின் குதூகலக் கரகோஷ சிரக்கம்பங்களுக்கு இடையே நாட்டியம் நடைபெற்று முடிகிறது.)

ஒரு புலவர்:- நடனம் வெகு அற்புதமாக இருந்தது இன்று. ஆனால் ! அரசரின் மனம் நட்னத்தில் லயிக்கவே இல்லை.

அமைச்சர்:- ஆம். நானும் கவனித்தேன். இன்றுமட்டுமல்ல! சில நாட்களாகவே அரசர் ஆழ்ந்த சிந்தனையில்......?

சந்திரன்:- உண்மைதான் மனிதன் வாழ்நாளெல்லாம் இத்தகைய கேளிக்கைகளால் அடையும் சிற்றின்பங் களிலேயே மூழ்கித் திருப்தியடைந்து வாழ்வை முடித்துக் கொள்ளுகிறான். அத்துடன் அவனையே மறந்து விடுகிறது. மனிதன் முயற்சியால் முடியாத காரியம் எதுவுமில்லை. முயற்சியும் அறிவுத் திறனும் மனோவலி யும் உள்ளவர்கள் செய்யும் அரிய காரியங்களால் இறந்தும் இறவாதவராய் புகழுடம்புடன் உலகில் எத்தனை பேர் வாழுகிறார்கள்?

புலவர்:- ஆம்-

**"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலிற் றோன்றாமை நன்று"**

என்பது வள்ளுவரின் மறையல்லவா?

சந்திரன்:- என் ஆசையும் அதுதான். என் வாழ் நாளைக்குள் மக்கள் அனைவருக்கும் நன்மை பயக்கக் கூடியதும்

உலகம் உள்ளவரை அழியாததுமாகிய ஓர் அரிய காரியத்தைச் செய்யவேண்டும். இதற்குத் தக்க யோசனை கூறுவோருக்கு ஆயிரம் பொற்காசுகள் வெகுமதியளிக்கத் தீர்மானித்துள்ளேன்.

அமைச்சர்:- சிறந்ததோர் கலாசாலை யமைத்து அரிய கலைகள் அனைத்தையும் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்தால்......!

சந்திரன்:- (திருப்தியற்றவராய் தலையை அசைக்கிறார்.)

சேனாதிபதி:- நம்மிலும் சிறந்த ஒரு பெரிய வல்லரசின் மீது படையெடுத்து வீரப்போரியற்றி வெற்றி கண்டால்.........!

சந்திரன்:- போரில் ஜெயாபஜெயம் ஒருவர் பங்கல்ல. மேலும் நம்மைப் பகைக்காமல் இருக்கும்போது வலுவில் நாமாக அதர்ம யுத்தம் தொடுத்து அதன் காரணத்தால் நிரபராதிகளாகிய கோடிக்கணக்கான பொதுமக்களின் உயிரை வதைப்பதென்பது பேராசைப் பேய்பிடித்த கொடுங்கோலர்களின் செய்கையாகும்.

ஒரு அந்தணர்:- ஒரு பெரிய அன்னசத்திரம் கட்டி ஏராளமான மான்யம்விட்டுப் பிராமணர்களுக்கு அன்னதானம், வஸ்திரதானம், கோதானம் முதலிய தானங்கள் வழங்கினால் தங்களை இகத்திலும் பரத்திலும் வாழ்த்துவார்கள். சாஸ்திரங்கள்கூட......

சந்திரன்:- போதும். போதும். போதும். நாட்டில் இப்போ திருக்கும் சோம்பேறிக் கூட்டமும், காஷாயப் போலி வேடதாரிகளும் போதும். இன்னமும் இத்தகைய கூட்டத்தை உற்பத்தி செய்யும் கைங்கர்யத்தில் நாம் இறங்கவேண்டாம்.

ஒரு புலவர்:- அரசே! இவையெல்லாவற்றையும் விடத் தற்போதுள்ள சிறந்த புலவர்களில் ஒருவரைக் கொண்டு உயர்ந்ததோர் இலக்கிய நூலோ அல்லது காவியமோ இயற்றினால், உலகமக்களின் அறிவு வளர்ச்சிக்கும், உலகுள்ளவரை தங்கள் பெயரும் நூலாசிரியர் பெயரும் நிலைத்திருக்குமல்லவா!

சந்திரன்:- ஆம்; இது நல்ல யோசனை! தற்போது தமிழ் நாட்டுக்கு இதைவிட நம்மால் செய்யத் தகுந்த தொண்டு ஒன்றும் இருக்க முடியாது. ஆனால் ..! அதற்குத் தகுந்த புலவரைத் தேடிப்பிடிப்பதென்பது...?

புலவர்:- அரசே! தாங்கள் நினைத்தால் வெகு சீக்கிரத்தில் முடியும்.

சந்திரன்;- உண்மையாகவா? புலவரே! அதற்காக எத்தனை பொருள் செலவாயினும் சரி. இன்று முதலே அம்முயற்சியில் பூரணமாக இறங்கத்தயார். தகுந்த புலவர் எங்குள்ளார்? தெரிவியுங்கள்.

புலவர்:- புகழேந்திப் புலவரைப் பற்றித் தாங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களல்லவா?

சந்திரன்:- ஆம்; கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர் மதுரையின் ஆஸ்தானப் புலவராய் இருந்து அவரால் அவர் குமாரிக்குக் கௌரவச் சீதனமாய் சோழநாட்டுக்கு அனுப்பப் பெற்ற தாகவல்லவோ கேள்வி.

புலவர்:- ஆமாம். ஆனால் ..! சோழ மன்னன் குலோத்துங்கன் அவர் பெருமையறியாமல், தன் சமஸ்தானப் புலவராகிய ஒட்டக்கூத்தரின் சொல்லை நம்பிப் புகழேந்திப் புலவரைச் சிறையிட்டு வைத்திருந்து, அந்நாட்டு அரசியின் பெரு முயற்சியால் விடுதலை யடைந்திருக்

கிறார். அரசனும் புலவருக்கு அறியாமையால் இழைத்த கொடுமைக்கு வருந்தித் தற்போது மிக்க மரியாதை யோடு ஆதரித்து வருகிறார்.

சந்திரன்:- ஆம். புலவர்களே அவர் பெருமையை வியந்து கூறப் பலமுறை கேட்டிருக்கிறேன். அவரையா சோழன் சிறையிட்டு வருத்தினான்? என்ன அநியாயம்!...உம். உலகம் உள்ளவரை நீங்காத பழிச்சொல்லை யல்லவா தேடிக்கொண்டான் சோழன்?

புலவர்:- சந்தேகமென்ன! அவர் புலமைத் திறத்தைப் புலவர்களே புகழ்ந்து புகழேந்தியென்ற சிறப்புப் பெயரளிக்கப் பெற்ற அவரைச் சிறையிட்ட கொடு மையை உலகம் எப்படி மறக்கும்?

சந்திரன்:- மறக்காதுதான். உம்... அதிருக்கட்டும். புலவரே! அவரை இங்கு எப்படியாவது அழைத்துவர வேண்டுமே! அதற்குவழி?

புலவர்:- சோழனுக்கும் புலவருக்கும் தனித்தனியே தாங்களே இரண்டு ஓலையெழுதித் தக்க தூதுவர் மூலம் அனுப் பினால் ........!

சந்திரன்:- அது எப்படி முடியும்? தன் தவறை உணர்ந்து அதற்குப் பிராயச்சித்தமாக அளவற்ற அன்புடன் நடத்தும் சோழன் தற்போது அவரை அனுப்பச் சம்மதிப்பானா? அல்லது முன்பின் அறியாத புலவர்தான் நம் அழைப்புக்கு இணங்குவாரா?

புலவர்:- அரசே! அவருக்குத் தெரிந்தவர் தெரியாதவர் என்ற வித்தியாசமே கிடையாது. அன்புடன் அழைக்கும் எவர் வேண்டுகோளையும் புறக்கணிக்கமாட்டார். அந்தச் சந்தேகமே தங்களுக்கு வேண்டாம். வேண்டு

மானால் நானே சென்று அழைத்து வருகிறேன். தாங்கள் ஓலையெழுதிக் கொடுங்கள்.

சந்திரன்:- ஆம். அதுதான் சரி! தாங்களே போனால்தான் காரியம் எளிதில் முடியும். தங்களுக்குத் துணையாக சில வீரர்களையும் சிவிகையையும் அனுப்புகிறேன்.

புலவர்:- அப்படியே ஆகட்டும்.

சந்திரன்:- அமைச்சரே! நாளை நம் புலவர் சோழ நாட்டுப் பிரயாணத்துக்கு வேண்டிய வசதிகளெல்லாம் செய்து கொடுங்கள்.

அமைச்சர்:- உத்திரவு!

சந்திரன்:- சரி, புலவரே! நாளை காலையிற் புறப்படத் தயாராயிருங்கள். அதற்குள் நான் மீண்டும் சந்திக்கிறேன்.

புலவர்:- (வணங்கி) சித்தம்.

(அரசர் போகிறார்.)

(திரை.)

## காட்சி—21.

**இடம்**:- வசந்தமாளிகை. **காலம்**:- பகல்.

(குலோத்துங்கன், புகழேந்தி, கூத்தர், உதயணர், முரணை நகர்ப்புலவர், காவலர்.)

குலோத்து:- புலவரே! என்ன யோசனை? சிந்தனை பலமாயிருக்கிறதே!

புகழேந்தி:- ஒன்றுமில்லை. சில நாட்களாகவே என்மனத்தில் ஒரு எண்ணம் உண்டு. அதைச் சொன்னால்...!...

குலோத்து:- சொன்னால் நிறைவேற்றுவேனா என்ற சந்தேகமா? புலவரே! தங்கள் மனக்குறை எதுவானாலும் நிறைவேற்றி வைப்பேன். தங்கள் விருப்பமென்ன? சொல்லுங்கள்.

புகழேந்தி:- அரசே! இதென்ன இப்படிக் கேட்கிறீர்கள். ரசிகமணியாகிய தங்கள் ஆதரவும், கலைக்கடலாகிய கூத்தரின் தோழமையும், அன்பு கொண்டு நேசிக்கும் குணவதியின் கருணையும் இருக்கும் வரை எனக்கேது மனக்குறை?...உம்... வேறொன்றுமில்லை; புலவர்கள் இயற்கையிலேயே ஊர் சுற்றுவதில் விருப்பம் உள்ளவர்களென்பது தாங்கள் அறியாததா என்ன! அப்படி கொஞ்ச நாளைக்கு-வெளியூர்கள் போய் வரலாமா என்று சிந்தனை. அதற்குத்...த...ா...ன் தங்கள்........!

குலோத்து:- புலவரே! தங்களின் பெருமையறியாது சிறையிட்டு வருத்திய காலத்திலெல்லாம் பொறுமையோடு அனைத்தையும் பொறுத்திருந்த தாங்கள், என் தவறை நானே உணர்ந்து வருந்தி என்னுயிரினும்

மேலாக நேசிக்கும்போது என்னை நீங்கிப் பிரிந்துபோக நினைப்பது தர்மமா?

(ஒரு காவலன் வந்து வணங்குகிறான்.)

சேவகன்:- அரசே! முரணை நகரிலிருந்து ஒரு புலவரும் சில வீரர்களும் தங்களைக் காண வந்திருக்கிறார்கள்.

குலோத்து:- சரி; நீ போய் அவர்களை உடனே தக்க மரியாதையுடன் இங்கு அழைத்துவா.

(காவலன் வணங்கிச் செல்கிறான்.)

முரணை நகரிலிருந்து......! என்ன காரணமாயிருக்கும்?

உதயணர்:- உடன் வீரர்களும் வந்திருப்பதால், அரசரே அனுப்பியிருக்கலாம்.

கூத்தர்:- எல்லாம் சற்று நேரத்தில் தெரிந்துவிடுகிறது.

(புலவரும் வீரர்களும் வந்து வணங்குகின்றர்கள்.)

புலவரும் வீரரும்:- அரசே வணக்கம்.

குலோத்து:- வணக்கம். வாருங்கள்; வாருங்கள்; அதோ அப்படி அமருங்கள்—உம்.—தாங்கள் முரணை நகரிலிருந்து வந்த புலவரோ?

புலவர்:- ஆம். எம் அரசர் தங்களுக்கும் புகழேந்திப் புலவருக்கும் இரு ஓலைச்சுருள்கள் கொடுத்து அனுப்பியுள்ளார்.

(ஓலைச்சுருளைக் கொடுக்க, குலோத்துங்கன் வாங்குகிறான்.)

குலோத்து:- அப்படியா! மிக்க மகிழ்ச்சி......! உம். தங்கள் பெயர்...?

புலவர்:- என்னைக் குணசீலர் என்றழைப்பார்கள். இவ்வீரர்களை வழித்துணைக்காக உடன் அனுப்பி வைத்தார்.

குலோத்து :- உங்கள் அரசரும் அரசியும் மற்றும் குடிமக்கள் அனைவரும் நலம்தானே?

புலவர்:- ஆம்; எல்லோரும் நலமே.

குலோத்து:- (ஓலையை உதயணரிடம் கொடுத்து) உதயணரே, இதைப் படியுங்கள்.

(உதயணர் ஓலையைப் படிக்கிறார்.)

"எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய சோழ மண்டலாதிபதி திருவுயர் குலோத்துங்கச் சோழர் மன்னர் சமூகத்திற்கு முரணை நகர் மன்னன் வணக்கமாய் எழுதிக் கொள்ளும் அஞ்சல்.

இங்கு நானும் என் குடிமக்களும் நலம். தாங்களும் தங்கள் நாட்டு மக்கள் யாவரும் நலம் பல பெற்று வாழ இறைவனை வழுத்துகின்றேன்.

எல்லையற்றதும் இனிமை நிறைந்ததுமாகிய தமிழ்க் கலையில் தங்களுக்குற்ற ஆர்வத்தையும், எப்பொழுதும் நற்புலவர்கள் பலர் இணைபிரியாது அருகிருந்து இடைவிடாது கார்மேகம் போல் வருஷிக்கும் இலக்கிய இசை இன்பத்தில் திளைத்துத் தாங்கள் தமிழை வளர்க்கும் முறையையும் கண்டு அளவிலா மகிழ்ச்சியடைகிறேன். தமிழ் நாட்டின் ஒப்பற்ற கலைச் சிகரங்களாக விளங்கும் புகழேந்திப் புலவரையும், ஒட்டக்கூத்தரையும் நண்பர்களாக அடையப்பெற்ற தங்களைப் போன்ற பாக்கிய சாலிகள் உலகில் வேறு யாருமே இருக்க முடியாது.

அன்பரே! சிறிதளவேனும் எனக்குக் கலையார்வம் உண்டென்றால் அதற்குக் காரணம் தங்களைப் போன்றவர்களின் நட்பேயாகும். இவ்வகையில் நான் தங்களைக் கண்டு உண்மையில் பொறாமைகூடப் படுகிறேன். என் ஆசை; தங்கள் உயிர்த் தோழர்களும் ஒப்பற்ற புலவர்களுமாகிய கூத்தருடனும், புகழேந்தியுடனும் சில நாட்களாயினும் அளவளாவி அவர்களின் கவிதா இன்பத் தேனை வாரி வாரி உண்டு உவப்படைய வேண்டுமென்பதே ஆகும். ஆனால், ஏக காலத்தில் இரு பெரும்

புலவர்களையும் பிரியத் தாங்கள் ஒருப்படமாட்டீர் ஆதலால் தங்கள் அபிமானப் புலவராகிய புகழேந்திப் புலவரை மட்டும் சில காலம் என் அரசாங்க கௌரவ விருந்தினராய் அனுப்பி வைக்க வேண்டுகிறேன். தாங்கள் எனது இவ்வேண்டுகோளைப் புறக்கணிக்கமாட்டீர் களென நம்புகிறேன்.

தங்கள் அன்பு மறவாத,
**சந்திரன் சுவர்க்கி, முரணை நகர்.**

கூத்தர்:- விநோதமான வேண்டுகோள்.

குலோத்து:- இல்லை; வேண்டுகோள் வினையமானதுதான். ஆனால்.........!

கூத்தர்:- ஆனாலென்ன! சற்றுமுன் புகழேந்தி தாமாகவே வெளியூர் போக விரும்பினார். இப்போது அழைப்புடன்; போக ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

குலோத்து:- உண்மைதான். ஆனால், நிலைமை தர்ம சங்கடமானது.

குணசீலர்:- அரசே! புலவர் சில நாட்களாவது எங்கள் விருந்தினராய் இருந்தால் போதும் என்பதுதானே எங்கள் மன்னனின் வேண்டுகோள். மீண்டும் வேண்டும்போது தாங்கள் அழைத்துக் கொள்ளலாமே!

கூத்தர்:- ஆம்; புகழேந்தியும் சற்று முன் அதைத்தானே விரும்பினார். அவர் விருப்பப்படி சில நாள் போய் விட்டுத்தான் வரட்டுமே.

புகழேந்:- அரசே! என் வேண்டுகோள் முரணை நகர் செல்ல வேண்டுமென்பதல்ல. இவ்வழைப்பு எதிர் பாராதது! ஆகையால் தங்கள் சித்தப்படி.........!

குலோத்து:- மன்னனின் வேண்டுகோளை மறுப்பதும் முறையன்று. தங்களை வேற்றார் அனுப்பவும் மனமில்லை. உம்; (பெருமூச்சுவிட்டு) இருக்கட்டும். எதற்கும் குணவதியின் அபிப்பிராயத்தையும் கேட்டுக்கொண்டு நாளை புறப்படுவதுபற்றி யோசிப்போம்.

[திரை]

## காட்சி—22.

**இடம்:**—முரணை நகர் அரண்மனை. **காலம்:**—பகல்

(சந்திரன், அமைச்சர், புகழேந்தி, குணசீலர் முதலியோர் உரையாடிக் கொண்டிருக்கின்றனர்.)

சந்திரன்:- புலவர் பெருமானே! தங்களைச் சந்திக்கப் பெற்ற இந்நாளே என் வாழ்க்கையின் நன்னாள். என் வேண்டுகோளைப் பொருட்படுத்தித் தங்களை இங்கனுப்பி மகிழ்வித்த சோழ மன்னரின் பெருந்தகைக்கு என்றும் நன்றியுடையவனாயிருப்பேன்.

புகழேந்தி:- மன்ன! உங்கள் போன்ற மன்னர்களின் அன்பும் ஆதரவும் இன்றேல், புலவர்களுக்குப் புகலிடம்தான் வேறேது? உங்கள் அன்புக்கு எம்மால் செய்யத்தகும் கைம்மாறும் உண்டோ?

அமைச்சர்:- ஏன் இல்லை? மன்னர்களுக்கு ஏன் உலக மக்கள் அனைவருக்குமே வாழ்க்கை நெறிகளையும் உயர்ந்த நீதிகளையும் வகுத்துக் கொடுப்பவர் தங்களைப்போன்ற புலவர்கள் தானே! புலவர்கள் செய்யும் அழியாத் திருப்பணிகளுக்கு உலகோர் அனைவருமே கடமைப் பட்டவர்களல்லவா!

சந்திரன்:- உண்மைதான். உலகத்திற்கு ஒப்பற்ற சேவை செய்வோர்கள் புலவர்கள்தான். இதில் சந்தேகமென்ன?

புகழேந்தி:- மன்ன! அதெல்லா மிருக்கட்டும். என்னை இங்கு அழைத்த காரணம் என்னவென்பதை...!

சந்திரன்:- முதலில் தங்களைக் காணவேண்டுமென்ற ஆசை. இரண்டாவது தங்களைக் கொண்டு உயர்ந்த நூல்

ஒன்று இயற்றுவித்து உலகோர் பயனடையச் செய்ய வேண்டுமென்ற விருப்பம்.

புகழேந்தி:- உலகத்திற்குப் பயன்படத்தக்க உயர்ந்த நூல் நான் செய்வதா?

சந்திரன்:- ஆம். தாங்கள்தான் செய்யவேண்டும். தங்களால் தான் முடியும்.

புகழேந்தி:- இது அசாத்தியமான தில்லையென்றாலும், சோழ மன்னரிடம் சில நாட்களில் வருவதாகச் சொல்லிவந்த சொல்லுக்கு .....!

குணசீலர்:- அதனாலென்ன! மீண்டும் ஒரு ஆளை அனுப்பி நமது தீர்மானத்தைத் தெரிவித்து விட்டால் போகிறது.

புகழேந்தி:- நீங்கள் எதைப்பற்றிய நூல் வேண்டுமென்று விரும்புகிறீர்கள்?

சந்திரன்:- தங்களுக்குத் தெரியாதா என்ன!

புகழேந்தி:- அதற்கல்ல. காவியமா? அல்லது, பொதுவான நீதி நூலா......?

சந்திரன்:- நூலென்றால், அது எந்த ரூபத்தில் இயற்றினாலும் நீதி நிறைந்ததாகத்தான் இருக்கும். என்றாலும் கதாரூபத்தில் இருந்தால் பாமரரும் விரும்பிக் கேட்கவும் எளிதிற் புரிந்து கொள்ளவும் முடியும்.

புகழேந்தி:- ஆம். உண்மைதான். அப்படியே செய்வோம். இதைப்பற்றிய முடிவுகளை நாளை விவரமாகத் தெரிவிக்கின்றேன்.

சந்திரன்:- தங்கள் சித்தம் போல் ஆகட்டும். இன்று தங்களைக் காண வேண்டுமென்று அந்தப்புரத்தில் யாவரும் ஆவலோடு காத்திருப்பார்கள். வாருங்கள்; அங்கு போகலாம்.

புகழேந்தி:- அப்படியே ஆகட்டும்.

(போகிறார்கள்.)

## காட்சி—23.

**இடம்:**-குணவதியின் அந்தப்புரத்தோட்டம் **காலம்:**-மாலை.

(குணவதி ஒரு மேடையில் சயனித்தவண்ணம் பாடுகிறாள். குமுதம் வீணை மீட்டுகிறாள்.)

(பல்லவி)

**இசையினில் யான் கண்ட இன்ப மதற்கு இணை**
**இவ்வுலகினி லில்லையே செழுந்தமிழ்— (இ)**

(அனுபல்லவி)

**பசுங்கிளி இனமும் விலங்கினமும் தன்**
**வச மிழந்தே உள்ளம் பரவசம்கொள்ளும் தமிழ்—(இ)**

(சரணம்)

**எதுகையோடு நல்ல மோனையு மெழில்சேர்**
**இனியபொருள் செறியும் இனிய தமிழில் பண்ணைச்**
**சுதியுடன் இணைத்தே லயத்துணையோடு**
**சொல்வழுவில்லாமல் சொல்லும் செழுந்தமிழ்— (இ)**

(பின்புறம் வந்த குலோத்துங்கன் குணவதியின் பாடலை இணைந்து பாடுகிறான். குணவதி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறாள்.)

குணவதி:- ஓஹோ! என் பாட்டைக் கேலி செய்கிறீர்களா?

குலோத்:- என்ன! உன் பாட்டைக் கேலி செய்கிறேனா? "பசுங்கிளி இனமும் விலங்கினமும் தன் வசமிழந்தே உள்ளம் பரவசம் கொள்ளும்" உன் இசையினில் யான் கண்ட இன்பத்திற்கு இணை இவ்வுலகினில் இல்லையென்றல்லவா சொன்னேன்.

குணவதி:- உம். நீங்கள்கூடத்தான் நன்றாகப் பாடுகிறீர்கள்.

குலோத்:- உண்மையாகவா?

குணவதி:- உண்மையாகத்தான் சொல்லுகிறேன்.

குலோத்:- இல்லை; குமுதா! நீ.........

குமுதம்:- ஆமாம்; மகாராஜா இவ்வளவு அழகாகப் பாடுவாரென்று நான் நினைத்ததே இல்லை.

குணவதி:- பார்த்தீர்களா? உங்கள் பாட்டைக் கேட்டுக் குமுதம்கூட ஆச்சரியப்படுகிறாள்!

குலோத்:- என் பாட்டு அவ்வளவு நன்றாயிருக்குமென்று எனக்கு நம்பிக்கையில்லை. அப்படி இருந்தாலும் அதற்குக் காரணம் நீயாகத்தான் இருக்க வேண்டும்.

குணவதி:- இல்லை; குமுதா, இதெல்லாம் வீண் பேச்சு. அன்றைக்குக்கூட மகாராஜா முன்பே நன்றாகப் பாடுவாரென்று யாரோ சொல்லவில்லை?

குமுதம்:- யார் சொன்னது? எனக்குச் சரியாக நினைவில்லையே!

குணவதி:- (கண்ணைக் காட்டி) ஆமாமென்று சொல்லேண்டி.

குலோத்:- என்ன குணவதி, என்னைப் புரளி செய்கிறாய் போலிருக்கிறதே!

குணவதி:- இல்லை; இல்லை. நான் தங்களைப் புரளி செய்வேனோ? யாரோ அப்படிச் சொன்னதாக ஞாபகம். உம். அதிருக்கட்டும். முரணை நகர் சென்ற நமது புலவரைப் பற்றிய செய்தி ஏதேனும் வந்ததா? சில நாட்களில் வந்து விடுவதாகச் சென்றவர் ஏன் இன்னும் வரவில்லை?

குலோத்:- உம். அதைச் சொல்ல மறந்துவிட்டேனே! அங்கு சந்திரன் சுவர்க்கியின் விருப்பத்திற்கிணங்க நூல் ஒன்று இயற்றி ஆடம்பர வைபவங்களுடன் அரங்கேற்றப்பட்டதாம். அந்நூலைக்கேட்டு மகிழாதாரும் புகழாதாரும் இல்லையாம்.

குணவதி:- அப்படியா! நூலின் பெயர்?

குலோத்:- "நளவெண்பா" என்பது நூலின் பெயராம். இது வியாசரால் எழுதப்பெற்ற மகாபாரதத்திலுள்ள ஒரு கிளைக்கதையாகிய நளன் சரித்திரத்தைத் தழுவி எழுதப் பெற்றதாம். நூல் வெகு சிறப்பாக அமைந்திருப்பதாக எல்லோரும் சொல்லுகிறார்கள்.

குணவதி:- அவ்வளவு சிறப்பாய் அமைந்த அந்நூல் தமிழ் நாட்டுச் சரித்திரக் கதையாகவே இருந்தால் இன்னும் சிறப்பாய் இருக்குமல்லவா?

குலோத்:- நூல் எந்த நாட்டைப் பற்றியதாய் இருந்தால் என்ன? குணவதி! உயர்ந்த கருத்தும் நீதியும் அமைந்திருந்தால் சரிதானே! மேலும் அரசனின் விருப்பம் அப்படி இருந்திருக்கலாம்.

குணவதி:- எது எப்படியாயினும் தங்களைப்போல் புலவரைச் சிறையிட்டு வருத்தாமல் கிடைத்த சந்தர்ப்பத்தை நல்ல வகையில் பயன்படுத்திக் கொண்ட முரணை மன்னர் சாமர்த்தியசாலிதான்.

குலோத்:- இந்தச் சந்தர்ப்பத்தையே காரணமாய் வைத்துக் கொண்டு வழக்கப்படி இன்றும் உன் பேச்சு வன்மையால் என்னை மடக்கிவிட்டாயே! முரணை மன்னனைவிட நீயல்லவா சாமர்த்தியக்காரி!...உம்; இப்போதென்ன மோசம்? நாளைக்கே புலவரை வரவழைத்து இன்னும் கூத்தர் முதலிய புலவர்களையும் கொண்டு ஒரு

நூலென்ன, ஆயிரம் நூல் எழுதிக் குவித்து விடுவோம். போதுமா!

குணவதி:- சரிதான். நூல் எழுதுவதென்றால் மரத்திலிருந்த மாங்காய் பறிப்பதென்றா நினைத்தீர்கள்? அதுதான் முடியாது. இந்தப் புலவர்களிடத்திலும் கவிஞர்களிடத்திலும் அதிகாரத்தால் எந்தக்காரியத்தையும் சாதிக்கவே முடியாது.

குலோத்:. பின்பு என்னதான் செய்யச் சொல்லுகிறாய், குணவதி?

குணவதி:- ஒன்றுமே செய்யவேண்டாம். புலவர்களின் வாழ்க்கையில் நிம்மதியும் மனத்தில் மகிழ்ச்சியும் இருக்குமானால் எத்தனையோ நூல்களை அவர்கள் தாமாகவே இயற்றி விடுவார்கள்.

குலோத்:- ஆம். குணவதி! வயதிற் சிறியவளாயினும் கவிஞர்களின் மனப்போக்கை எளிதில் உணர்ந்துகொள்ளும் திறமை உன்னிடம் அமைந்திருக்கிறது.

குணவதி:- போதும். இந்த முகஸ்துதி.

குலோத்:- இல்லை. நான் சொல்வது உண்மை.

குணவதி:- உண்மையென்றால் காரணம் தாங்களாகத்தான் இருக்கவேண்டும்.

குலோத்:- பார்த்தாயா! முன்பு நன்றாகப் பாடுவதாகச் சொன்னபோது, நான் என்ன சொன்னேனோ அதையே திருப்பிச்சொல்லிவிட்டாயே!

குணவதி:- (சிரிக்கிறாள்.)

குலோத்:- (சிரிக்கிறான்.)

குணவதி:- அன்பரே! புலவரைச் சீக்கிரம் அழைத்து வர ஏற்பாடு செய்ய வேண்டும்.

குலோத்:- ஏன்?

குணவதி:- அவர் இயற்றிய நூலை நாம் கேட்டு மகிழ வேண்டாமா!

குலோத்:- ஆம். விரைவில் அழைத்து வர ஏற்பாடு செய்கிறேன். போதுமா?

குணவதி:- பேச்சில் பொழுது போனதுகூடத் தெரியவில்லை. நிலவுகூட எழுந்து விட்டதே!

குலோத்:- ஆமாம். அதுதான் குறைவாயிருந்தது. இப்போது அந்தக் குறையும் இல்லை!

குணவதி:- தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

குலோத்து:- உண்மையைத்தான் சொல்லுகிறேன். அதோ பார்! எழில் நிறைந்த புது மலர்கள் நிறைந்த சோலை, மலர்களின் நறுமணத்தை வாரிக்கொண்டு மிதந்து வரும் தென்றல், மதுவின் இன்பத்தில் மகிழ்ந்த வண்டினங்களின் இனிய இசை, மயில்களின் ஆடல்; இவைகளுக்கெல்லாம் இடையே இருக்கும் நமக்குச் சந்திரன் இல்லாதிருந்தது குறையல்லவா?

(குணவதி நாணித் தலைகவிழ குலோத்துங்கன் பாடுகிறான்)

(திரை)

## காட்சி—24.

இடம்:-முரணை நகர் அரண்மனை. காலம்:-பகல்.

(சந்திரன், புகழேந்தி, அமைச்சர் முதலியோர்.)

புகழேந்தி:- மன்னர் மன்னா வீண் கவலை வேண்டாம். உங்களைப்போலவே சோழமன்னரும் என்மேல் அளவற்ற அன்புள்ளவர். ஆகையால் அவர் அழைப்பைக் கண்ட பின்பும் நான் அவரைக் காணச் செல்லாதிருத்தல் முறையன்று.

சந்திரன்:- கனவிலும் நனவிலும் கற்பனையிலும் கண்ட வற்றை யெல்லாம் காவியத்தில் புகுத்தி என்னையும் என் நாட்டு மக்களையும் இன்பவாரிதியி லாழ்த்திய தங்களை எப்படிப் பிரிந்திருக்க முடியும்?

புகழேந்தி:- பிரிந்தால் மீண்டும் சந்திக்கமாட்டோமா? நான் பிரிந்தாலும் உமது தூய அன்பால் பிணிக்கப்பெற்ற என் உள்ளம் உம்மை நீங்கிப்பிரியாது. என் உள்ளத்தில் என் அன்புக்கு முதல் இடம் பெற்றவர் தாங்கள்தானே!

சந்திரன்:- புலவர் மணியே! தங்கள் இலக்கியச் சுவையை அருந்தி அருந்தி நாங்களடைந்த இன்பத்தை எங்களால் மறக்க முடியாது. உறந்தை சென்று மீண்டும் அடிக்கடி வந்து எங்களை மகிழ்விக்க வேண்டும்.

குணசீலர்:- விண்மீன்களுக்கு இடையே தோன்றிய வெண் ணிலாவைப் போல் வந்த தாங்கள் போன பின் இப் புலவர் சபையே சந்திரனில்லாத வானம் போல் பொலி விழந்துவிடும். ஆகையால் நானும் தங்களுடன் சோழ நாடு வந்து சில நாட்கள் தங்கியிருக்க விரும்புகிறேன்.

புகழேந்தி:- குணசீலரே! அரசர் அன்பின் மிகுதியால் எம்மைப் பிரிய வருந்தும் இச்சமயத்தில் தாங்களும் என்னுடன் வந்துவிட்டால் அரசரைத் தேற்றுவோர் யார்?

அமைச்சர்:- அரசே! பொழுதாகிறது. சோழமன்னரின் விருப்பப்படி இன்றே புலவரை அனுப்பிவிட்டுப் பிறகு வேண்டுமானால் சில நாட்களில் புலவரை மீண்டும் அழைத்து வரலாம். ஆகையால்.........

புகழேந்தி:- ஆம்; அமைச்சர் செல்வதுதான் சரி, சீக்கிரம் நானாகவே இங்கு வருவேன். இப்போது பிரயாணத் திற்கு......

சந்திரன்:- ஆம்; வேறு வழியில்லை. அமைச்சரே, சீக்கிரம் புலவரின் பிரயாணத்திற்கு ஏற்பாடுகள் ஆகட்டும்.

அமைச்சர்:- எல்லா ஏற்பாடுகளும் ஆகிவிட்டது. வீரர்கள் பாதுகாப்புடன் நான்கு சிவிகைகளும் தயாராகி இருக் கின்றன.

சந்திரன்:- (அமைச்சரிடம் ஏதோ ரகசியமாகச் சொல்லு கிறார்.)

அமைச்சர்:-உத்திரவு.

புகழேந்தி:- அமைச்சரை எங்கே அனுப்பினீர்கள்?

சந்திரன்:- எங்குமில்லை. இதோ வந்துவிடுவார்.

(ஆட்கள் பலர் தட்டுகளில் திரவியங்களும் பட்டாடைகளும் கொண்டு வந்து வைக்கிறார்கள்.)

புகழேந்தி:- அரசே! இவையெல்லாம் எதற்கு?

சந்திரன்:- தங்கள் பெரும் புலமைக்கு அன்பளிப்பாக என் னால் இயன்றதைச் செய்கிறேன். அன்புடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

புகழேந்தி:- மன்ன! நான் தனியன். எனக்குப் பசித்த வேளையில் ஒரு பிடி உணவே தேவை. அது எனக்கு எங்கும் எப்போதும் கிடைக்கும். பொன்னும் பொருளும் ஆடையாபரணங்களும் எனக்கு எதற்கு?

சந்திரன்:- புலவரே! என் கடமையை நான் செய்கிறேன். இதை மறுக்காமல் ஏற்றால் என் மனம் மகிழ்ச்சியடையும்.

புகழேந்தி - அரசே! உமது வேண்டுகோளை மறுக்கவேண்டுமென்பது என் நோக்கமல்ல. இந்தப் பொருள்களை என் இஷ்டப்படி உபயோகித்துக் கொள்ளலாமல்லவா?

சந்திரன்:- தாராளமாய் உபயோகிக்கலாம்.

புகழேந்தி:- அமைச்சரே! இப்பொருளனைத்தையும் தங்கள் வசம் ஒப்புவிக்கிறேன். இவைகளை ஏழைகளுக்கும் புலவர்களுக்கும் வழங்கிவிட வேண்டும்.

அமைச்சர்:- (மௌனம்.)

புகழேந்தி;- ஏன்? என் பொருளை என் இஷ்டப்படி வழங்குவதில்கூட அதிருப்தியா?

சந்திரன்:- புலவர் பெரும! தாங்கள் மனிதசமூகத்திற்கே அப்பாற்பட்ட நடமாடும் தெய்வம். தன்னலத் தியாகி, உலக மக்களின் உயர்வுக்காகவே உயிர் வாழும் உத்தமர். தங்களைப் போன்ற மகாத்மாக்கள் உலகில் பன்னூற்றாண்டுகளுக்கு ஒருவரே தோன்றுகிறார்கள். தங்களால் என் உள்ளமும் பரிசுத்தமடைந்தது. இனி இந்நாடும் நாட்டிலுள்ள பொருள்களனைத்தும் நானும் உங்களுக்கே சொந்தம். எல்லாம் தங்கள் சித்தப்படி ஏழைகளுக்கும் புலவர்களுக்குமே பயன்படும்.

புகழேந்தி:- அரசே! அதுவல்ல என் விருப்பம். இந்நாட்டுக்கு நான் மீண்டும் வரும்போது இப்போது உள்ளதைப்

போன்ற தங்களின் அருள் ஆட்சி இயங்க வேண்டும் இதுதான் என் விருப்பம். சுவரின்றி சித்திரம் வரைய இயலாது. அருளாட்சியின்றி அறப்பணி இயங்காது.

சந்திரன்:- (வணங்கி) தங்கள் வாக்கே எனக்குத் தேவவாக்கு.

புகழேந்தி:- கடவுள் நம் அனைவரையும் காப்பார். புறப்படலாமா?

சந்திரன்:- புறப்படலாம்.

(எல்லோரும் செல்லுகிறார்கள்.)

**(திரை)**

## காட்சி—25.

**இடம்**:—திருநெய்த்தானம் சிவாலயம். **காலம்**:—மாலை

(பக்தர்கள் பலரும் கூடி இருக்கின்றனர்.)

கூட்டத்தில் ஒருவர்:- ஏனையா! இன்று என்ன பகவானுக்கு என்று மில்லாத ஆடம்பர அலங்காரம்?

மற்றவர்:- அடடே! உமக்கு விஷயம் தெரியாதோ! முரணை நகர் சென்றிருந்த நமது புகழேந்திப் புலவர் நேற்றுதான் இங்கு வந்தார். அந்த மகிழ்ச்சியின் காரணமாக மன்னர் எல்லா ஆலயங்களுக்கும் இன்று விசேஷ ஆராதனைகள் நடத்த உத்திர விட்டிருக்கிறார். அதோ மகாராஜா கூட வருகிறார் போலிருக்கிறதே!

(சோழன், புலவர்கள், மற்றும் பரிவாரங்கள் யாவரும் வருகிறார்கள், தீபாராதனை முடிகிறது.)

குலோத்து:- புலவர்களே! சிவபெருமானின் அலங்காரத் திருக்கோலத்தைப் பார்த்தீர்களா!

கூத்தர்:-ஆம்; ஐயன் இன்று ஆனந்த ரூபியாய் விளங்குகிறார்.

புகழேந்தி:- இன்றென்ன! என்றுமே அவர் ஆனந்த ரூபிதானே.

குலோத்து:- ஆம். ஆனால் இந்த உண்மையைத் தாங்கள் உணர்ந்திருப்பதைப் போல், மற்றவர் எல்லோரும் உணர்ந்து கொள்ள முடிவதில்லை. உண்மையில் நான் இன்று காணும் எழிலை என்றுமே கண்டதில்லை. இப்புண்ணிய மூர்த்தியின் மீது இன்று நீங்கள் இருவரும் பாடவேண்டும்.

கூத்தர்:- என்ன கருத்தில் பாடவேண்டும்?

குலோத்து:- ''நெய்த்தானைச் சேவித்தே'' என்பதை ஈற்றடியாக வைத்துக் கொண்டு பாடுங்களேன்.

கூத்தர்:- பாடுகிறேன்.

(விருத்தப் பாட்டு)

**விக்காவுக்கா வித்தாவிப்போய்**
**விட்டார்நட்டார் சுட்டூர் புக்கார்**
**இக்காயத்தா சைபாடுற்றே**
**இற்றேடிப்போய் வைப்பீர்நிற்பீர்**
**அக்காடப்பேய் தொக்காடாச்சூ**
**ழப்பாடத்தீ வைப்பாடப்பூண்**
**நெக்காடக்கா னத்தாடப்போம்**
**நெய்த்தானத்தானைச் சேவித்தே.**

புகழேந்தி:- (விருத்தப் பாட்டு)

**தற்கோலிப்பூ சற்பாசத்தே**
**தட்டாமற்சாகைக்கே நிற்பீர்**
**முற்கோலிக்கோலிப் பூசித்தே**
**முட்டாமற் சேவித்தே நிற்பீர்**
**வற்றாநெட்டோ டைப்பாரைச்சேல்**
**மைப்பூகத்தே றித்தாவிப்போய்**
**நெற்றாளுற்றாலைப் பாகிற்சேர்**
**நெய்த்தானத்தானைச் சேவித்தே.**

குலோத்து:- மிக்க மகிழ்ச்சி! மிக்க மகிழ்ச்சி!! புலவர்களே! கற்பனையிலும் காணமுடியாத இன்பங்களை யெல்லாம் உங்கள் கவிதைகளில் காணுகின்றேன்.

கூத்தர்:- கவிதையில் இன்பம் காண்பது எல்லோருக்கும் சாத்தியமில்லை. தங்களைப் போல் ரசிகர்களால் தான் அது முடியும்.

புகழேந்தி:- மிகச் சரியாகச் சொன்னீர்கள்!

குலோத்து:- நேரம் போனதே தெரியவில்லை. இப்படி நடந்துகொண்டே பேசலாம்; வாருங்கள்.

(போகிறார்கள்.)

**(திரை)**

## காட்சி—26

**இடம்**:-திருக்குறுங்குடி திருமால் ஆலயம். **காலம்**:-பகல்

(திருமாலுக்குத் தீப ஆராதனை நடைபெறுகிறது. சோழன் புலவர்கள், பக்தர்கள் யாவரும் வணங்குகின்றனர்.)

குலோத்து:- நம்மை ஒன்றுபடுத்தி மகிழ்வித்த திருமாலின் மீதும் நீங்கள் இருவரும் ஒவ்வொரு கலித்துறை கூறவேண்டும்.

கூத்தர்:- அப்படியே ஆகட்டும்.

(விருத்தப் பா)

**திக்குளெட்டுக்கயந் துக்கமுற்றுத்**
**திடுக்கிட்டலற**
**மைக்கடற்குட் சரந்தைக்க விட்டோர்க்**
**கிடமாமதுர**
**விக்குமுற்றிக்கணுச் சற்றுவிட்டுத்தெரித்**
**திட்டமுத்தைக்**
**கொக்குமொக்கிக் கக்கி விக்குமச்சோலைக்**
**குறுங்குடியே.**

புகழேந்தி:-

(விருத்தப் பா)

**எட்டெழுத்தைக் கருத்திற்குறித்திட்டு**
**நித்தம்பரவும்**
**சிட்டர்கட்குத்திருப் பொற்பாதத்தைச்**
**சிறக்கத்தருமவ்**
**வட்டநெட்டைப்பணி மெத்தையற்கிடம்**
**வாரிசப்பொ**
**குட்டினத்துக்குலம் தத்திமுத்தீனுங்**
**குறுங்குடியே.**

கூட்டத்தினர்:- ஆஹாஹாஹா! அற்புதம், அற்புதம்!

குலோத்து:- ஆம்; அற்புதம்தான். நேற்று நெய்த்தானத்தின் பாடல்களைப் போலவே இவையும் ஏற்றத் தாழ்வின்றி அமைந்திருக்கின்றன.

புகழேந்தி:- அரசே! இவையாவும் தங்கள் அன்பின் தூண்டுதலால் எங்கள் உள்ளத்திலிருந்து ஒலிக்கும் எதிரொலிகள் தானே!

குலோத்து:- ஆம்; ஆனால் இத்தகைய இன்ப எதிரொலி தங்களைப் போன்ற புலவர்களின் உள்ளத்தில் மாத்திரமே எழுகின்றன. சரி; வாருங்கள். கலா மண்டபத்திற்குப் போவோம்.

(போகிறார்கள்.)

(திரை.)

## காட்சி—27

**இடம்**:-உறையூர் வீதி. **காலம்**:-மாலை

(குலோத்துங்கன், புகழேந்தி, கூத்தர், மூவரும் வருகிறார்கள். அங்கோர் வீட்டின் முகப்பில் அமர்ந்திருந்த ஔவையார் அரசனைக் கண்டு ஒரு காலையும், புகழேந்தியைக் கண்டு மற்றொரு காலையும் மடக்குகிறார் ஆனால், கூத்தரைக் கண்டதும் இரு கால்களையும் நீட்டிக் கொள்கிறார். இதைக்கண்டு கூத்தர் அவமானமும் ஆத்திரமும் கொள்கிறார்.

கூத்தர்:- அரசே! பார்த்தீர்களா இக்கிழவியின் செருக்கை!

குலோத்து:- யார் இந்த மூதாட்டி?

புகழேந்தி:- யாரா? இவர் கல்விக்கடல் ஔவை மூதாட்டியாரல்லவா!—அம்மையே, வணக்கம்.

ஔவை:- அன்பரே! வணக்கம். அரசே! வணக்கம்.

கூத்தர்:- அம்மையே! தாங்கள் இவ்வாறு என்னை அவமதித்ததற்குத் தக்ககாரணம் கூறியாகவேண்டும்.

ஔவை:- காரணம் சொல்ல வேண்டுமோ? சொல்லுகிறேன். கிரீடாதிபதியாகிய சோழனுக்கும் புலவர் பதியாகிய புகழேந்திக்கும் மரியாதை செய்யவேண்டியது கடமையென நான் நினைத்து அப்படியே செய்தேன். ஆனால் அகந்தையும் அழுக்காறும் கொண்ட மனம் கண்டதும் மடக்கிய இரு கால்களையும் நீட்டினேன். இதில் தவறென்ன?

குலோத்துங்:- அம்மையே! எனது அரசவைப் புலவரை எனக்கு முன்பாகவே, தாங்கள் இப்படி அவமதிப்பது முறையாகுமா?

ஔவை:- நான் முறை தவறி விட்டேனென்பது தங்கள் முடிவா? இல்லவே இல்லை. புகழேந்தியின் புலமைக்கு முன் கூத்தரின் புலமை எவ்வகையிலும் ஈடாக முடியாது.

கூத்தர்:- என் கேள்விக்குப் பதில் இதுவல்ல. இது வீண்பேச்சு.

ஔவை:- கூத்தரே! வீண் பேச்சுப் பேசுபவள் நானல்ல. அது இச்சகம் பேசிப் பிழைக்கும் உம்மைப் போன்ற புல்லியர் களின் செயல். கோபம் வந்து பயனில்லை. நீர் சிறந்த புலவரென்று சொல்லுகிறீரே! எங்கே? மதியென்னும் பொருள் மும்முறை தோன்ற சோழமன்னரையும், சோழ நாட்டையும் புகழ்ந்து ஒரு செய்யுள் சொல்லுங் கள்; பார்ப்போம்.

கூத்தர்:- (கேலிச் சிரிப்புடன்) உம்...சொல்லிவிட்டால்?

ஔவை:- அதைப்பற்றிப் பிறகு யோசிப்போம்.

கூத்தர்:- உம்...! சொல்லுகிறேன்.

**(விருத்தப்பா)**

**"வெள்ளத் தடங்காச் சினவாளை**
**வேலிக்கமுகின் மீதேறித்**
**துள்ளி முகிலைக் கிழித்துமழைத்**
**துளியோடிறங்குஞ் சோணாடா**
**கள்ளக் குறும்பர் குலமறுத்த**
**கண்டா வண்டர் கோபாலா**
**பிள்ளை மதிகொள் சிறுபேதை**
**பெரிய மதியு மிழந்தாளே."**

ஔவை:- (கைகொட்டி நகைத்து) ஒட்டா, ஒரு மதி கெட்டாய். நன்று; நன்று. உன் கவி பாடும் திறமை!

வெட்கம். வெட்கம். (புகழேந்தியைப் பார்த்து) புலவரே நான் வேண்டியபடி மதிமூன்று வர தாங்கள் ஒரு செய்யுள் சொல்லுங்கள்.

புகழேந்தி:- (வணங்கி) பாடுகிறேன்; அம்மையே.

(விருத்தப்பா)

**"பங்கப் பழனத் துழுமுழவர்**
**பலவின் கனியைப் பறித்ததென்று**
**சங்கிட் டெறியக் குரங்கிளநீர்**
**தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா**
**கொங்கர்க் கமரா பதியளித்த**
**கோவே இராசகுலத்திலகா**
**வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கு**
**மெலிந்த பிறைக்கும் விழிவேலே"**

ஔவை:- ஆஹா! பாட்டென்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? புலவரே! மிக்க மகிழ்ச்சி! கூத்தரே, புகழேந்தியின் பெருமைறியாது அவருக்கு எத்தனைதீங்கிழைத்தீர். அகங்காரப் பேயையும், பொறாமைத் தீயையும் வளர்த்து, தன்னைத்தானே அவைகளுக்குப் பலியிட்டுக் கொள்வது மதியீனமல்லவா? வேண்டாம். இனியேனும் உம்போன்ற புலவர்களை மதித்து அவர்களிடம் அசூயையும் பொறாமையும் கொள்ளா திருப்பதே புலவர்களுக் கழகு. வேந்தே, இந்த நிகழ்ச்சி தங்களுக்கு வருத்தத்தையே உண்டாக்கி இருக்கும். என்றாலும் கூத்தரின் நன்மையைக் கோரியும் புகழேந்தியின் திறமையைத் தாங்களும் உணர வேண்டும் என்று நினைத்துமே இப்படி செய்தேன். மன்னிக்கவேண்டும்.

குலோத்து:- அம்மையே! எனக்கொன்றும் வருத்தமில்லை. மக்கள் அனைவருக்கும் தாங்கள் தாய் போன்றவர்கள். குழந்தைகள் குற்றத்தைத் திருத்துவது

இயற்கைதானே! அதிருக்கட்டும். தாங்கள் இங்கு எப்போது வந்தீர்கள்? ஏன் இச்சிறு குடிசையில் அமர்ந்திருக்கிறீர்கள்? வாருங்கள்; அரண்மனைக்குப்போவோம்.

ஔவை:- வேந்தே! அரண்மனையும் சிறு குடிசையும் எனக்கு ஒன்றுதான். செருக்குற்ற செல்வர்களுடன் பழகுவதை விட வறுமை மிக்க ஏழைகளுடன் பழகுவதே இன்பமாயிருக்கிறது. அன்பு, தயை, கருணை, சாந்தம் முதலிய அரிய குணங்களை அவர்களிடத்தில் தான் பரிபூரணமாய்க் காண முடிகிறது.

குலோத்து:- நாளை நமது கலாமண்டபத்தில் புகழேந்திப் புலவர் இயற்றிய நளன் சரித்திரத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்திருக்கிறேன். தாங்கள் அவசியம் வரவேண்டும்.

புகழேந்தி:- ஆம்; அம்மையே! அவையில் உங்களைப் போன்ற பெரியோர்கள் இருந்தால் தான், எனக்கும் மகிழ்ச்சியாய் இருக்கும். மேலும், ஏதேனும், குற்றம் குறைகள் இருந்தாலும் எடுத்துச் சொல்லித் திருத்துவீர்கள்.

ஔவை:- புலவரே! தாங்கள் எழுதிய காவியத்தைக் கேட்காமல் இருப்பேனா! அவசியம் வருகிறேன். ஆனால் தங்கள் பாட்டில் குற்றமா? ஒருக்காலும் இருக்காது.

குலோத்து:- சரி; வாருங்கள். அரண்மனைக்குப் போவோம்.

(எல்லோரும் போகிறார்கள்.)

**(திரை.)**

## காட்சி—28

**இடம்**:-சோழன் கலாமண்டபம். **காலம்**:-பகல்

(சோழ நாட்டில் கலாமண்டபம் என்றுமில்லாத எழிலுடன் அலங்கரிக்கப் பெற்றிருக்கிறது. பொது மக்களும் புலவர்களும் ஏகமாய்க் கூடியிருக்கின்றனர். ஒருபுறம் அரசர், கூத்தர், கம்பர், ஔவை முதலியோர் அமர்ந்திருக்கின்றனர்.)

புகழேந்தி:- (கைகூப்பி வணங்கி) வாழ்க, செந்தமிழ்!

எல்லோரும்:- (எழுந்து கைகூப்பி) வாழ்க!

புகழேந்தி:- வாழ்க, தமிழ் நாடு!

எல்லோ:- வாழ்க!

புகழேந்தி:- வாழ்க, சோழ மன்னர்!

எல்லோ:- வாழ்க!
(புகழேந்தி அமருகிறார். யாவரும் அமருகின்றனர்.)

புகழேந்தி:- பெருமை மிக்க புலவர்களே! மாட்சிமை மிக்க மன்னர்பிரானின் வேண்டுகோளுக்கிணங்கி என்னால் இயற்றப்பெற்ற நளவெண்பா வெனும் நளன் சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கி நளனின் நாடு நகரச் சிறப்பு முதல் நளன் தமயந்தி இருவரும் அன்னத்தின் தூதினால், ஒருவர் மீதொருவர் காதல் கொள்வதும் தமயந்தியின் சுயம்வரம் நிச்சயித்தலும், தமயந்தியை மணம்புரிய எண்ணிய இந்திரன், அக்கினி, யமன், வருணன் ஆகியோருக்காக நளன் தமயந்தியின்பால் தூது செல்வதும், தமயந்தி நளனையே மணக்க உறுதி

கொள்வதும், நளன் இந்திரன் முதலானோரிடம் வரம் பெற்றேகலும் நேற்றுவரை கூறக்கேட்டீர்கள். இனி தமயந்தி நளனைக் கண்டது முதல் விரக வேதனைப் படுவதையும், தமயந்தியின் சுயம்வரத்தையும் பற்றிச் சொல்வோம்.

தூதுவந்து சென்ற நளனைத் தொடர்ந்தே தமயந்தி யின் உள்ளமும் சென்றுவிட்டது. அதைமீட்க வகையறி யாமல் தவிக்கிறாள் தமயந்தி. என்றைக்கும் போல் தான் அன்றைக்கும் சூரியாஸ்தமனத்திற்குப் பின் உலகை இருள் கவ்விற்று. ஆனால், அன்று அவளுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒளிவடிவில் தோன்றித் தன் உள்ளத்தைப் பிரகாசிக்கச் செய்த நளன், தன்னை விட்டு நீங்கி விட்டானல்லவா! அதனால் தான், தன் உள்ளமும் உலகமும் இருண்டுவிட்ட தாகநினைக்கிறாள். நளன் செல்லுகிறான்; அன்று தான் மாலை மறைவை யும் அவள் காண்கின்றாள். எப்படி!

(வெண்பா)

**மல்லிகையே வெண்சங்கா, வண்டூத வான்கரும்பு**
**வில்லிகணை தெரித்து மெய்காப்ப—முல்லையெனும்**
**மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே**
**புன்மாலை யந்திப் பொழுது.**

கூத்தர்:- நிறுத்தும் புலவரே! நிறுத்தும். பாட்டின் முதல் அடி என்ன?

புகழேந்தி:- மல்லிகையே வெண்சங்காய் வண்டூத—

கூத்தர்:- புலவரே! போதும். மலரின் மேல் புறத்தில் அமர்ந்து மதுவருந்தி ரீங்காரம் செய்யும் வண்டினங் களுக்கு, சங்கின் கீழ்ப் புறத்தை வாயில் வைத்து ஊது வோரை உவமையாகக் கூறியது குற்றமல்லவா? இப்படித் தப்புப் பாட்டுப் பாடும் உம்மையும் சிறந்த புலவரென்று தமிழ் மூதாட்டி ஔவையார் பாராட்டியது ஆச்சரியந் தான்!

புகழேந்தி:- கூத்தரே! புலவர்களும் அறிஞர்களும் நிறைந் துள்ள இத்தகைய அவையில் அகம்பாவமும் ஆத்திரமும் கொண்டு, தமிழ் மூதாட்டி போன்ற பெரியோர்களை இழித்துப் பேசுவது தங்களுக்கே இழிவாகும். என் பாட்டில் குற்ற மிருப்பின் என்னைத்தான் கேட்க வேண்டும்.

கூத்தர்:- அந்த நியாயங்கள் எனக்குத் தெரியும். என் கேள்விக்குப் பதில் செல்லும். இல்லையேல் எல்லோருக் கும் முன் உமது குற்றத்தை ஒப்புக் கொள்ளும்.

புகழேந்தி:- என் பாட்டு களனைத்தும் குற்றமாகத் தோற்று வதற்கும் சமய சந்தர்ப்பம் தெரியாமல் பெரியோர்களை அவமதிப்பதற்கும் எப்படித் தங்களுக்குக் கர்வமும் அகம்பாவமுமாகிய மயக்கம் காரணமா யிருக்கிறதோ, அப்படியே மலர்களிலுள்ள மதுவை அளவு கடந்து அருந்தி மயங்கித்திரியும் வண்டினங்களுக்கும் வாயென்றும் மற்ற தென்றும் தெரியாமற் போவது இயற்கை தானே!

எல்லோரும்:- ஆஹா! அருமையான விளக்கம்.

(எல்லோரும் கை தட்டி ஆரவாரம் செய்கின்றனர்.)
அற்புதமான கற்பனை!

புகழேந்தி:- ஐயன்மீர்! அவையின்கண் ஐயம் யாருக்கேனும் தோன்றுமாயின், கேட்க வேண்டியதும் நூலாசிரியன் ஐயத்தை அகற்ற வேண்டியதும் கடமை. ஆனால், கூத்தரின் எண்ணம் அதுவல்ல. எப்படியாவது என் நூலில் குற்றம் கற்பித்து என்னை இழிவுபடுத்த வேண்டு மென்ற அவாவினாலேயே ஆரம்பத்திலிருந்து இத்தகைய போலி வாதங்கள் செய்கிறார். எனினும் அதற்கும் தக்க மறுப்பளித்து என் நூல் மாசற்ற தென்று மெய்ப்பிக்க

*வேண்டியிருப்பதால், இவ்வசந்தர்ப்ப வாதங்களுக்காக வருந்தாமலும் இந்தக் காரணத்தினாலேயே கூத்தர் தாழ்ந்த வரென்று நினைத்து ஆரவாரம் செய்யாமலும் இருக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு நூலைத் தொடங்குகிறேன்.*

*(கைகூப்பி வணங்குகிறார்.)*

**புற்கென்றா ரந்தி புனைமலர்க்க ணீரரும்ப**
**நிற்கின்ற தந்தோ நிலங்காப்பா—முற்கொண்டு**
**அடைகின்ற வேந்தர்க்கும் ஆண்டஞ்சி னோர்க்கும்**
**இடைநின்ற காலம் போலின்று.**

**பைந்தொடி யா ளாவி பருகுவா னிற்கின்ற**
**அந்தி முறுவலித்த தாமென்ன—வந்ததால்**
**மையார்வேற் கண்ணாள் வனமுலைமே லாரழலைப்**
**பெய்வா னமைந்த பிறை.**

**கூட்டுமை போற்றிரிந்த கூரிருளைக் கூன்கோட்டால்**
**கோட்டுமண் கொண்ட குளிர்த்திங்கள்—ஈட்டுமணிப்**
**பூணிலா மென்முலைமேற் போதச் சொரிந்ததே**
**நீணிலா வென்னும் நெருப்பு,**

**அன்னங்காள் நீங்களும் வாதித்தன் றானும்போய்**
**மன்னும் படியகலா வல்லிரவில்—மின்னும்**
**மழைத்தாரை வல்லிருட்கும் வாடைக்கும் நாங்கள்**
**பிழைத்தால் வந்தே னென்னும் பேர்.**

**செப்பிளங் கொங்கைமீர் திங்கட் சுடர்பட்டுக்**
**கொப்புளங் கொண்ட குளிர்வானை—இப்பொழுதும்**
**மீன்பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலோ!**
**தேன்பொதிந்த வாயாற் றெரித்து.**

*கூத்தர்:- புலவரே! இங்கொரு வினா?*

புகழேந்தி:- என்ன! சந்தேகமிருந்தால் கேளுங்கள்.

கூத்தர்:- வானத்தில் நிறைந்திருக்கும் நட்சத்திரங்களை கொப்புளங் கொண்ட குளிர் வானென்று சொல்வது அழகாகத்தான் இருக்கின்றது. ஆனால்...! அக்கொப்புளங் களிலிருந்து சீழோ அல்லது சிலைநீரோ வடிய வேண்டாமா? அதற்கு...!

புகழேந்தி:- இரவில் பனித் தாரைகள் பெய்யவில்லையா? அதையே நீராக வைத்துக்கொண்டால் போகிறது.

(எல்லோரும் கை கொட்டுகிறார்கள். நகைக்கிறார்கள்.)

எல்லோரும்:- சரி, சரி! புலவர் சொல்வது ரொம்ப சரி!

குலோத்து:- வீண் ஆரவாரம் ஏன்? கலைக்கூடத்திலா கேளிக்கை?

கம்பர்:- வீண் வாதங்களையும் அர்த்தமற்ற கேள்விகளையும் கேட்டால் கூட்டத்தில் கொந்தளிப்பு ஏற்படுவது இயற்கை தானே!

கூத்தர்:- ஐயா, கவிச்சக்கரவர்த்தி கம்பரே! இங்கு யாரும் வீண்வாதம் செய்யவில்லை. சந்தேகப் பட்டு யார் எதைக் கேட்டாலும் நூலாசிரியன் தக்க சான்று சொல்லித்தான் ஆகவேண்டும்.

ஔவை:- கேள்விகள் எழுவது இயற்கைதான். ஆனால், அவை அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமாய் இருக்கவேண்டாமா?

குலோத்து:- அம்மையே! அதைப்பற்றிப் பிறகு பேசுவோம். இன்று எனக்கு ஏதோ மனம் நிம்மதியற்றிருக்கிறது. ஆகையால் நூலின் பிற்பகுதியை நாளை தொடங் கலாமென நினைக்கிறேன்.

புகழேந்தி:- ஆம்; என் விருப்பமும் அப்படித்தான்.

ஒளவை:- அப்படியானால் இன்று இத்துடன் நிறுத்தி விடலாம்.

புகழேந்தி: (எழுந்து வணங்கி) அன்பர்களே! நூலின் பிற்பகுதி நாளை தொடங்கப் பெறும். எல்லோருக்கும் வணக்கம். வாழ்க செந்தமிழ்!

எல்லோ:- வாழ்க!

புகழேந்தி:- வாழ்க தமிழ் மன்னர்!

எல்லோ:- வாழ்க!

புகழேந்தி;- வாழ்க தமிழ் நாடு!

எல்லோ:- வாழ்க!

(திரை).

## காட்சி—29

**இடம்:-** *வீதி.* **காலம்:-** *மாலை*

*(புகழேந்தி மிக்க துயரத்துடன் அடிமேலடி வைத்து அயர்ச்சியோடு மெள்ள நடந்து வருகிறார்.)*

புகழேந்தி:- *ஈஸ்வரா! இது என்ன சோதனை? கூத்த ரென்னும் இக் கூற்றுவனின் தூற்றுதலையும் அவமதிப் பையும் நான் எத்தனை நாட்களுக்குத் தான் சகித்துக் கொண்டிருப்பேன். தவளைக்குப் பாம்பையும் பாம்புக்குக் கீரியையும் எலிக்குப் பூனையையும் படைத்தது போலல்லவா எனக்குக் கூத்தரை ஜன்மப் பகைவராய்த் தோற்றுவித்திருக்கிறாய். நான்மனமார அவருக்கு ஒரு தீங்கும் விளைக்காதிருக்கும் போது அவர் ஏன் எப்பொழுதும் புண்ணில் கோலிடுவது போல் என்னை வருத்தித் திருப்தியடைகிறார்? ஔவையும், கம்பரும்— ஏன்? இந்த உலகனைத்துமே என் கவியைக் கேட்டுப் புகழ, இந்தக் கூத்தர் மட்டும் இகழுவதற்கும் என்னைக் கண்டு அசூயை கொள்வதற்கும் நான் அவருக்குச் செய்த தீமைதான் என்ன? நான் இப் பிறவியில் யாருக்கும் எவ்விதத் தீங்கும் செய்ய என் மனத்தாலும் நினைத்தறியேனே! அன்று சோழனுக்குப் பெண் கேட்க வந்தார் பாண்டியன் அவைக்கு. அவையிலேயே பாண்டியனை இழிவுபடப் பாடினார். அப்போது நான் பாண்டியனின் அபிமானப் புலவனாயிருந்தேன். என் உயிர்த் தோழனாகிய பாண்டியனை இழிவுபடுத்திப் பாடியதைப் பொறாமல், பதிலுக்குப் பாடினேன். இது ஒரு குற்றமா? என் கடமையைத்தானே செய்தேன். பின்பு சோழ நாடு*

வந்தபின், புலவர்களைப் பலியிடும் கொடுமையைக் கண்டு என் மனம் குமுறியது. அத்தீச் செயலைத் தடுக்க எத்தனித்ததற்காக என்னைச் சிறைப்படுத்தி வருத்தினார். அவையெல்லாம் கூட எனக்கு வருத்தமாய்த் தெரியவில்லை. ஆனால், சதா அவரால் ஏவப்படும் சொல்லம்பு அல்லவா என் உள்ளத்தைச் சல்லடைக்கண்கள் போல் துளைத்துச் செல்கிறது— இந்நாட்டை விட்டே வேறெங்கேனும் போய் விடலா மென்றாலும் என் அன்புத் தெய்வமாகிய குணவதியின் பாசமல்லவா என் கால்களுக்கு நீங்காத் தளையாக நிற்கிறது?

(சற்று மௌனம்.)

ஆம். அதுதான் சரி! தன்னைக் கொல்ல வரும் பசுவையும் கொல்லலாம். கலாதேவியின் திருக்குமாரர் களாகிய கவிஞர்களையும் புலவர்களையும் பலியிட்டு மகிழ்ந்த இவரைக் கொன்றால் கடவுள் கூட மகிழ்ச்சி யடைவார். ஆம். அவர் இவ்வுலகில் இருக்கும் வரை நான் நிம்மதியுடன் இருக்க முடியாது. இதோ! இதோ! போகிறேன். இன்றிரவுக்குள் அவரை ஒழிக்காமல் விடுவதில்லை.

(செல்லுகிறார்.)

(புகழேந்தி பேசியதையும் செல்வதையும் பதுங்கி யிருந்து கவனித்துக் கொண்டிருந்த இரண்டு வேவுக் காரர்கள் விரைந்து செல்லுகின்றனர்.)

**(திரை.)**

## காட்சி—30

**இடம்**:-கூத்தரின் வீடு. **காலம்**:-இரவு.

(புகழேந்தி ஒரு பெரும் பாறாங்கல்லைச் சுமந்தபடி இருளில் மறைந்து மறைந்து, மெள்ள வருகிறார்.)

புகழேந்தி:- (மெதுவாகத் தனக்குள்) இதுதான் கூத்தரின் இல்லம். வீட்டில் விளக்கெரிகிறது. ஆனால், நிசப்தமாயிருக்கிறது. கூத்தர் இனிமேல் தான் வருவார். வரட்டும். இன்றுடன் அவர் ஆயுள் முடிந்துவிடும். இந்தப் பாறாங்கல் தான்!......இல்லை. அவர் அகம்பாவம் தான் அவருக்கு எமன்.

(யாருக்கும் தெரியாத ஒரு மறைவான இடத்தில் மறைந்து நிற்கிறார். கூத்தரும் தளர்ந்த நடையுடன் முணுமுணுத்துக்கொண்டே வந்து திண்ணையில் அமருகிறார்.)

கூத்தர்:- (தமக்குள்) என்னே! புகழேந்தியின் புலமைத்திறன்! ஆஹா! நினைத்தாலும் நெஞ்சம் புளகமடையும் கற்பனையும் பொருட்செறிவும் சொல்லமைப்பின் அழகும் என் உள்ளத்தையே கொள்ளை கொள்கின்றதே! ஆஹாஹா!!

(உணர்ச்சி மிகுதியில் தம்மை மறந்து பாடுகிறார்).

(வெண்பா)

''கொங்கை யிளநீராற் குளிர்ந்தவிளஞ் சொற்கரும்பாற்
பொங்கு சுழியாம் புனற்றடத்தில்—மங்கைதன்
கொய்தாம வாசக் குழனிழற்கீ ழாறேனோ
வெய்தாமக் காம விடாய்.''

(பாட்டுச் சப்தம் கேட்டு கூத்தரின் மனைவி கதவைத் திறந்துகொண்டு வருகிறாள். கூத்தரின் அயர்வைக் கண்டு திகைக்கிறாள்.)

தேவி:- ஸ்வாமி! ஏன் இப்படித் திண்ணையிலேயே உட்கார்ந்து விட்டீர்கள்? இந்நேரம் வரை இங்கேயே தான் தங்கள் வருகைக்காகக் காத்திருந்தேன். சற்று முன்புதான் கதவை அடைத்துக் கொண்டு உள்ளே சென்றேன். இரவு நாழிகை பத்துக்கு மேல் இருக்குமே? இவ்வளவு நாழிகை வரை உணவு உண்ணாதிருந்தால் உடம்பு கெட்டுப் போகாதா? வாருங்கள் அமுதுண்ண லாம்.

(கூத்தர் மௌனமாகப் புன்னகை செய்கிறார்.)

ஸ்வாமி! ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள்? தங்களுக்குப் பசிக்கவில்லையா? வாருங்கள்? உள்ளே போகலாம்.

(மீண்டும் பைத்தியம் போல் சிரித்துவிட்டுப் பார்க்கிறார்.)

கூத்தர்:-

(வெண்பா)

''இற்றது நெஞ்ச மெழுந்த திருங்காதல்
அற்றது மான மழிந்ததுகாண்—மற்றினியுன்
வாயுடைய தென்னுடைய வாழ்வென்றான் வெங்காமத்
தீயுடைய நெஞ்சுடையான் றேர்ந்து.''

தேவி:- ஸ்வாமி! இதோ என்னைப் பாருங்கள். நான் அழைப்பது தங்களுக்குத் தெரியவில்லை? இந்நேரத்தில் என்ன இப்படி ஏதேதோ பாடுகிறீர்கள்?

கூத்தர்:- சீ, முட்டாள். ஏதேதோவா பாடுகிறேன்? அற்புதமான கவிதைகள்! நினைத்தாலும் இனிக்கும் நிகரற்ற கவிதைகள்! தமிழ்த்தாயின் தவப்புதல்வர் புகழேந்தியின் பொன் மொழிகள். ஆஹாஹா! நினைக்கும் போதெல்லாம் என் நெஞ்சம் பரவசமாகிறது!

தேவி:- இருக்கட்டும்; ஏதேனும் கொஞ்சம் ஆகாரம் உண்ட பின்பு பாடிக்கொண்டிருக்கலாம். வாருங்கள். நிசி வேளையாகப் போகிறது.

கூத்தர்:- தேவி! எனக்குப் பசியில்லை; என்னைத் தொந்தரவு செய்யாதே.

தேவி:- பசியில்லையா? இரவு இத்தனை நாழிக்குப் பிறகு கூடவா பசியில்லை? இரவில் பட்டினியாய்ப் படுக்கக் கூடாது. முடிந்தவரை கொஞ்சம் பாலும் பழமுமாவது சாப்பிடலாம்; வாருங்கள்.

கூத்தர்:- தேவி! பாலும், பழமும், தேனும் அல்ல! இப்போது நீ அமுதத்தையே கொடுத்தாலும் கூட எனக்கு இனிக்காது. புகழேந்தியின் தமிழமுதம் என் உள்ளமெல்லாம் நிறைந்திருக்கிறது. புலனெல்லாம் குளிர்ந்திருக்கிறது.

தேவி:- சாப்பிட முடியாவிட்டால், உள்ளேயாவது வரக் கூடாதா? இந்நேரத்தில் இந்தக் காரிருளில், வெளியே உட்கார்ந்திருக்கலாமா?

கூத்தர்:- தேவி! தேவி! என்ன சொன்னாய்? காரிருளில் ஆமாம் கா...ரி...ரு...ளி...ல்...காதலி...யை—ஆமாம்; ஆமாம்.

(பாடுகிறார்)

(வெண்பா)

**"காதலியைக் காரிருளிற் கானகத்திற் கைவிட்ட**
**பாதகனைப் பார்க்கப் படாதென்றோ—நாதம்**
**அளிக்கின்ற ஆழிவா யாங்கலவ னோடி**
**ஒளிக்கின்ற தென்னோ வுரை"**

தேவி:- உங்கள் ஜன்மப் பகைவரென்று எப்போதும் தூற்றிக் கொண்டிருக்கும் புகழேந்தியின் பாடலையா இவ்வளவு புகழுகிறீர்கள்!

கூத்தர்:- ஜன்மப் பகைவன். ஆம். ஆத்திரத்தால் முன் கோபத்தால்—பொறாமையால் கற்றறிந்த உயர்ந்த தமிழ்ப் புதல்வனைப் பகைவனென்று நினைத்தேன். வசை செய்தேன். சிறையிலிட்டு வருந்தினேன். பலர் முன்னி லையில் இழிவு செய்யவும் முயன்றேன். ஆனால், புகழேந்தியின் பொறுமையும் உயர்ந்த புலமையும் என்னை அவருக்கு அடிமையாக்கிவிட்டது. அமுதத் திலும் இனிமை நிறைந்த அவருடைய கவிதைகள் என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டன. இதை பகிரங்கமாய் ஒப்புக் கொள்ள என் மனம் பின் வாங்குகிறது. நான்

செய்த துரோகங்களுக்கெல்லாம் அவரிடம் மன்னிப்புப் பெறவேண்டுமென்று நினைக்கிறேன். ஆனால் அடுத்த விநாடியே என் கோழைத்தனமும், அகங்காரமும் அதைத் தடுத்துவிடுகின்றன. பேய்க்கும் குரங்குக்கும் ஒப்பிடும் இந்த மனத்தின் விசித்திரமே விசித்திரம்.

புகழேந்தி:- (ஆச்சரியத்துடன் தனக்குள்) என்ன ஆச்சரியம்! கூத்தரா இப்படிப் பேசுகிறார்? கூத்தரா என் பாடலைப் பற்றி இவ்வளவு வியந்தும் உயர்த்தியும் பேசுகிறார்? நான் கனவு காண்கிறேனா? அல்லது இடம் தவறி வந்து விட்டேனா?

(சற்று கூர்ந்து பார்க்கிறார்.)

இல்லை இல்லை. சரியான இடம்தான். கூத்தரேதான்! என்னைப் புகழ்ந்து பேசுகிறார். ஐயோ! உதட்டில் பகைமையும் உள்ளத்தில் நட்பும் கொண்டுள்ள இந்த உத்தமரையா நான் கொல்லத் தீர்மானித்தேன்.

(பாறாங்கல்லைப் போட்டுவிட்டு வெறி கொண்டவரைப் போல் அலறிக்கொண்டு ஓடிப்போய் கூத்தரைத் தழுவுகிறார்.)

அன்பரே! அன்பரே! என்னை மன்னியுங்கள். தங்கள் உள்ளத்தின் உண்மையறியாது தங்களைக் கொலை செய்ய வந்த இந்தச்சண்டாளனை மன்னித்து விடுங்கள். முன்பின் யோசியாமல் எவ்வளவு பெரிய தீங்கிழைக்க இருந்தேன்?

(திகைப்படைந்த கூத்தர் புகழேந்தியை மார்புறத் தழுவிக்கொள்கிறார்.)

கூத்தர்:- புலவரே! இது என்ன வேடிக்கை? இந்நேரத்தில் இங்கு எப்படி வந்தீர்கள். நான் எதற்காகத் தங்களை மன்னிக்க வேண்டும்?

புகழேந்தி:- கூத்தரே நான் பாவி. தங்கள் உள்ளத்தின் தூய்மையறியாது கொலை செய்ய வந்தேன். கொடியோனான என்னை மன்னிப்பீர்களா? என்னை மன்னிப்பீர்களா?

கூத்தர்:- நண்பரே! பதறாதீர். வாருங்கள்; இப்படி உட்கார்ந்து விஷயத்தை விவரமாகச் சொல்லுங்கள்.

(உள்ளழைத்து மனைகொடுத்து அமரச் ீ செய்கிறார்.)

புகழேந்தி:- அன்பரே! இல்வுலகில் இதுவரை நான் யாரையும் பகைவராகக் கருதியதில்லை. தாங்கள் சோழனுக்குப் பெண் கேட்க வந்தபோதும்கூடத் தங்களிடம் எனக்குத் துவேஷம் தோன்றியதில்லை. ஆனால், கம்பரும் ஔவையும் மற்றுமுள்ள புலவர்களும் புகழும் என் காவியத்தைத் தாங்கள் இகழ்ந்து தூற்றுவதைக் கண்டு என் உள்ளம் கொதிப்படைந்தது. கவிதையியற்றுவதிலும் காவியம் இயற்றுவதிலும் உள்ள கஷ்டங்களனைத்தும் தெரிந்த ஒரு புலவரே என் கவிதையை இகழ்வதைக் கண்டு என் உள்ளம் வெறி கொண்டது. அறிவு மழுங்கியது. தாங்கள் இருக்கும் வரை நான் நிம்மதியுடன் இருக்க முடியாதென்ற முடிவு தோன்றியது. உடன் உங்களை இன்றிரவு கொன்று தீர்த்து விடுவதென்ற தீர்மானத்திலேயே இந்நேரத்தில் இங்கு தனித்து வந்தேன். இதோ! இதோ

பாருங்கள். தாங்கள் உறங்கும்போது தங்கள் தலையில் போட்டுக் கொல்வதற்காகக் கொண்டுவந்த பாறாங் கல்லைப் பாருங்கள்!

கூத்தர்:- ஆம் ஆம்; நான் செய்த தீமைகளுக்கு என் தலையில் இப்பாறையைப் போட்டாலென்ன! சித்திரவதைகூடச் செய்யலாம். அதனால் உமக்குப் பாவமே இல்லை.

புகழேந்தி:- நண்பரே! நண்பரே! இனியும் என்னை வதைக் காதீர்கள். தங்கள் மனமார என்னை மன்னித்தே னென்று ஒரு வார்த்தை சொல்லுங்கள்.

கூத்தர்:- அன்பரே! இதென்ன வேடிக்கை! எண்ணற்ற கொடுமைகளைச் செய்த கல்நெஞ்சனாகிய என்னைத் தாங்களல்லவா மன்னிக்க வேண்டும்?

புகழேந்தி:- ஆம். நாம் இருவரும் ஒருவர் உள்ளத்தை ஒரு வருக்குத் திறந்து காட்டிப் பரிசுத்தமாக்கிக் கொண்டு விட்டோம். இனி நாம் உலகில் உள்ளவரை ஒருயிரும் ஈருடலுமாய் ஒன்றுபட்டுத் தமிழ் தாய்க்குத் தளராது தொண்டு செய்வதற்காகவே கலாதேவி தங்கள் தேவி யின் ரூபத்தில் வந்து நம்மைக் கூட்டி வைத்தாள் போலும். சமயத்தில் தங்கள் தேவியார் தங்களை அமுதுண்ண அழைத்திராவிடில் சண்டாளனாகிய நான் தங்கள் தலையில் இக் கல்லைப் போட்டுக் கொன்று கொடிய பாவத்தைத் தேடிக்கொண்டிருப்பேன். தங் களை மரணத்திலிருந்தும் என்னைக் கொலை பாதகத் திலிருந்தும் விடுவித்துத் தம்மையும் வைதவ்யத் திலிருந்து காப்பாற்றிக் கொண்ட தங்கள் தர்மப் பத்தினி மகா உத்தமி! நம் உள்ளத்தின் மாசு நீக்கி மடமையைப்

போக்கி அன்பொளி தேக்கி ஆனந்தமுண்டாக்கிய அருள் தெய்வம் தங்கள் மனைவிதான். (தேவியை நோக்கி) அன்னையே! பெண்மையின் சக்திதான் உலகத்தை உண்டாக்குகிறது. இன்பம், எழில், கருணை, சாந்தம், தயை, அன்பு, பொறுமை ஆகியவைகளுக்கெல்லாம் உறைவிடம் தான் பெண்கள் என்று மறைகள் சொல்லுகின்றன. அதை முதலில் குணவதியிடத்தும், இன்று தங்களிடத்தும் காணுகிறேன். நான் இழைக்க இருந்த மகத்தான தவறுக்கு என்னை மன்னித்தேனென்று தாங்களாவது ஒரு வார்த்தை சொல்லுங்கள். அப்போது தான் என் மனம் நிம்மதியடையும்.

தேவி:- ஸ்வாமி! எல்லாம் இறைவனின் சித்தப்படி நடைபெறும். நான் அபலை. கல்வியறிவு நிரம்பப் பெறாதவள். தாங்கள் கலைக்கடல். தங்களைப் போன்ற கலைவாணர்களின் நட்பைப் பெற்று என் கணவர் நீண்ட நாள் வாழவும் அவர் அடியிணைகளுக்கு தொண்டு செய்து வாழவும் ஏழையாகிய என்னை ஆசீர்வதியுங்கள்.

புகழேந்தி:- அம்மையே! கற்பின் பூஷணமாகிய தங்களைக் கடவுள் காப்பாற்றுவார்.

தேவி:- ஸ்வாமி! இன்றுதான் முதன் முதலாக எங்கள் இல்லத்திற்கு வந்திருக்கிறீர்களாகையால், தாங்கள் இன்று எங்கள் இல்லத்திற்கு விருந்தினர், அமுது தயாராயிருக்கிறது. இதோ வட்டிக்கிறேன்; அமருங்கள்.

கூத்தர்:- உள்ளம் ஒன்றுபட்டு அன்பால் பிணிக்கப்பட்ட பிறகுமா புகழேந்தியை விருந்தாளி என்று சொல்லுகிறாய்? இல்லை. அவர் இனி நம்மில் ஒருவர்.

புகழேந்தி:- புலவரே! அம்மையார் சொல்வதுதான் சரி! தங்கள் மூலம் சோழனுக்குப் பெண் கொடுத்த சம்பந்தியல்லவா! நான். எனக்கு விருந்து செய்யக் கடமைப்பட்டவர்கள் தானே நீங்கள்?

(இருவரும் சிரிக்கிறார்கள்.)

(இதுவரை இவையனைத்தையும் மறைந்திருந்து கவனித்துக் கொண்டிருந்த குலோத்துங்கனும், உதயணரும் மனம் மகிழ்ந்து முன் வருகின்றனர்.)

குலோத்து,- விருந்துக்கு நாங்களும் வந்து விட்டோம். (புகழேந்தியிடம்) மாப்பிள்ளைக்குத் தெரியாமலே சம்பந்தி வீட்டில் திருப்தியாய் விருந்து சாப்பிட்டு விடலாமென்றா நினைத்தீர்கள்? அதுதான் முடியாது. பார்த்தீர்களா! நீங்கள் அழைக்காமலே விருந்துக்கு நாங்கள் வந்துவிட்டோம்.

(அந்நேரத்தில் அங்கு வந்த அரசனையும் உதயணரையுங் கண்ட மூவரும் திகைத்து நிற்கிறார்கள்.)

கூத்தர்:- அரசே! இதென்ன ஆச்சரியம்! எல்லாம் எதிர் பாராத சம்பவங்களாக வல்லவா் இருக்கிறது. இந்த அகாலத்தில் கால் நடையாக இருளையும் பொருட் படுத்தாமல் இச்சிறு குடிசைக்கு எழுந்தருளியதற்கு......?

குலோத்:- காரணம்தானே? அதுதான் முன்பே சொன்னேனே. புகழேந்திப் புலவருக்குத் தாங்கள் நடத்தும் சம்பந்தி விருந்தில் கலந்துகொள்வதற்குத் தான் வந்தோமென்று.

புகழேந்தி:- இல்லை. நீங்கள் எப்படியோ உளவறிந்து தான் இங்கு வந்திருக்கவேண்டும். ஆனால், இப்போது அதை மறைக்கிறீர்கள்,

குலோத்:. இல்லை; இதில் மறைக்காவண்டிய ரகசியம் எதுவுமே இல்லை. கூத்தர் ஆதிமுதல் உங்களுக்கு இடையூறாயிருந்ததைச் சகியாமல், தாங்கள் கூத்தரைக் கொலை செய்யத்தீர்மானித்துப்புறப்பட்டவரை வேவுக்காரர்களால் அறிந்துதான் இங்கு வந்தேன். ஆனால், முடிவு வேறு விதமாய் நிகழ்ந்ததைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். கூத்தர் கொலை செய்யப் படாவிடினும் கூத்தரைக் கொலை செய்ய முயற்சித்த குற்றத்திற்காகத் தங்களை......!

(புன்சிரிப்புடன் கண்ணைச் சிமிட்டிக் கொள்ளுகிறார்.)

புகழேந்தி:- ஆம் நான் குற்றவாளிதான். கூத்தரின் உள்ளன்பைக் காண முடியாத உன்மத்தன், கொலைகாரன், கொடிய பாவி நான். குற்றம் மன்னிக்க முடியாத குற்றம் தான். அதற்காக எந்தத் தண்டனையும் ஏற்றுக்கொள்ளத் தயார்.

கூத்தர்:- இல்லை; குற்றவாளி தாங்களல்ல; தாங்கள் என்னை ஒரே முறை கொலை செய்ய நினைத்தீர்கள். ஆனால் நான் தங்களை வாழ்க்கையெல்லாம் கொலை செய்தேன். எறும்புக்கும் இன்னல் விளைக்கச் சகியாத தங்கள் உள்ளத்தை சதா புண்படச் செய்தேன். பொறாமையால் அரசரையும் தூண்டித் தங்களைச் சிறையிடச் செய்தேன். ஆகையால், நியாயப்படி தண்டனையடைய வேண்டியவன் நானே.

குலோத்:- உங்கள் வாக்குமூலத்தின்படி நீங்கள் இருவருமே குற்றவாளிகள்தாம்! ஆகையால் இந்நாட்டு மன்னன் என்ற முறையில் நான் அளிக்கும் தண்டனையை நீங்கள் இருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். (சிரித்து கண்களைச் சிமிட்டி) என்ன உதயணரே!

உதயணர்:- (புன்சிரிப்புடன்) ஆமாம்; அரசர் ஆக்ஞையை மீற முடியுமா? குற்றவாளிகள் தண்டனைக்குக் கட்டுப் பட்டுத் தானே ஆகவேண்டும். ஆனால்...! தண்டனை என்னவென்பது தெரியவேண்டாமா?

குலோத்:- தண்டனையா! அவர்கள் இருவரும் பரஸ்பரம் ஒருவர் மனச்சிறையில் மற்றவர் வாழ்க்கை யெல்லாம் அடைப்பட்டிருக்க வேண்டும்.

(புலவர்கள் இருவரும் ஆச்சரியத்தோடு அரசனைப் பார்க்கிறார்கள்.)

உதய்ணர்:- (சிரித்து) இதுதான் தங்கள் தண்டனையா?

குலோத்:- இல்லை; இன்னுமொரு தண்டனையும் இருக்கிறது அவர்கள் இருவரும் சேர்ந்து, உயிருள்ளவரை என்மனச் சிறையிலும் அடைபட்டிருக்க வேண்டும்.

(புலவர்கள் இருவரும் ஆச்சரியமுறுகின்றனர்.)

இரு புலவரும்:- வேந்தே! என்ன மனச்சிறை?

(மகிழ்ச்சி மிகுதியால் கூத்தரும் புகழேந்தியும் அரசரைத் தழுவுகின்றனர். அன்பின் பெருமையை வியந்து எல்லோரும் பாடுகின்றனர்.)

புகழேந்தி:- இந்த மகிழ்ச்சி என்றும் நம்மிடையே நிலவ இறைவன் அருள்புரிய வேண்டும்.

முற்றுப்பெற்றது.

கலைமாமணி கவிஞர்

# கு. சா. கி. யின் பிற நூல்கள்

| | | ரூ |
|---|---|---|
| 1. | **அந்தமான் கைதி** (நாடகம்)<br>(ஏழாவது பதிப்பு) | 6-00 |
| 2. | **இசையின்பம்** (இசைப்பாடல்கள்) | |
| 3. | **கலைவாணன்** (நாடகம்)<br>(இரண்டாம் பதிப்பு) | 15-00 |
| 4. | **தமிழ் நாடக வரலாறு**<br>(பல்கலைக் கழகச் சொற்பொழிவு)<br>வானதி பதிப்பக வெளியீடு | 10-00 |
| 5. | **பருவ மழை** (கவிதைகள்)<br>வானதி பதிப்பக வெளியீடு | 10-00 |
| 6. | **என் காணிக்கை** (நாடகம்) அச்சில் | |
| 7. | **அமுத தமிழிசை** (இசைப்பாடல்கள்)<br>இசையமைப்பு சுரதாளக் குறிப்பு:<br>கலைமாமணி குருவாயூர் பொன்னம்மாள் | 15-00 |
| 8. | **அருட்பா இசையமுதம்**<br>இராமலிங்கசுவாமிகள் பாடல்கள்<br>தொகுப்பாசிரியர் : கு. சா. கி.<br>இசையமைப்பு சுரதாளக் குறிப்பு:<br>கலைமாமணி குருவாயூர் பொன்னம்மாள் | 15-00 |
| 9. | **இதயக் குமுறல்**<br>மகன் அசோகன் மறைவு குறித்து<br>கவிஞரின் இரங்கற்பா | |


கிடைக்குமிடம் :

## பூங்கொடி பதிப்பகம்

சித்திரக்குளம் மேற்கு
மயிலாப்பூர், சென்னை-600004.



# அந்தமான் கைதிக்கு அறிஞர் புகழ்மாலை

சமுதாயத்தில் நிகழும் கொலை நிகழ்ச்சிகளுக்குச் சாட்சியங்களின் நிருபணங்களைக்கொண்டே தீர்ப்பு வழங்குவது ஞாயமா? என்ற சந்தேகத்தை எழுப்புகிறது, இந்நாடகம்!

கோவை மாவட்ட நீதிபதி C S. சௌத்திரி அவர்கள்

சமூகக் கண்விழிப்பிற்குத் தூண்டுகோலாகிய நடைச் சித்திரம் இந்நாடகம்! —எப். ஜி நடேசய்யர் அவர்கள்

சமுதாயக் குறைபாடுகளை அழகாகவும், நிதானமாகவும் எழுதியிருக்கிறீர்கள். நாடகத்தைப் படிக்கும்போதே—மேடையில் நடிப்பதைப் பார்ப்பது போன்ற உணர்வைத் தூண்டுகிறது!

—அறிஞர். வெ. சாமிநாத சர்மா அவர்கள்

கலைக்காகவே கலை, என்பது வீண் பேச்சு. இருட்டில் விளக்கை ஏந்துவது இருளை நீக்கத்தானே, "அந்தமான் கைதி" கலையழகுள்ள ஒரு அருமையான பிரசார நாடகம். —பாவேந்தர். அவர்கள்

நாடக லட்சணங்கள் அனைத்தும் அமையப் பெற்றது "அந்தமான் கைதி" —அறிஞர். வ ரா. அவர்கள்

அன்பர் கு. சா. கி. அவர்களின் அந்தமான் கைதி என் உள்ளத்தைத் தொட்டீர்த்த ஏடுகளில் ஒன்றாகும் —அறிஞர். அண்ணா அவர்கள்

"அந்தமான் கைதி" நாடகத்தை மிகவும் மெச்சத் தக்க வகையில் எழுதியுள்ள ஸ்ரீ கு. சா. கி. அவர்களை என் மனமார வாழ்த்துகின்றேன்.

நாமக்கல் கவிஞர்

நாடகப் பேராசிரியர் திரு. சம்பந்த முதலியார் அவர்களுக்குப்பிறகு நானறிந்த வரையில் அப்படியே மேடையேற்றத்தக்க ஒரு சிறந்த நாடகத்தை வெளியிட்ட பெருமை தோழர் கு சா கி. அவர்கட்கே உரியது.

—ஔவை டி. கே. சண்முகம் அவர்கள்

இந் நாடகம் நல்ல விறு விறுப்பான நடையில் முதலிலிருந்து கடைசிவரை மனதைக் கவர்ந்த வண்ணம் செல்கிறது.

வித்வான். திரு. சிதம்பரநாதச் செட்டியார்

நாடகாசிரியனின் நற்கலைப் புலமைப் பீடு பெற்றுள்ளது பேசவும் வேண்டுமோ? காலம் போற்றும் கதையிது போலச் சால வேண்டும் தமிழகத்திற்கே! —கவி. ஆறுமுகனார் அவர்கள்